# தெளிக்கப்படும் இரத்தம்

ATB_2023.indd 1 2/26/2024 4:20:38 PM

டெரிக் பிரின்ஸ்

# தெளிக்கப்படும் இரத்தம்

## இயேசுவின் வாழ்வு மற்றும் பலியின் வல்லமையை எப்படி கட்டவிழ்ப்பது

*Derek Prince Ministries - India*

ATB_2023.indd 3 2/26/2024 4:20:38 PM

**"THELIKKAPADUM RATHTHAM"**

© 2010 Derek Prince Ministries - International

Printed by Derek Prince Ministries

All rights reserved.

TAM-ATB/3000/0324/SL

ISBN 978-93-92947-14-8

"APPLYING THE BLOOD" (Tamil)
"THELIKKAPADUM RATHTHAM"

Published by permission in the Tamil language.

No part of this book may be reproduced or transmitted in any form or by any means, electronic or mechanical, including photocopying, recording, or by means of any information storage and retreival system, without permission in writing from the publisher.

For orders & other enquiries please contact :

**DEREK PRINCE MINISTRIES - INDIA**

C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201/03

Derek Prince
MINISTRIES INDIA

ATB_2023.indd 4 2/26/2024 4:20:39 PM

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முன்னுரை | | 07 |
| அத்தியாயம் 1 | ஜீவனை எடுக்கிறவன் மற்றும்; ஜீவனைக் கொடுப்பவர் | 11 |
| அத்தியாயம் 2 | தேவனுடைய அன்பின் அளவு | 23 |
| அத்தியாயம் 3 | மீட்பின் கிரயம் | 39 |
| அத்தியாயம் 4 | ஏழு மடங்கு தெளித்தல் | 47 |
| அத்தியாயம் 5 | இரத்தத்தில் உயிர் உள்ளது | 57 |
| அத்தியாயம் 6 | இரத்தத்தை சுதந்தரிப்பது எப்படி | 69 |
| அத்தியாயம் 7 | பஸ்கா சடங்கு | 77 |
| அத்தியாயம் 8 | ஒரு தனிப்பட்ட பயன்பாடு | 85 |
| அத்தியாயம் 9 | மீட்பு | 89 |
| அத்தியாயம் 10 | சுத்திகரிப்பு | 101 |
| அத்தியாயம் 11 | நீதிமானாக்கப்படுதல் | 109 |
| அத்தியாயம் 12 | பரிசுத்தமாக்கப்படுதல் | 123 |
| அத்தியாயம் 13 | ஜீவன் | 139 |
| அத்தியாயம் 14 | பரிந்து பேசுதல் | 149 |
| அத்தியாயம் 15 | திடநம்பிக்கையுடன் பிரவேசித்தல் | 155 |
| அத்தியாயம் 16 | முடிவுரை | 165 |


ATB_2023.indd 5 2/26/2024 4:20:39 PM

ATB_2023.indd 6 2/26/2024 4:20:39 PM

# முன்னுரை

அநேக கிறிஸ்தவர்கள் "இரத்தத்தில் வல்லமை" என்ற வார்த்தகளுக்கும். "வல்லமை உண்டு, உண்டு, அற்புத வல்லமை, ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்" என்ற பழங்காலத்து எழுப்புதல் கீதத்திற்கும் அறிமுகமானவர்கள். ஒவ்வொரு விசுவாசியும் அவ்வார்த்தைகளினுள் திகழும் மகத்தான ஆவிக்குரிய சத்தியங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும். ஆனால் நாம் அதை அறிந்திருக்கிறோமா? தெளிக்கப்படும் இரத்தம், என்ற இப்புத்தகத்தில், டெரிக் பிரின்ஸிடமிருந்து ஒரு நல்ல அஸ்திபாரத்தை நாம் பெறுகிறோம் – இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் இயற்பியல் முக்கியத்துவத்தின் ஒரு விரிவான வெளிப்பாடு மட்டுமல்ல, அதை நம் வாழ்வில் பயன்படுத்துவதைக் குறித்ததான ஒரு வழிகாட்டு கையேடும் கூட.

இத்தலைப்பை டெரிக் பிரின்ஸ், ஒரு மிகுந்த ஆச்சரியம் மற்றும் கனத்தின் உணர்வோடு முதலாவது அணுகியுள்ளார். இது ஏன் அவசியம் மற்றும் ஏற்றதாக இருக்கிறது?

அது ஏனென்றால் டெரிக் இப்புத்தகத்தில் கூறுவதுபோல கிறிஸ்துவின் சரீரமாகிய சபை முழுவதிலும் இப்பொருளை குறித்த திடமான வேத போதனையைக் காண்பது எளிதல்ல. கிறிஸ்தவர்களின் பொதுவான உரையாடல்களில் அடிக்கடி இயேசுவின் இரத்தத்தை குறித்துப் பேசுவதை நாம் கேட்கலாம். ஆனால் அதின் முழுமையான தாக்கத்தையோ நம்முடைய வாழ்க்கை மற்றும் விசுவாசத்தில் அதின் செயல்பாட்டையோ எத்தனைபேர் முழுமையாக புரிந்துகொண்டுள்ளோம்?

இத்தலைப்பை நாம் ஆராய்வதற்கு இன்னுமொரு முக்கிய காரணம் என்னவெனில், அநேக கிறிஸ்தவ பாரம்பரியங்கள், “இரத்தத்தை மன்றாடுகிறேன்“ அல்லது “இரத்தத்தின் கீழ் மறைக்கிறேன்“ அல்லது “இயேசுவின் இரத்தத்தால் மூடப்படுதல்“ என்ற சொல் தொடர்களை தொடர்ந்து பயன்படுத்துகின்றனர். சில நேரங்களில், அது சாதாரணமான அல்லது மந்தமான வார்த்தையாக மாறும் அளவு பயன்படுத்துகின்றனர். ஆனால், டெரிக் சுட்டி காண்பிப்பதுபோல, நம்முடைய இரட்சகரால் சிந்தப்பட்ட இரத்தம் எவ்விதத்திலும் சாதாரணமானது அல்ல.

மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவின் பலியும் – தம்முடைய கட்டுக்கடங்கா அன்பில் அவர் சிந்திய தம்முடைய இரத்தத்தின் வல்லமையும் – அசாதாரணமான மற்றும் தனித்துவமானதாக இருந்தது, இன்னும் இருக்கிறது. இப்புத்தகத்தில் முன்வைக்கப்பட்டுள்ள வேதாகம நடைமுறைகளைப் பயன்படுத்தி அந்த வல்லமையை நம்முடைய வாழ்க்கைக்கு அப்பியாசிக்கும்போது, இன்னும் அதிகமாக அது வெளிப்படும். இப்போதனை விரிவடையும்போது, அவருடைய அந்த இரத்தத்தின் வழிந்தோடுதலின் ஆழமான முக்கியத்துவத்தால் நீங்களும் மரியாதை, பிரமிப்பு மற்றும் ஆச்சரியத்தின் உணர்வினால் நிரப்பப்படுவீர்கள் என நம்புகிறோம்.

ATB_2023.indd 8 2/26/2024 4:20:39 PM

“இரத்தம்” அல்லது “இரத்தத்தைப் பயன்படுத்துதல்” குறித்த எந்த ஒரு குறிப்பும் ஓரளவு அசௌகரியத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை டெரிக் அங்கிகரித்தார். இரத்தத்தைத் தெளித்தல் புத்தகத்தின் ஒரு பகுதியில் அவர் “இரத்தத்தைக் குறித்து எப்போதுமே அருவருப்பான சில காரியங்கள் இருக்கிறது. நான் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஒரு மருத்துவ பணியாளராக அதிகமான இரத்தத்தை கண்டேன். ஆனால் ஏழு அல்லது எட்டு வயது சிறுவனாக இரத்தத்தை கண்டால், அது என்னை உணர்ச்சிப்பூர்வமாக பாதித்ததென்று எனக்கு நினைவுள்ளது. அந்த எதிர்வினையை கடந்து நான் வளர்ந்துவிட்டாலும் இன்னமும் இரத்தத்தை ஜீவன் மற்றும் மரணத்திற்கு அடுத்த விஷயமாக இருக்கிறது” என கூறினார்.

டெரிக்கின் அந்த நேர்மையான அங்கீகாரத்தை நாம் பாராட்டலாம். அப்படி கூறியும், இத்தலைப்பை குறித்த எந்த வெறுப்பையும் கடந்து நாம் விடாமுயற்சியுடன் இதைப் பயன்படுத்த வேண்டும் என கூறினார். நாம் இப்புத்தகத்தை வாசித்து, இரத்தத்தை தெளித்தல் என்ற அந்த செயலில் ஈடுப்படும்போது, நாம் பெற வேண்டும் என்று டெரிக் விரும்பும் இலக்கு இதுதான் -- “இப்போதனையில் என்னைப் பின்பற்றி வருவீர்களானால் இயேசு மூலமாயும், அவர் நமது சார்பாக சிந்தின இரத்தத்தின் மூலமாயும், நமக்கிருக்கும் ஜீவனுக்குள் ஒரு புதிய உட்பார்வையயை நீங்கள் பெறுவீர்கள் என விசுவாசிக்கிறேன்”.

- டெரிக் பிரின்ஸ் ஊழியங்களின் சர்வதேச வெளியீட்டு குழு

ATB_2023.indd 9 2/26/2024 4:20:39 PM

# அத்தியாயம் 1
# ஜீவனை எடுக்கிறவன் மற்றும்; ஜீவனைக் கொடுப்பவர்

தெளிக்கப்படும் இரத்தம் என்ற இப்புத்தகத்தின் தலைப்பை நான் அறிமுகம் செய்கையில் இயேசுவை ஜீவனைக் கொடுப்பவராக நான் கவனிக்க விரும்புகிறேன் – ஜீவனைக் கொடுப்பவர் அவரே. வேதாகமத்தில் குறிப்பாக யோவான் சுவிசேஷத்தில் இரண்டு எதிர்மறையான நபர்களை தெளிவாக விவரிக்கிறது. ஒருவன் ஜீவனை எடுக்கிறவன், மற்றொருவர் ஜீவனைக் கொடுப்பவர். நீங்களும் நானும் இருவரையும் அடையாளம் காண வேண்டும் – ஜீவனை எடுக்கிறவனின் கிரியைகளை எதிர்த்துத ஜீவன் கொடுக்கிறவரின் பிரசன்னத்தையும் வல்லமையையும் பெற்றுக் கொள்ள அறிந்திருக்க வேண்டும்.

இக்கருத்தைக் குறித்த ஆய்வை இயேசு யோவான் 10:10ல் பேசின வார்த்தைகளை ஆராய்வதின் மூலம் துவங்கலாம்:

**திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வாரான் நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.**

இந்த வசனம் தெளிவாக உலகத்தில் செயலாற்றும் இரண்டு எதிர்மறையான நபர்களைக் குறித்து வெளிப்படுத்துகிறது – திருடவும், கொல்லவும் அழிக்கவும் வரும் திருடன்: மற்றும் ஜீவனைக் கொடுக்கவும் அதைப் பரிபூரணமாக கொடுக்கவும் வரும் இயேசு.

## ஜீவனை எடுக்கிறவன்

திருடன் யார்? அவனுடைய அடையாளத்தைக் குறித்து உங்களுக்கு சற்றும் சந்தேகம் இருக்காது. அவனைக் குறித்து இயேசு அடிக்கடி பேசி போதித்தார் – ஒரு தீவிரமான பொல்லாத நபர் – பிசாசு அல்லது சாத்தான் என்று அழைக்கப்பட்டவன். அவன்தான் ஜீவனை எடுக்கிறவன். அவன் உண்மையான ஒரு நபர் என்று நாம் அங்கீகரிப்பது அவசியம் – அவன் ஒரு மத புராணம் அல்லது பாரம்பரியத்தில் உள்ளவன் அல்ல, மாறாக அவன் ஒரு உண்மையான ஆவிக்குரிய தளத்தின்; நபர்.

அமெரிக்க சுவிசேஷகராகிய ஓரல் ராபர்ட்ஸ் கூறுவதை மறுபடியும் சொல்வது நல்லது: “பிசாசிடம் நன்மை ஒன்றும் இல்லை, தேவனிடம் தீமை எதுவும் இல்லை.” அவ்விரண்டு வார்த்தைகளும் ஒரே பொருளை உடைய வார்த்தைகள் அல்ல. ஒவ்வொன்றுக்கும் குறிப்பிட்ட முக்கியத்துவம் உண்டு.

## திருட

பிசாசு திருட வருகிறான் – அதாவது தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்ட யாவையும் அவன் எடுத்துக்கொள்ள விரும்புகிறான்.

தேவன் நமக்கு வழங்க விரும்பும் ஒவ்வொரு நன்மையையும் எடுத்துப்போடுவது அவனுடைய நோக்கம். அந்த நன்மைகள் என்ன? நம்முடைய குற்றமின்மை, நம்முடைய நேர்மை, நம்முடைய மன சமாதானம், நம்முடைய ஆரோக்கியம் மற்றும் நம்முடைய குடும்பங்களில் மற்றும் இல்லங்களில் உள்ள சந்தோஷம் பிசாசு வரும்போது இவை அனைத்தையும் திருடும் எண்ணத்தோடுதான் வருகிறான்.

பிசாசு உங்களிடம் அதிகம் திருடபெற்ற நபரா நீங்கள்? ஒரு வேளை இந்த கேள்விக்கான பதிலை நீங்கள் சிந்திக்கையில் உங்களுக்கு மன சமாதானம் மற்றும் தனிப்பட்ட அடையாளத்தைக் குறித்த உணர்வு இல்லை என்பதை நீங்கள் உணரலாம். உண்மையில் நீங்கள் கலகத்தையும், பாதுகாப்பின்மையையும் கடந்து வந்திருக்கலாம். இதற்குக் காரணம் யார் என்று நீங்கள் அறியாமல் இருந்திருக்கலாம். உங்கள் இழப்புகளுக்கெல்லாம் காரணம் பிசாசுதான் – அவனே திருடன்.

## கொல்ல

சாத்தான் திருட வருகிறவன் மட்டுமல்ல அவன் கொல்ல வருகிறான். அவன் கொலைக்காரன். நம்மை சரீர பிரகாரமாக அழிக்க வருகிறான். அநேகம் மக்கள் தங்களுக்கு தேவனால் நியமிக்கப்பட்ட காலத்திற்கு முன் பிசாசால் கொல்லப்பட்டு மரிக்கிறார்கள். மதுபானம் மற்றும் போதை மருந்துகள் காலத்திற்கு முன் மக்களை கொலைசெய்யும் சாத்தானின் யுக்திகளில் இரண்டு. மதுபானம் பண்ணுகிறவர்களும் போதைப்பொருள் உட்கொள்ளுகிறவர்களும் தங்கள் முழு நாட்களையும் வாழ்ந்து முடிக்க மாட்டார்கள். பிசாசு மக்களைக் கொல்லும் இன்னொரு விதம் – புகைப்பிடிப்பவர்கள், புகைப்பிடிக்காதவர்களை விட குறைவான நாட்களே வாழ்வார்கள் என்பது உறுதிசெய்யப்பட்ட ஒரு மருத்துவ உண்மை. அதற்கும் மேல் புகைப்பிடிப்பவர்கள் மாரடைப்பு நுரையீரல் புற்றுநோய் போன்ற இதர வியாதிகளுக்கும் அதிக வாய்ப்புள்ளவர்கள் ஆவார்கள்.

நீங்களும் நானும் ஒரு கொலைகாரனை எதிர்க்கிறோம். அவன் மக்களை பித்தம் பிடித்தலின் பயம், வெறுப்பு, கசப்பு மற்றும் மன்னியாததன்மை போன்ற வேதனைகளால் உளவியல் ரீதியாக கொலை செய்கிறான். இவை அனைத்தும் கொல்லுகிறவைகள். இப்படிப்பட்ட உளவியல் ரீதியான தாக்கங்களுக்கு உட்படுகிறவர்கள் தங்கள் முழு வாழ்நாட்களையும் வாழ்ந்து முடிக்க மாட்டார்கள்.

பாதுகாப்பான உணர்வும் மன அமைதியுமே நல்ல ஆரோக்கியத்திற்கான முக்கியமான நிபந்தனைகள். இத்தன்மைகளை நீங்கள் இழக்கும்போது, நீங்கள் உங்கள் ஆரோக்கியத்தை இழக்கும் பாதையில் இருக்கிறீர்கள். இவைகள் எளிய உண்மைகள். மதம் சார்ந்த உண்மைகள் அல்ல, மாறாக அவைகள் அறிவியல் மருத்துவ உண்மைகள். அனுபவத்தின் அடிப்படையிலான உண்மைகள். இயேசுவின் எச்சரிப்பை நாம் கவனித்தாலொழிய இத்தகைய சரீர மற்றும் உளவியல் தாக்கங்களுக்கு பின்னிருக்கும் நபரின் அடையாளத்தை நாம் புரிந்துக்கொள்ள முடியாது. அவன் ஜீவனை எடுக்கிறவன்.

## அழிக்க

சாத்தான் திருடவும் கொல்லவும் மட்டுமல்ல அழிக்கவும் வருகிறான் என்று இயேசு கூறுகிறார். புதிய ஏற்பாட்டின் இந்த வார்த்தையின் பயன்பாட்டின் வெளிச்சத்தின் அடிப்படையில், இங்கு கூறப்பட்டுள்ள அழிவு தற்காலத்து வாழ்நாட்களைக் கடந்தது என்பதே எனது தனிப்பட்ட நம்பிக்கை. கேஹென்னா என்று அழைக்கப்படும் இடத்தில் ஆத்துமாவையும் சரீரத்தையும் கொல்ல தேவனுக்கு அதிகாரம் உண்டென்று மத்தேயு 10:29ல் வேதம் கூறுகிறது. அது வேதனையின் ஸ்தலம், அக்கினியின் ஸ்தலம் முடிவில்லா துயரத்தின் ஸ்தலம் – சாத்தான் யாருடைய வாழ்வில் நுழைகிறானோ அவர்களை அவ்விடத்திற்கு கொண்டு செல்வதே அவனுடைய இறுதி நோக்கம்.

இவ்வாழ்க்கையில் சரீர பிரகாரமாய், உளவியல் ரீதியாக மற்றும் பொருளாதாரத்தில் மட்டும் உங்களை அழிப்பது சாத்தானின் நோக்கம் அல்ல. உங்களைக் காலத்திற்கு முன் கல்லறைக்குக் கொண்டு செல்வது அவன் நோக்கம் அல்ல. நீங்கள் என்றென்றும் அழிக்கப்பட்டு தேவனுடைய பிரசன்னத்திலிருந்து துரத்தப்பட்டு வேறு யாரும் வேதத்தில் எச்சரித்ததை விட இயேசு எச்சரித்த அவ்விடத்திற்குக் கொண்டுசெல்வதே அவன் நோக்கம். இயேசு மத்தேயு 10:28ல் கூறினார்:

> **ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்படவேண்டாம்: ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்.**

## சாத்தானின் வழிமுறைகள்

சாத்தான் திருடனாக வருகிறான் என்று வேதம் கூறுகிறது. பொதுவாக ஒரு திருடன் தான் யாரென்றோ, ஏன் வந்திருக்கிறான் என்பதையோ அறிவிக்க மாட்டான். அவன் பகல் வெளிச்சத்தில், உங்கள் முன் கதவை தட்டி, நீங்கள் கதவைத் திறந்தவுடன் நான் திருடன். உங்களுக்கு உள்ளதெல்லாவற்றையும் எடுத்துக்கொள்ள வந்திருக்கிறேன்" என்று அறிவிப்பதில்லை. எந்தத் திருடனுக்கும் அப்படி வெற்றி கிடைக்காது. நிச்சயமாக பிசாசும் அந்த வழியை பயன்படுத்துவதில்லை. அவன் யார் என்றும் ஏன் வந்திருக்கிறான் என்பதையும் உங்களுக்குச் சொல்ல மாட்டான்.

அதேபோல் அவன் வந்திருக்கிறான் என்று அவனுடைய இலக்கான மனிதனுக்கு தெரியாமல் இருக்க திருடன் இருட்டோடே வருவான். பல நேரங்களில் இரவில் வரும் திருடனால் திருடப்பட்டவர்கள், தாங்கள்; தூங்கின நேரத்தில் தங்களுக்கு மிகவும் விலையுயர்ந்த பொக்கிஷங்களாக

இருந்தவைகளை எடுத்துவிட்டான் என்பதை காலையில் எழுந்துதான் அறிவார்கள். ஆவிக்குரிய ரீதியிலும் அநேகருக்கு இது நடைபெறுகிறது. பிசாசு, தங்களிடமிருந்து விலையுயர்ந்த பொக்கிஷங்களை எடுத்து விட்டான் என்பதை அவைகளை இழக்கும் வரை அறியாதிருக்கிறார்கள். திருடன் வந்து சென்று விட்டான். அவனை அவர்கள் காணவுமில்லை, அவன் யார் என்பதையும் அறியவில்லை.

திருடர்கள் செயல்படும் இன்னொரு முறை வஞ்சகம் என்பதே. இந்தத் திருடர்களை நம்பிக்கை தந்திரக்காரர் அல்லது ஏமாற்றுபவர்கள் என்று அழைக்கிறோம். ஒரு புதிய தங்க வயலை கண்டுள்ளோம் என்பது போன்ற கட்டுகதைகளுடன் தாங்கள் இரையாக தேர்ந்தெடுப்பவரிடம் வருவார்கள். ஒருவரும் அதைக் குறித்து கேள்விப்பட்டது இல்லை ஆனால் அது கணக்கிட முடியா தங்கத்தைத் தரும் என்பார்கள். இதன் உண்மையான மதிப்பு மற்றவர்களுக்குத் தெரிய வரும்முன் அதில் பங்குகளை வாங்கிக் கொள்ளுங்கள் என்று பலியாக்க அவர்கள் தேர்ந்தெடுக்கும் நபரிடம் கூறுவார்கள். “இன்று நீங்கள் ஒரு பங்கை பத்து பவுண்டுகளுக்கு வாங்கினால், சில மாதங்களில் அந்தப் பங்குகள் ஒவ்வொன்றும் ஆயிரம் பவுண்டு அளவிற்கு உயரும்” என்பார்கள்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், பலியாகும் நபர் அந்தக் கதையை உண்மையென நம்பி, அந்தத் தங்க வயலில் முதலீடு செய்யும் வாய்ப்பை தழுவிக்கொள்வார்கள். ஆனால் அந்த நபர் பணம் கொடுத்து பங்கு சான்றிதழ்களை பெற்ற பின், அந்த பங்குகளுக்கு, அவைகள் அச்சிடப்பட்டிருக்கும் காகிதத்தின் விலை கூட பெறாது என்பதை கண்டறிகிறார்கள். அதற்குள் திருடனும் போய்விட்டான், பலியானவர்களின் பணமும் போய்விட்டது.

பிசாசு இப்படிதான் செயல்படுகிறான். அவன் உங்கள் வாழ்வில் வந்து, அற்புதமான காலத்தை உனக்குத் தருகிறேன் — நீ நன்றாக சந்தோஷத்தை அனுபவிக்க போகிறாய் என்று கூறுகிறான். உனக்கு

அதிகமாய் இன்பம், அதிக பணம் மற்றும் அதிக ஓய்வு இருக்கும் என்கிறான். ஆனால் அவன் வஞ்சகத்தை ஏற்றவுடன்தான் தெரிகிறது — இது செலுத்தின கிரயத்திற்கு ஏற்ற மதிப்புடையது அல்ல.

திருடர்கள் உள்ளே நுழையும் இன்னொரு விதமும் உண்டு. அவர்கள் கொள்ளையர்களாய் வருகிறார்கள் — ஆயுதமேந்திய வன்முறையாளர்கள். கதவை உடைத்து நுழைந்து, துப்பாக்கியுடன் உங்களை எதிர்கொண்டு, "உன் பணம் எங்கே? உன் நகைகள் எங்கே? அவைகளை ஒப்படைக்காவிட்டால் சுட்டு விடுவோம்" என்று மிரட்டுவார்கள். இவை அனைத்தையும் அவர்கள் பயத்தினாலும், அழுத்தத்தினாலும் சாதிக்கின்றனர்.

பிசாசும் எண்ணற்ற வாழ்வுகளில் இப்படிதான் செயலாற்றுகிறான். "அந்த அழுத்தத்தை என்னால் தாங்க முடியவில்லை. எனக்கு மிஞ்சினதாய் இருந்தது. என் மனது தெரிந்துவிட்டது. நான் விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. என்னால் தாக்குபிடிக்க முடியவில்லை" என்று அநேகர் கூறுவதை நான் கேட்டிருக்கிறேன். மன அழுத்தம், பொருளாதார அழுத்தம், குடும்ப அழுத்தம் — இவை அனைத்தின் பின்னணியிலும் சத்துரு உள்ளான்.

சாத்தான் எவ்விதத்தில் வந்தாலும் (அவன் பல விதங்களில் வரக்கூடும்), நம்முடைய இருதய பலகையில் நாம் எழுதிக்கொள்ள வேண்டியது என்னவென்றால்: அவனுக்கு மூன்றே நோக்கங்கள் உள்ளன — திருட, கொல்ல, அழிக்க.

அவனை நீங்கள் வரவேற்றால், நீங்கள் புத்தியற்றவர்கள். ஏன்? ஏனென்றால் அவன் திருடுவது, கொல்வது மற்றும் அழிப்பதைத் தவிர வேறொன்றையும் செய்யபோவது இல்லை. "எனக்குத் தெரியவில்லை. யாரும் எச்சரிக்கவில்லை" என்று நீங்கள் கூற முடியாது. இயேசு புதிய ஏற்பாட்டில் நம்மை எச்சரித்தார். அந்த எச்சரிப்பை இப்போது நான் உங்கள் முன் வைக்கிறேன்: திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவுமே

வருகிறான். உண்மையை சொன்னால் ஏற்கெனவே அநேகருடைய வாழ்வை அவன் சீரழித்துவிட்டான். அவன் ஜீவனை எடுக்கிறவன்.

## ஒரு தெளிவான தேர்வு

நற்செய்தி என்னவென்றால், ஜீவனை கொடுக்கிறவர் — இயேசு, இதற்கு நேர் எதிர்மறையான நோக்கத்திற்காக வந்தார். அவர் எடுக்க வரவில்லை, கொடுக்க வந்தார். ஜீவனை கொடுக்க — பரிபூரண ஜீவன், ஆவிக்குரிய ஜீவன், சரீரபிரகாரமான ஜீவன், ஆச்சரியமான, நிறைவுள்ள ஜீவன். இதை சித்தரிக்க, என் தனிப்பட்ட அனுபவத்தை சாட்சியாக கூற விரும்புகிறேன்.

நான் 1941 ல் இரண்டாம் உலக மகா யுத்தத்தில், பிரிடிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது இரட்சிக்கப்பட்டேன். தொழிலை பொறுத்தவரை நான் ஒரு தத்துவவாத நிபுணர். ராணுவத்தில் சேரும்முன், கேம்பிரிட்ஜ் பல்கலைகழகத்தின் கிங்ஸ் கல்லூரியில் தத்துவத்தில் மேலாய்வு செய்ய உபகார பரிசில் பெற்றிருந்தேன். யுத்தம் முடிந்தபோது, கிங்ஸ் கல்லூரியின் தலைவர் எனக்கு ஒரு மிக கவர்ச்சிகரமான சலுகையை கடிதத்தின் மூலம் வழங்கினார். நான் கல்லூரிக்கு திரும்பினால், சில ஆண்டுகளில் என்னை கல்லூரியின் ஆசிரியராக மாற்றுவதாக வாக்களித்தார். கல்வியில் எனக்கு ஒரு மிக பெரிய எதிர்காலம் இருக்கும் என்று உறுதியளித்தார்.

இதற்கு இடையில், தேவன் என்னை எருசலேமில் பணியாற்ற அழைத்திருந்தார். இவை இரண்டிற்கும் இடையில் தேர்வு செய்ய வேண்டிய சூழலில் என் முழு கல்வி வாழ்க்கையையும் நான் துறந்தேன். அதை விட்டுவிட்டேன். என் வருமானம் மிக குறைவாக இருந்த ஒரு வாழ்விற்குள் நுழைந்தேன். அதில் அநேக கஷ்டங்களும், அழுத்தங்களும் இருந்தன. உதாரணத்திற்கு, என் முதல் மனைவி மற்றும் தத்தெடுக்கப்பட்ட எங்களது எட்டு பெண் பிள்ளைகளும் இஸ்ரவேலை உருவாக்கின

மிகுந்த கொந்தளிப்பையும் சண்டையையும் எருசலேம் நகரத்தில் கடந்து வந்தோம். நாங்கள் எருசலேமில் அனுபவித்ததற்கு ஒத்த அனுபவத்தை வெகு சிலரே வாழ்வில் அனுபவித்திருக்க முடியும். இரண்டு முறை ஜீவனை காக்க நாங்கள் எங்கள் வீட்டைவிட்டு நடு இரவில் வெளியேறினோம். யார் எங்களை நோக்கி சுடுவார்கள், எங்கிருந்து சூடு வரும் என்பது எங்களுக்குக் தெரியாது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் ஒரு நல்ல வேலைக்கு பதில் நான் ஏற்றுக்கொண்ட கடினமான சூழ்நிலைகள் இவைதான்! ஆனால் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் அந்த வேலையை நான் ஏற்றிருந்தால், ஏதோ ஒரு காலத்தில் நான் ஓய்வு பெற்றிருப்பேன். குறைவான வருமானத்துடன், வயோதிபனாய், எரிந்துபோன நிலையில் ஒரு சிறிய வீட்டில் இருந்திருப்பேன். அதற்குப் பதில் (இந்த போதனையை எழுதும் காலத்தில், ஓய்வு வயதை கடந்து ஐந்து ஆண்டுகள் ஆகியும்) ஆரோக்கியமாகவும், சுறுசுறுப்பாகவும் உள்ளேன். உண்மையில், எவரும் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு சுவாரசியமான, உற்சாகமான சவால் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்துள்ளேன்.

## ஒரு சுவாரசியமான வாழ்க்கை

என் முதல் மனைவி 1975ல் கர்த்தருடன் இருக்க கடந்துபோனாள். 1978ல் நான் ரூத்தை மறுமணம் செய்தபோது, நான் அவளிடம் “நான் உனக்கு ஒரு காரியத்தை உறுதியாக வாக்களிக்க முடியும் என்று நினைக்கிறேன்: நம்முடைய வாழ்க்கை மந்தமாக இருக்காது.” அவ்வாக்கை நான் காப்பாற்றினேன்: அவள் ஒருபோதும் அதை மறுக்க மாட்டாள். நாங்கள் இணைந்து வாழ்ந்த வாழ்க்கை எளிதாக இருக்கவில்லை. ஆனால் எப்போதும் நிறைவாகவும், முழுமையுடையதாகவும் இருந்தது. சுவாரசியமாக இருந்துள்ளது. குறுகிய காலத்திற்கு முக்கியத்துவம் கொண்ட நோக்கங்களுக்கல்ல,

நித்திய மதிப்புள்ள விஷயங்களுக்கு எனனை அர்ப்பணிக்கும் மதிப்பிடமுடியா சிலாக்கியத்தை நான் பெற்றுள்ளேன். நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும் விதத்தில் மனிதருடைய வாழ்க்கைகளில் நான் விதைத்துள்ளேன். தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை நான் பகிர்ந்துள்ளேன் — அது நித்தியமாய் நிலைத்திருந்து — மனிதருடைய வாழ்வை மறுரூபப்படுத்தும் ஆற்றல் கொண்டது. இருளிலிருந்து மக்களை இயேசு கிறிஸ்துவின் மகிமையான ஒளியினிடத்திற்கு மக்களை அழைக்கும் சிலாக்கியத்தைப் பெற்றேன்.

என் கல்வி சார்ந்த வேலை வாய்ப்பை நான் விட்டுவிட தீர்மானம் செய்தபோது அது ஒரு தியாகம்போல தோன்றியது. ஆனால் அந்த தேர்வை மறுபடியும் செய்ய நேரிட்டாலும், அதே தீர்மானத்தைதான் செய்வேன். தேவனை சேவிக்க அழைக்கப்பட்டு, அந்த அழைப்பை ஏற்ற அநேகரை நான் சந்தித்துள்ளேன். பல ஆண்டுகள் சென்று அவர்களுடன் பேசினபோதும், அந்த தீர்மானத்தினால் அதிருப்தியாய் இருந்த ஒருவரையும் நான் சந்தித்தது இல்லை. மாறாக ஆண்டவரின் அழைப்பை கேட்டும், நிராகரித்த அநேகரை நான் சந்தித்துள்ளேன். அந்நேரத்தில், அந்த தியாகம் மிக பெரியது என்று அவர்கள் எண்ணினார்கள். துரதிஷ்டவசமாக, அவர்களில் அநேகர் தங்கள் வாழ்க்கையைக் குறித்து கசந்து, அதிருப்தியாய், விரக்தியடைந்து இருந்தார்கள்.

பின்வரும் அதிகாரங்களில், இயேசு நம்மை எப்படி நேசித்தார், நமக்காக எப்படி ஜீவனைத் தந்தார், அவர் செலுத்தின மகா கிரயம் குறித்து அநேக நுண்ணறிவுகளை உங்களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகிறேன். அவர் சிலுவையில் அறையப்பட்டு மரித்தபோது,நமக்காக சிந்தின தமது ஜீவரத்தமே அந்தக்கிரயம். பின்வரும் அதிகாரங்களில் அவருடைய விலையேறப்பெற்ற, வல்லமையள்ள இரத்தத்தை நாம் செயல்முறையான மற்றும் பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவது எப்படி என்று கண்டறிவோம் — இது நம்முடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிடும்.

## மரணம் மற்றும் ஜீவனுக்கு ஏதுவான விஷயம்

நான் இப்புத்தகத்தில் பகிர்ந்துகொள்ளும் செய்தியை நீங்கள் இதுவரை கேட்டிராத ஒன்றாய் இருக்கும். அது இயேசுவின் இரத்தத்திலும், அவருடைய இரத்தத்தின் மேலும் மையம் கொண்டுள்ளது. என்னுடைய தனிப்பட்ட கருத்தின்படி, தற்காலத்து சபையில் இயேசுவின் இரத்தத்தைக் குறித்து மிக குறைவாகவே பிரசங்கிக்கப்படுகிறது. இந்தப் புத்தகம் முழுவதும் நான் அந்த அற்புதமான கருத்தின் மீது கவனம் செலுத்த போகிறேன்.

எப்போதும் இரத்தம் என்பது சற்று அருவருக்கத்தக்கது. நான் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் மருத்துவ பணியாளராக இருந்தபடியால், அதிகமான இரத்தத்தைக் கண்டேன். அதுமட்டுமல்ல, நான் ஏழு அல்லது எட்டு வயது சிறுவனாக இருக்கும்போது இரத்தத்தைக் கண்டால், வாந்தி எடுப்பது நினைவில் உள்ளது. இது என்மேல் உணர்ச்சிபூர்வமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்தப் பிரச்சனையை நான் கடந்து விட்டாலும், இரத்தத்தைக் குறித்த தீவிரமான ஒன்று இருக்கதான் செய்கிறது – இரத்தம் ஜீவன் மற்றும் மரணத்திற்கு ஏதுவான ஒன்றாக இருக்கிறது.

நீங்களும் நானும் இரத்தத்தைக் குறித்த உண்மைகளை எதிர்கொள்ள விருப்பமில்லாமல் இருக்கலாம். ஆனால் இப்புத்தகத்தில் அந்த உண்மைகளை எதிர்கொள்ள தீர்மானிப்போம். இந்தப் போதனையை நீங்கள் என்னோடு கடந்து வருவீர்களானால், இயேசு மூலமாகவும் அவர் நம்முடைய சார்பாக சிந்தின விலையேறப்பெற்ற இரத்தத்தினாலும் நமக்கு அளிக்கப்பட்டுள்ள ஜீவனுக்குள் ஒரு புதிய நுண்ணறிவு உங்களுக்குக் கிடைக்கும்.

## 22 : தெளிக்கப்படும் இரத்தம்

ATB_2023.indd 22 2/26/2024 4:20:39 PM

# அத்தியாயம் 2
# தேவனுடைய அன்பின் அளவு

முதலாம் அதிகாரத்தில், திருட, கொல்ல மற்றும் அழிக்க வருகிற சாத்தான் எப்படி ஜீவனை எடுப்பவனாக இருக்கிறான் என்பதை பார்த்தோம். ஜீவனை எடுப்பவனுக்கு நேர் எதிர்மறையாக, இயேசு ஜீவனைக் கொடுப்பவராக வந்தார் என்ற அற்புதமான உண்மையையும் நாம் கண்டோம். அவருக்குள் நாம் புதிய ஜீவனை பெறும்படியாக. அவர் தம்முடைய ஜீவனை கொடுத்தார். இந்த ஆராய்வை நாம் தொடர, இயேசு தம்முடைய ஜீவனை கொடுத்த இடமாகிய சிலுவை, தேவனுடைய அன்பை எப்படி வெளிப்படுத்துகிறது என்பதை சிந்திப்போம். இயேசு நம்மை மீட்பதற்கு செலுத்தின மகா பெரிய கிரயத்தை சிலுவை காண்பிக்கிறது.

வேதத்தின் ஏதாவது ஒரு கருப்பொருளை உன்னதமானது என்று நான் தேர்வு செய்ய வேண்டியதிருந்தால், அது தேவனுடைய அன்பு என்றே சொல்லுவேன். தேவனுடைய அன்பை சற்றும் சிந்திக்காத, இயேசுவின் சிலுவை மரணத்தைக் குறித்த எந்த ஆராய்வும் நிறைவுள்ளது அல்ல.

தேவனுடைய அன்பு என்னும் கருப்பொளை அணுக அநேக வழிகள் உண்டு. ஆனால், நான் அதை ஒரு குறிப்பிட்ட விதத்தில் அணுக உள்ளேன். தேவன் நம்மீது வைத்திருக்கும் அன்பின் அளவை, அவர் நம்மீது வைத்த மதிப்பீடு மற்றும் நமக்காக செலுத்தின கிரயத்தினாலும் நாம் கண்டறியலாம். இவ்விதமாகதான் நாம் இந்த கருப்பொருளை பார்க்கபோகிறோம். உங்களுக்காக, எனக்காக தேவன் என்ன கிரயத்தை செலுத்த ஆயத்தமாக இருந்தார்?

இந்தச் சத்தியத்தை நீங்கள் விசுவாசத்தினால் பெற்றுக்கொள்ள கூடுமானால், அது உங்கள் வாழ்வை மாற்றும் தாக்கத்தை உண்டுபண்ணும். உதாரணத்திற்கு, இது உங்களைக் குறித்து நீங்கள் கொண்டிருக்கும் சுய சித்திரத்தை உயர்த்தும். நீங்கள் முக்கியத்துவமற்ற, தகுதியற்ற அல்லது தாழ்ந்தவர் என்ற உணர்வை கொண்டிருந்தால், தேவன் உங்கள் மேல் வைத்த மதிப்பை நீங்கள் உணரவே இல்லை என்பதற்கு அது அடையாளமாகும். அவர் வைத்திருக்கும் மதிப்பு, அவருடைய அன்பின் வெளிப்பாடாகும். இப்புத்தகத்தின் துவக்கத்தில் இருந்தே, நாம் ஓர் அடிப்படை சத்தியத்தை அங்கிகரிப்பது அவசியம் என நம்புகிறேன்: தேவனுடைய அன்பு, அளவிட முடியாத அளவிற்கு மிகவும் பெரியது.

## ஏன் நம்மை நேசிக்கிறார்

உண்மையில் தேவனுடைய அன்பை விளக்கிச் சொல்ல முடியாது. ஒரு வியப்பூட்டும் காரியத்தை நான் கவனித்துள்ளேன்: தேவனுடைய அன்பிற்கு ஒரு விளக்கத்தை வேதத்தில் நீங்கள் எங்கும் காண முடியாது. உபாகமம் 7ல், தேவன் ஏன் தங்களை நேசிக்கிறார் என்பதை மோசே இஸ்ரவேலுக்குச் சொல்ல முயலும் ஒரு சுவாரசியமான சம்பவத்தில் ஆரம்பிப்போம். (இயேசுவின் விசுவாசிகள் என்பதன் அடிப்படையில்,

இவ்வார்த்தைகள் உங்களுக்கும் எனக்கும் பொருந்தும்) உபாகமம் 7:6ல் மோசே கூறுகிறார்:

> நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனாகிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாயிருக்கும்படி தெரிந்துகொண்டார்.

நீங்களும் நானும் தேவனுடைய விசேஷித்த பொக்கிஷம் என்பதை உணருகிறீர்களா? இந்த ஆரம்ப வாக்கியத்தைத் தொடர்ந்து, தேவன் ஏன் தங்களை நேசிக்கிறார் என்பதை இஸ்ரவேலுக்குச் சொல்ல முயற்சிக்கிறார். ஆனால், அவர் ஒரு முடிவை எட்ட முடியாததுபோல் தெரிகிறது. 7ம் வசனம் சொல்கிறது:

> சகல ஜனங்களிலும் நீங்கள் திரட்சியான ஜனமென்று கர்த்தர் உங்கள்பேரில் அன்பு வைத்து உங்களைத் தெரிந்து கொள்ளவில்லை: நீங்கள் சகல ஜனங்களிலும் கொஞ்சமாயிருந்தீர்கள்.

அவ்வாக்கியம் நம்மைக் குறித்தும் உண்மையே. நாம் மிகவும் குறைந்தவர்களாக இருந்தோம். நாம் முட்டாள்களும், தாழ்ந்தவர்களும், உலகத்தால் இகழப்பட்டவர்களுமாய் இருந்தோம். எனவே, தேவன் நம்மை ஏன் நேசித்தார்?

அடுத்த வசனம்

> கர்த்தர் உங்களில் அன்புகூர்ந்ததினாலும்...

நீங்கள் இப்படிப்பபட்டவர்கள் அல்லது அப்படிப்பட்டவர்கள் என்பதினால் தேவன் உங்களை நேசிக்கவில்லை. ஆனால் அவர் உங்களை நேசித்தார். நீங்களும், நானும் தேவனுடைய அன்பின் ஏதேனும் ஒரு விளக்கத்திற்காக, வேதத்தை வீணாக தேடலாம். தேவனுடைய

விளக்கமில்லா அன்பு சரித்திரத்தின் பின்னணியில் இருக்கும் உச்சக்கட்ட உண்மை.

## அன்பைக் குறித்த இரண்டு உவமைகள்

வேதம் தேவனுடைய அன்பை விவரிக்கும் சில விதங்களை நாம் ஆராயலாம். மத்தேயு 13ல் உள்ள இரண்டு உவமைகளை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ளலாம். நான் இவைகளுக்கு அளிக்கும் விளக்கம்தான் இவைகளின் ஒரே அர்த்தம் அல்ல என்பதை நான் ஆரம்பத்திலேயே கூற விரும்புகிறேன். என்னுடைய வேதாகமத்தின் ஓரத்திலுள்ள குறுக்கு – குறிப்புகளில் இருந்தே, அவைகளை அங்கு அச்சிட்டவர்கள், அந்த உவமைகளை சற்று வித்தியாசமாக தான் அர்த்தம் பெயர்த்தார்கள் என்பது எனக்குத் தெரியும். அதைக் குறித்து எனக்கு கவலை இல்லை, நீங்களும் கவலை கொள்ள வேண்டாம். நான் சொல்வதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க உற்சாகப்படுகிறேன். ஏனென்றால், உவமைகளை வெவ்வேறு சூழ்நிலைகளில் வெவ்வேறு விதமாக அர்த்தம் பெயர்த்து, பயன்பாட்டில் கொண்டுவரலாம் என்பது, அவைகளின் முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

வயலில் மறைந்திருந்த பொக்கிஷம் மற்றும் விலையேறப்பெற்ற முத்து என்ற இரண்டு உவமைகளை நாம் கவனிக்க இருக்கிறோம். இரண்டும் மிக சுருக்கமானவை. வயலில் இருந்த பொக்கிஷம் வெறும் ஒரு வசனத்தில் அடங்கும். விலையேறப்பெற்ற முத்து, இரண்டு வசனங்கள் ஆகும். ஆனால் அவைகளின் கருத்து அளவற்றது.

மத்தேயு 13:44–46ல், நாம் வாசிக்கிறோம்:

> அன்றியும் பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது: அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய்,...

இரண்டு உவமைகளுக்கும் பொதுவான ஒரு அம்சம் உண்டு. அதில் குறிப்பிட்டுள்ள மனிதன், விலையேறப்பெற்ற ஒன்றைக் கண்டுப்பிடித்ததால், அதை பெறுவதற்கு, அவன் தனக்குண்டான எல்லாவற்றையும் விட்டுவிட வேண்டியதாய் இருந்தது.

## வயலில் இருந்த பொக்கிஷம்

முதலாவது, வயலில் இருந்த பொக்கிஷத்தைக் குறித்த சித்திரத்தை நாம் சிந்திக்கலாம். அந்தப் பொக்கிஷம் வயலில் எப்படி மறைக்கப்பட்டது? மத்திய கிழக்கு நாடுகளின் சரித்திரத்தை நீங்கள் அறிந்திருந்தால், முக்கியமாக பாலஸ்தீன் என்று அழைக்கப்படும் தேசம், அடிக்கடி கொள்ளையடிக்கவும் திருடவும் வந்த கொள்ளைக்கார கும்பல்களால் தாக்கப்பட்டது.

ஒரு மனிதன் தன் வீட்டில் உள்ள சகல விலையேறப்பெற்ற பொருட்களுடன் இருப்பதை சித்தரித்துக்கொள்ளலாம். கொள்ளைக்காரர்கள் வருகிறார்கள் என்ற செய்தியை கேள்விப்படுகிறான். தன் வீட்டை மறைக்க முடியாது என்பது தெரியும், எனவே ஒரு பெரிய மரப்பெட்டியை எடுத்து, அதில் தன் விலையேறப்பெற்ற பொருட்கள், பணம் மற்றும் நகைகளை வைக்கிறான். விலையுயர்ந்த யாவும் அதற்குள் செல்கிறது. பின்பு அந்த மனிதன் இரவு நேரத்தில் வெளியே சென்று, தன் வயலில் ஒரு குழித்தோண்டி, அந்தப் பெட்டியை புதைக்கிறான். யாரும் அதைக் கண்டுபிடிக்கமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் அதை மறைக்கிறான். ஒருவேளை அதைத் தொடர்ந்த சண்டையில் மரித்து விடுகிறான் என்று வைத்துக்கொள்வோம். அவன் ஒருவனுக்குத்தான் தெரியும், வயலில் பொக்கிஷம் புதைந்திருப்பது.

நூற்றாண்டுகளாக அந்தப் பொக்கிஷம் அங்கு மறைந்திருக்கலாம். யாருக்குத் தெரியும். பின் ஒரு நாள், வேறொரு மனிதன் அந்த வயல் வழியாக நடக்கையில், அவன் பெருவிரல் கடினமான பொருளின் மேல்

மோதுகிறது. முதலில் அது பாறை என்று எண்ணுகிறான். அது என்ன என்று அறிய, தோண்டுகிறான். அழுகிக்கொண்டிருக்கும் மரப்பெட்டி வெளிவருகிறது. அதின் ஓரத்தை தூக்கிப்பார்க்க, நகைகள், முத்துக்கள் மற்றும் பொன்னை அவன் கண்கள் பார்க்கின்றன. அந்த நொடியில் என்ன நடந்துள்ளது என்று உணருகிறான்.

வேதத்தின் நிகழ்வில், பொக்கிஷத்தை மறுபடியும் மறைத்தான் என்று கூறுகிறது. ஏன்? அந்த வயலில் பொக்கிஷம் இருக்கிறதென்று வேறு யாருக்கும் தெரியக்கூடாது. அதை ஒரு காரணத்திற்காக இரகசியமாக வைத்துக்கொள்ள விரும்பினான். என்ன காரணம்? பொக்கிஷத்தை குறித்து வேறு யாரும் அறிந்து கொண்டால், அந்த வயலின் விலை மிகவும் அதிகரித்துவிடும். இந்த உண்மையை மனதில்கொள்ளுங்கள்: அந்த மனிதனுக்கு உண்மையில் வயல் தேவையில்லை. அவனுக்குப் பொக்கிஷம் மட்டுமே வேண்டும். ஆனால் அந்த பொக்கிஷத்திற்குரிய நியாயமான உரிமையைப் பெற, அந்த வயலை அவன் வாங்க வேண்டியது அவசியம்.

அதின் விலையை குறித்து விசாரித்து மிகவும் அதிகமாக இருந்தது. அக்கம்பக்கத்தினர் "இந்த வயல் இந்த மனிதனுக்கு எதற்கு? அதில் ஒன்றும் விளைந்ததில்லை. ஏன் இந்த வயலுக்கு இவன் இவ்வளவு பணம் செலவு செய்ய ஆயத்தமாயிருக்கிறான்?" என்று கேட்டிருப்பார்கள். ஆனால் தனக்கு ஏன் அந்த வயல் வேண்டும் என்ற உண்மையான காரணத்தை அவன் யாரிடமும் கூறுவதில்லை.

அதிலிருக்கும் பொக்கிஷத்தின் மதிப்பு அவனுக்குத் தெரிந்தபடியால், அதற்குரிய கிரயத்தை செலுத்த அவன் ஆயத்தமாயிருக்கிறான்.

## விலையுயர்ந்த முத்து

விலையுயர்ந்த முத்தைக் குறித்த மற்ற உவமையை நாம் இப்போது ஆராயலாம். இந்த உவமையில் குறிப்பிட்டுள்ள மனிதன் ஒரு வியாபாரி என்பதை காண்பது மிகவும் முக்கியம். அவன் ஒரு சுற்றுலா பயணி

அல்ல. அவன் தெரு தெருவாய் சுற்றித்திரிகிற மனிதனும் அல்ல. திடீர் என்று கடை ஜன்னலில் சில முத்துக்களைப் பார்த்து, கடைக்காரர் அதைக் குறித்துச் சொல்லும் கதையைக் கேட்டவனும் அல்ல. மாறாக, இந்த மனிதன் எண்ணமுடன் தேடுகிறவனாய் இருந்தான். இந்த ஒரு முத்தை அவன் கண்டவுடன், இது விசித்திரமானது என்பதை அறிந்திருந்தான். அதுவரை அவன் கண்டிருந்த எந்த முத்தும் இதற்கு ஒப்பாக இல்லை. அவர் வியாபாரி மட்டும், தன் வியாபாரத்தை மிகவும் நேசித்தவன். அந்த முத்தின் விலையை கேட்டவுடன், தனக்கு இருந்த எல்லாவற்றையும் விற்று அந்த முத்துக்கு விலை செலுத்துதினான். அந்த முத்தை வாங்கின உடனே, அதைத் தன் கையில் பிடிக்கிறான். அதைப் பார்த்து, "உனக்கு அதிக விலைக்கிரயம் செலுத்தினேன். ஆனால் நான் செலுத்தின விலைக்கும் அதற்கு மேலும் நீ மதிப்புள்ளது" என்று கூறுகிறாய்.

இப்போது நீங்கள் இவ்விரண்டு உவமைகளையும் கேட்டபின், அவைகளை நான் உங்களுக்காக விளக்க விரும்புகிறேன். இது "பிரின்ஸ்" விளக்கம் என்பதை மட்டும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

## பொக்கிஷத்தை உரிமைக்கோறுதல்

இரண்டு உவமைகளிலும் உள்ள மனிதன் இயேசுவின் சித்தமாவான். ஒரு விதத்தில் உண்மையைச் சொன்னால், வாங்கக்கூடிய நிலையில் இருப்பவர் அவர் ஒருவர்தான். ஏனென்றால், ஆவிக்குரிய தளம் என்று வரும்போது, அதில் எதையும் வாங்குவதற்கு நம்மிடம் ஒன்றுமில்லை.

அந்த வயல், மத்தேயு 13:38ல் விளக்கப்பட்டுள்ளது. அங்கே கூறுகிறது: நிலம் உலகம்.

மத்தேயு 13ல், பரலோக ராஜ்யத்தைக் குறித்த உவமைகளில் இந்த அர்த்தம் தொடர்ந்து வருகிறதை நான் காண்கிறேன். வயல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு முறையும், அது உலகத்தைக் சுட்டிக்காட்டுகிறது. இயேசு தம்முடைய தெய்வீக உட்பார்வையுடன் உலகத்தை பார்த்தபோது, அந்த

உலகத்தினுள் எங்கோ விலையேறப்பெற்ற பொக்கிஷம் நிறைந்த அந்த பெட்டி மறைந்திருக்கிறதென்று அறிந்திருந்தார். அந்தப் பெட்டி என்ன, அந்தப் பொக்கிஷம் என்ன? இதுதான் என்னுடைய பரிந்துரை: தமக்கென்று நித்தியத்திலிருந்து தேவன் முன்னறிந்த அந்தப் பொக்கிஷம் தேவனுடைய ஜனங்களே — அவர்களை தமக்கென்று தெரிந்தெடுத்தார்.

உவமையில் இருந்த மனிதனைப் போல், பொக்கிஷத்திற்கான சட்ட ரீதியான உரிமையைப் பெற, தேவன் வயலை வாங்க வேண்டியதாக இருந்தது. உண்மையில் அவருக்கு வயல் தேவையில்லை. ஆனால், அவருடைய விருப்பம் எப்போதுமே அந்த நிலத்தில் இருந்த பொக்கிஷம்தான். வயலில் உள்ள பொக்கிஷம் என்ன? அது தேவனுடைய ஜனங்களே. உங்களையும் என்னையும் போன்ற மக்கள் — மற்றும் இன்னும் கோடி கோடியானோர். (உண்மையைச் சொன்னால், அந்தக் கோடிகளில், அநேகம் இன்னும் வயலில் இருக்கின்றன).

நம்மை தேவனுடைய வேலைக்காரர்களாக சித்தரிப்போம். தேவன் வயலுக்கான கிரயத்தை செலுத்திவிட்டார். விலையென்ன? இயேசு கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம். இப்போது நம்முடைய பணி, வயலுக்குச் சென்று அந்த பொக்கிஷத்தைத் தோண்டி எடுப்பதே. அதற்குரிய சட்டப்படியான உரிமை, அவருக்கு உண்டு ஆனால் அந்த மேன்மையை அவர் நமக்குக் கொடுக்கிறார்.

இன்றுவரையும் அதிகமான பொக்கிஷம் நிலத்தில் அடியிலேயே உள்ளது. அது அழுக்காயும், ஒருவேளை துருப்பிடித்தும் இருக்கலாம். பொக்கிஷத்தை வெளியே எடுத்து, அது என்னவாக இருக்க வேண்டுமோ அப்படி மாற்றுவதற்கு அதிகமான வேலை தேவை. மீதமுள்ள அந்தப் பணியில், நீங்கள் நுழைய உங்களை ஊக்குவிக்கும் ஒரு கதையை நான் சொல்லட்டும்.

## ரயில் வண்டியிலிருந்து காட்சி

பல ஆண்டுகளுக்கு முன், 1943ல், நான் புதிய கிறிஸ்தவனாக இருந்தபோது — நான் இரட்சிக்கப்பட்டு இரண்டே வருடங்களாகி இருந்தது — பிரிட்டிஷ் ராணுவம் என்னை சூடானுக்கு அனுப்பியது. எகிப்திற்கு தெற்கே அந்த நாடு உள்ளது, அக்காலத்தில் அது பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நிர்வகிக்கப்பட்டது. சூடான் என்ற வார்த்தைக்கு "கருப்பு மக்கள்" என்று அர்த்தம். சூடான் மக்களும் மிகவும் பழமையானவர்களாக இருந்தனர். சூடானின் வடக்குப் பகுதி முழுவதும் இஸ்லாமியரால் நிறைந்திருந்தது, தெற்குப் பகுதி பழமையானதும், இயற்கை ஆன்மீகவாதிகளாகவும் இருந்தனர். மிக குறுகிய காலத்திற்கு மருத்துவ உதவியாளராக நான் சூடானில் பணியாற்றினேன். சூடானின் வடக்குப் பகுதியில், அட்பாரா என்ற நகரத்தில் ரயில் சந்திப்பு நிலையத்தின் ராணுவவீரர் வரவேற்பு அறையின் பொறுப்பு வகித்தேன்.

அட்பாராவிலிருந்து கர்த்தோம் நகருக்கு ரயிலில் பயணம் செய்யும் அந்த நேரம் எனக்குத் தெளிவாக நினைவில் உள்ளது. நான் பிரிட்டிஷ் ராணுவ வீரனாக இருந்ததால், பொது ஜனங்கள் பயன்படுத்த முடியாத ஒரு தனிபெட்டி என்க்கு இருந்தது. அந்த ரயில் பயணத்தில், ஒரு குறிப்பிட்ட இடத்தில் ஏதோ ஒரு பட்டணத்தில் நடைமேடையில் நின்றோம். நீங்கள் முன்பு உலக நாடுகளுக்குச் செல்லாதவர் என்றால் அதை நீங்கள் சித்தரிக்க முடியாது. ஆனால் அந்த நடைமேடை எல்லாவித ஜீவன்களாலும் நிறைந்திருந்தது: வயதான ஆண்கள், வயதான பெண்கள், வாலிப ஆண்கள், வாலிப பெண்கள், சிறுபிள்ளைகள், தாய்மாரால் பாலூட்டப்படும் குழந்தைகள், கழுதைகள், ஒட்டகங்கள், கோழிகள், நாய்கள் இதுபோன்றவை. வாழ்க்கையின் பொதிகலனாக இருந்தது.

நான் உட்கார்ந்திருந்த பெட்டியின் ஜன்னல் வழியாக அவர்களைப் பார்த்து, பெரிய ஆவிக்குரிய நோக்கு எதுவுமில்லாமல், "தேவன்

இவர்களைக் குறித்து என்ன நினைக்கிறாரோ” என்று எனக்குள்ளே சொல்லிக்கொண்டேன். வியப்பூட்டும் விதத்தில், இன்று என்னோடு தங்கியிருக்கும் ஒரு பதிலை நான் ஆண்டவரிடமிருந்து பெற்றேன்: “சில பெலவீனமான, சில முட்டாள்தனமான, சில பெருமையுள்ள, சில பொல்லாத, சில மிகவும் விலையேறப்பெற்றவர்கள்”. என்னை பொறுத்தவரை மனிதகுலத்தின் அந்த வகைப்படுத்தலை மாற்ற எனக்கு எந்த காரணமும் இருந்ததே இல்லை: சில பெலவீனமான, சில முட்டாள்தனமான, சில பெருமையுள்ள, சில பொல்லாத, சில மிகவும் விலையேறப்பெற்றவர்கள். நீங்களும் நானும், மனிதகுலத்தின் பெருந்திரளை எந்நேரத்தில் பார்த்தாலும், அவற்றில் ஒவ்வொரு வகைக்கும் பிரதிநிதிகளைக் காண்போம்.

## ஒரு ஆழ்ந்த கரிசனை

அட்பராவை நான் வந்தடைந்தபோது, வரவேற்பு நிலையத்தின் பொறுப்பில் அமர்த்தப்பட்டேன் – சுகவீனமாக இருந்த ராணுவவீரர்கள் அங்கு கொண்டுவரப்படுவார்கள். அவர்களைப் பொறுத்தவரை, மருந்து தேவையா, ஆஸ்பத்திரி செல்ல வேண்டுமா அல்லது என்ன செய்ய வேண்டும் என்பது என்னுடைய முடிவாய் இருக்கும்.

இக்கட்டத்தில், பிரிட்டிஷ் ராணுவம் தன் வீரர்களுக்கு ஒருபோதும் பைஜாமாக்களை கொடுக்காது என்பதை நீங்கள் அறிவது அவசியம். நான் ராணுவத்தில் இருந்த காலம் முழுவதற்கும், உள்ளாடைகளுடன் தூங்க பழகிக்கொண்டேன். ஆனால், இந்த வரவேற்பு நிலையத்தில் இரண்டு மருத்துவமனை படுக்கைகள், மூன்று ஃபிளானல் இரவு ஆடைகளும் இருந்தன. (அந்த இரவு ஆடைகள், படுக்கையை தேவைப்படும் நோயாளிகள் பயன்படுத்துவதற்காக இருந்தன).

முதலாவது, அந்த காலத்தில், ஒரு மென்மையன படுக்கை கிடைப்பதே எனக்கு ஒரு சொகுசு. போதாதென்று நான் இன்னொரு தீர்மானமும்

செய்தேன்: “இரவு ஆடைகளை உடுத்திக்கொண்டு தூங்க போகிறேன். இங்கே இருக்கிறது. ஏன் நான் அதைப் பயன்படுத்த கூடாது?” எனவே அந்த இரவு ஆடைகளை அணிந்துகொண்டு மென்மையான படுக்கையில் மகிமையாய் உறக்கம் கொள்ளச் சென்றேன்.

அடுத்து நடந்ததை எப்படி விவரிப்பது என்று தெரியவில்லை, ஆனால் அந்த இரவின் ஏதோ ஒரு நேரத்தில், இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்று நிகழ்ந்தது. சூடான் மக்களுக்காக ஜெபிக்க வேண்டும் என்ற ஒரு மிகுந்த பாரத்துடன் நடுராவில் திடீரென்று எழுந்தேன். அது முற்றிலும் விவரிக்க கூடாததாய் இருந்தது. இயற்கையாக பார்த்தால், அவர்களை எவரும் கவர்ச்சிகரமான மக்களாகக் காண மாட்டார்கள். ஆனால், அந்த பரிசுத்த நொடியைக் கடந்து, நான் அறியாத, அக்கறைக்கொள்ளாத அந்த மக்களுக்காக என் இருதயத்தை தேவனிடம் ஊற்றி ஜெபித்துக்கொண்டு இருந்தேன்.

என்னுடைய மன்றாட்டு ஜெபத்தை நான் தொடர்கையில், ஒரு அற்புதம் நிகழ்ந்தது. என் ஆடைகள் வெளிச்சமாக மாறின. இயேசு என் சரீரத்தின் வழியாக பிரகாசிப்பதுபோல் இருந்தது. நான் விரும்பும் அளவிற்கு இதைத் தெளிவாக விளக்க முடியுமா என்று தெரியவில்லை, ஆனால் இயேசு அந்த ஜனங்களை எப்படியாக நேசிக்கிறார் என்பதை குறித்துப் பேச ஆரம்பித்தார். அவர்களைத் தம்மடைய ஆபரணங்கள் என்று கூறினார். இரத்தினங்கள் பூமியின் ஆழத்தில் பதிந்திருக்கும் என்றும், அவைகளை நான் சுரங்கம் தோண்டுவதுபோல், தோண்டி எடுக்க வேண்டும் என்றும் நினைப்பூட்டினார். “அவைகள் வேதனைகளால் வெட்டப்பட்டு, கண்ணீரால் கழுவப்படுகின்றன” என்று கூறினார்.

## அறுவடையின் ஒரு முதற்பலன்

சூடானில் அந்த குறுகிய ஆனால் அர்த்தமுள்ள காலத்திற்குப் பின், சிவந்த சமுத்திர மலைகளில் இருக்கும் கெபெட் என்ற ஊருக்கு

நான் அனுப்பப்பட்டேன். பாலஸ்தீன் என்று அப்போது அழைக்கப்படும் இடத்தில் வருஷத்தின் மீதமுள்ள நாட்களைக் களித்தேன். அந்த இடத்தில் தங்குகிறவர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட "சுதேச" தொழிலாளிகளுக்கு பொறுப்பு வகித்தேன். அது இத்தாலிய போர் கைதிகளுக்கான மிகச் சிறிய மருத்துவமனை. இரண்டு மருத்துவர்கள் மற்றும் என்னைப் போன்ற சில மக்களைத் தவிர அங்கு இருந்தவர்கள் அந்தப் போர் கைகள் மட்டுமே. 1943 என்ற காலகட்டத்தில் பிரிட்டிஷ் ராணுவத்தின் கீழ் ஆயிரம் ஆயிரமான இத்தாலிய போர் கைதிகள் இருந்தனர். இச்சூழலில் சுதேச தொழிலாளர்கள் தங்கள் பணியை சரியாக செய்ய பொறுப்புள்ளவனாக நான் இருந்தேன்.

அவ்விடத்தில் சுதேச தொழிலாளர்களில் பொறுப்பாளியாக அலி என்ற ஒரு சூடான் நாட்டு மனிதன் இருந்தான். அவனுடைய பெயர் ஒரு பொதுவான அரபி பெயர். வெளிப்படையாக சொல்ல வேண்டுமானால், அவன் ஒரு திருடன். தனக்குக் கிடைத்த கூலியில் ஏமாற்றுவான், கொடுக்கப்பட்ட பணத்தை எடுத்துக்கொள்வான், சண்டை பண்ணுகிறவனுமாக இருந்தான். அவனைக் குறித்து நல்ல ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமானால், அவன் நல்ல கால்பந்து வீரன்.

முதலில் அலியும் நானும் எவ்வித உறவிலும் வருவது சாத்தியமில்லாது இருந்தது. எங்கள் வழக்கம் என்னவென்றால், காலையில் அவனை சந்தித்து, செய்ய வேண்டியவைகளைக் குறித்து, அவனுடன் பேசுவேன்.

இராணுவ வீரர்களுடன் பேசிப்பேசி ஆங்கிலத்தைக் கற்றுக் கொண்டிருந்தான். ஆங்கிலத்தில் ஒரு பாடம்கூட படித்ததில்லை. ஆனால் தெளிவான நினைவாற்றல் இருந்தது. உதாரணத்திற்கு, நாங்கள் செய்ய வேண்டிய வேலைகளில் ஒன்று, போர்வைகளை கிருமி நீக்கம் செய்வது. என் பிரிட்டிஷ் இராணுவ வீரர்களுக்கு அந்த வார்த்தையை ஆங்கிலத்தில் சரியாக சொல்ல வராது. ஆனால் ஒருமுறை அதைக் கேட்ட அலி, பின்பு ஒருபோதும் அந்த வார்த்தையை உச்சரிப்பதில் பிழை செய்ததில்லை.

சில காலத்திற்கு எங்களுக்குள் எந்த இணைப்பும் இல்லை. ஒருநாள், அலி பிசாசு உண்டென்று நம்புவதை நான் கண்டுப்பிடித்தேன். “நானும், பிசாசு உள்ளான் என்று நம்புகிறேன்” என்று கூறினேன். விசித்திரமாக, இதுவே எங்களுக்குள் தொடர்பை ஏற்படுத்தும் புள்ளியாக மாறியது. ஒவ்வொரு நாளும் என்னுடைய கிடங்கிற்கு வருவான் (ஏனென்றால் ஆஸ்பத்திரியின் உணவு மற்றும் இதர பொருட்களும் என் பொறுப்பில் தான் இருந்தன). நாங்கள் அந்த நாளின் வேலையை வரிசைப்படுத்துவோம்.

சில நாட்களில், அலி இஸ்லாமியனாக இருந்தபோதிலும், அவனை இயேசுவில் விசுவாசம் வைக்க செய்வதற்குத் தேவன் எனக்கு உதவினார். இது ஒரு அற்புதம், அது எப்படி நடந்தது என்பது, நான் சொல்லும் — மக்கள் விலையேறப்பெற்றவர்கள் — என்ற கருத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். கெபெட்டிற்கு வரும்முன் அட்பராவில் ஆண்டவராகிய இயேசு அந்த ரயிலில் எனக்குக் காண்பித்த காரியத்திற்கு அலி சிறந்த உதாரணமாவார். நேசிக்க முடியாத இந்த மக்களுக்கு, தமது உணர்ச்சிமிக்க அன்பின் ஒரு சிறியத்துளியைத் தேவன் அன்று அந்த ரயிலில் எனக்குக் காண்பித்தார்.

அலியின் இனம் ஹடெண்டோவா என்று அழைக்கப்படுவர். அவர்கள் தங்கள் தலை முடியை சுமார் பன்னிரெண்டு அங்குலம் உயரத்திற்கு ஆட்டு கொழுப்பு கொண்டு மேல் நிறுத்தி வைப்பார்கள். எங்களுக்கு அது கவர்ச்சிகரமாய் இராவிட்டாலும், தேவன் அவர்களை நேசிக்கிறார். அதுபோல் அவர்களைக் குறித்த அன்பை அவர் எனக்கும் சிறிதளவு பகிர்ந்தளித்தார். நான் அந்த மருத்துவமனையில் இருந்த காலத்தில், அலியும் இன்னொரு தொழிலாளியும் இரட்சிக்கப்பட்டனர். அந்த இடத்தை விட்டுச் செல்லும் முன் மருத்துவமனையின் நீச்சல் குளத்தில் அலிக்கு நான் ஞானஸ்நானம் கொடுத்தேன்.

அலியுடன் இருந்த உறவின் மூலம், தேவனுடைய ஊழியக்காரராக வயல்களில் சென்று பொக்கிஷத்தைக் கண்டுபிடிப்பது நம்முடைய பொறுப்பு என்று தேவன் காண்பித்தார். நாம் அதைத் தோண்டி, சுத்தம் செய்து, துருவை நீக்கி அதைத் தேவனுக்கு முன் நிறுத்த தகுதியுள்ளதாக்க வேண்டும்.

## நம்முடைய மிகுந்த மதிப்பு

வயலைக் குறித்து நாம் முன்பு ஆராய்ந்த உவமையில், அந்த வயலுக்காக இயேசு தம்மிடம் இருந்த யாவையும் கிரயமாக செலுத்தினார். அதுவே அவருடைய அன்பின் அளவு.

நாம் முன்பு சொன்னதுபோல, அந்த முத்தைக் குறித்த உவமையை பல்வேறு விதங்களில் விளக்கலாம். அந்த முத்தை, "ஒவ்வொரு மீட்கப்பட்ட ஆத்துமாவாகாவும்" விளக்குவது நியாயம் என்று நம்புகிறேன். இரட்சிக்கப்படுவதற்கு ஒரே ஒரு ஆத்துமாதான் இருந்தது என்றாலும் (முத்தை தேடும் வியாபாரியாக) இயேசு முழு கிரயத்தையும் செலுத்தி இருப்பார். மீட்கப்பட்ட ஆத்துமாவாக உங்கள் மதிப்பு என்ன என்பதை அறிய, இந்த உணர்த்துதல் உங்களுக்கு உதவும். நீங்களே விலையேறப்பெற்ற அந்த முத்து. அந்த முத்தை வாங்கினபோது வியாபாரிக்கு உண்டான மகிழ்ச்சியை நான் சில நேரங்களில் கற்பனை செய்வது உண்டு. விலையைக் குறித்து அவன் முறுமுறுக்கவில்லை. முத்து கிடைத்ததே என்ற திருப்தி மட்டுமே அவனுக்கு இருந்தது.

உங்கள் கற்பனைத்திறனை ஒரு நிமிடத்திற்கு, விடுதலையாய் வேலை செய்ய அனுமதிப்பீர்களா? தன் கையில் முத்தை வைத்திருக்கும் வியாபாரியை கற்பனை செய்ய மனதை அனுமதிப்பீர்களா? அதினோடு அவன் பேசுகையில் அவன் சொல்லக்கூடியதை சிந்தித்துப் பாருங்கள்: "இப்போது நீ என்னுடையது. நீ எனக்குச் சொந்தம். அதிக விலை செலுத்தினேன். ஆனால் அதைக் குறித்து கவலை இல்லை. நான்

இதுவரை கண்ட முத்துகளில் நீயே சிறந்தது. நீ முற்றிலும் அழகாய் இருக்கிறாய். நீ முற்றிலும் குறைவற்றது".

சுய-மதிப்பில் உங்களுக்கு எந்த பிரச்சனை இருந்தாலும், ஒரு நிமிடம் இயேசுவோடு ஆணி பாய்ந்த அந்தக் கரங்களில் நீங்கள் இருப்பதை கற்பனை செய்து பாருங்கள். "நான்தான் அந்த முத்து. அவர் எனக்காக மரித்தார். எனக்கான கிரயத்தை செலுத்தினார். இரட்சிப்படைவதற்கு உலகத்தில் வேறு யாரும் இல்லை என்றாலும், அவர் எனக்காக மட்டும் கிரயத்தை செலுத்தியிருப்பார்" என்று நீங்கள் சொல்லுங்கள்.

## ஒரு கறையும் இல்லை

வேதத்தின் புத்தகங்களில், உன்னதப்பாட்டில் சில மிக அழகான வார்த்தைகள் உள்ளன. மீட்கப்பட்ட ஆத்துமாவுக்கு, தேவன் பேசும் வார்த்தைகளாக, உன்னதப்பாட்டின் வார்த்தைகளைக் கூடுமானால் கற்பனை செய்து பாருங்கள். அல்லது சபைக்கு அது தேவன் பேசும் வார்த்தைகயாக நீங்கள் அதை விளக்க விரும்பலாம். ஆனால், அது தேவன் தனிப்பட்ட விதத்தில் உங்களோடு பேசுவதாக நீங்கள் எடுத்துக்கொண்டால், அது சுவாரசியமாக இருக்கும். உன்னதப்பாட்டு 1:15ல் இருக்கும் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள்:

> **என் பிரியமே! நீ ரூபவதி (அல்லது அழகுள்ளவள்); நீ ரூபவதி; உன் கண்கள் புறாக்கண்கள்.**

வேதத்தில் , புறா பரிசுத்த ஆவியானவருக்கு உருவகமாக உள்ளது. பரிசுத்த ஆவியானவரின் மூலம் காணும் கண்கள் நமக்கு உண்டென்று இயேசு கூறுகிறார். இயேசுவை மற்றவர்கள் காணாததுபோல் நாம் காண முடியும்.

நான் பறவைகளைக் குறித்து அறிந்த நிபுணன் அல்ல — ஆனால் ஒரே பொருளின் மேல் கவனம் வைக்கக்கூடிய இரண்டு கண்களைக் கொண்டது, பறவைகளில் புறா மட்டுமே — என்று எனக்குச் சொல்லப்பட்டது. மற்றெல்லா பறவைகளும் ஒரு கண் அல்லது மற்ற கண்ணைக் கொண்டுதான் பார்க்கும் என்கிறார்கள். ஆனால் புறா மட்டும் இரண்டு கண்களையும் கொண்டு ஒன்றையே பார்க்கும். தன் பிரியமானவளுக்கு "உன் கண்கள் புறா கண்கள்" என்று ஆண்டவர் சொல்லும்போது, நீ ஆவியானவரால் பார்க்க முடியும் என்று அர்த்தம் கொண்டிருக்கிறது. உன் பார்வையின் ஒருங்கிணைந்த கவனமாக நீ இயேசுவைக் காண முடியும்.

பின்பு, உன்னதப்பாட்டு 4:7ல்:

**என் பிரியமே! நீ பூரண ரூபவதி; உன்னில் பழுதொன்றுமில்லை.**

இது அழகாக இல்லையா? ஒரு கறையோ, குறையோ இல்லை. அப்படிதான் ஆண்டவர் நம்மைக் காண்கிறார் — அவருடைய அன்பின் கண்கள் வழியாக — நாம் நேசிக்கத்தக்கவர்கள் அல்ல என்றபோதிலும். "மிகவும் விலையுயர்ந்த ஒருவர்". அப்படிதான் நம்மைக் காண்கிறார்.

# அத்தியாயம் 3
# மீட்பின் கிரயம்

“விலையுயர்ந்த முத்தை” முந்தின அதிகாரத்தில் விவாதித்த பின், தொடர்ந்து நம்முடைய மீட்பின் கிரயத்தை நான் ஆராய்வு செய்ய விரும்புகிறேன். இயேசு செலுத்தின கிரயத்தை நான் பரிசீலிக்க விரும்புகிறேன்.

விலைக்கிரயம் செலுத்தி வாங்கினதை குறித்தும் அதற்கான ஊக்கத்தைக் குறித்தும் பேசினோம். ஆனால் இப்போது, கிரயத்திற்கு திரும்பி செல்வோம்.

## அவருடைய சொந்த இரத்தம்

புதிய ஏற்பாட்டின் பல பகுதிகளில், நம்முடைய மீட்பின் கிரயம் தெளிவாக கூறப்பட்டுள்ளது. இப்போதைக்கு இரண்டு பகுதிகளை மட்டும்

பார்ப்போம். முதலாவது அப்போஸ்தலர் 20:28, அங்கு பவுல் எபேசு சபையின் மூப்பர்களிடம் பேசுகிறார்:

**ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள்.**

தயவு செய்து கவனிக்கவும்: பவுல் இயேசுவுக்கு தேவன் என்ற குறிப்பான பட்டத்தை கொடுக்கிறார். தேவன் தனது சொந்த இரத்தத்தினால் சபையை வாங்கினார் என்று அவர் கூறுகிறார். எனவே அதை வாங்கும் விலை இயேசுவின் இரத்தமே.

இரண்டாவது பகுதி 1 பேதுரு–ன் புத்தகம், 1ம் அதிகாரம் 17ம் வசனம் துவங்கி:

**அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.**

சில கிறிஸ்தவர்கள் அந்த வசனத்தை கேட்டதே இல்லை. பேதுரு இங்கு ஒரு அடிமைத்தனத்திற்குரிய பயத்தை குறித்து சொல்லாமல், ஆழமான பொறுப்புணர்வை குறித்துப் பேசுகிறார். காரணம் என்ன? நம்மை மீட்டெடுப்பதற்காக செலுத்தப்பட்ட கிரயமே காரணம். நாம் ஒருபோதும் நம்மையே மலிவாக எண்ணக்கூடாது.

இளம் பெண்களிடம் பேசும்போது, நான் அடிக்கடி வெளிப்படையாகச் சொல்வேன், “உங்களை ஒருபோதும் மலிவாக ஆக்கிக்கொள்ளாதீர்கள். சரியான மனிதனைப் பெற நீங்கள் உங்களையே மலிவாக்கிக்கொள்ள வேண்டியதில்லை. பொதுவாகச் சொன்னால், நீங்கள் உங்களையே

மதிப்பிடும் அளவிற்கு அதிகமாக ஒரு மனிதன் உங்களை மதிக்கமாட்டான். இந்தக் கொள்கை அனைவருக்கும் பொருந்தும். நீங்களும் நானும் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டோம் என்பதை உணரும்போது, நம்மை மலிவாக்கிக்கொள்ள முடியாது.

18-19 வசனங்களில் நம்மை நாமே மலிவாக்கிக்கொள்ளாமல் இருக்க வேண்டியதின் காரணத்தைக் காண்கிறோம்:

> **உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.**

நம்மை மீட்க இயேசு கொடுத்த விலை, அவருடைய விலைமதிப்பற்ற இரத்தம் என்பதை மீண்டும் கவனியுங்கள். அவர் பழுதற்ற, குற்றமற்ற தேவ ஆட்டுக்குட்டி என்று அழைக்கப்படுகிறார். பழுது என்பது, ஒரு உயிரினம் பிறக்கும்போதே அதற்கு இருக்கும் என்பதை புரிந்துகொண்டேன். கறை என்பது பிறந்த பிறகு வரும் ஒன்று. ஆதிபாவம் இல்லாததால், இயேசு பழுதற்றவர், கறையற்றவர், அவர் எந்தப் பாவமும் இல்லாதவர். அவருடைய இரத்தமே நம்மை மீட்டுள்ளது.

## திரளான மீட்பு

மீட்பின் செயல்முறையைக் குறித்த கூடுதல் நுண்ணறிவுக்கு, சங்கீதம் 130:7லிருந்து ஒரு குறிப்புக்குத் திரும்புவோம்:

> **இஸ்ரவேல் கர்த்தரை நம்பியிருப்பதாக; கர்த்தரிடத்தில் கிருபையும், அவரிடத்தில் திரளான மீட்பும் உண்டு.**

மீட்பு என்பது திரும்பி வாங்கிக்கொள்வது என்பதைப் புரிந்துகொள்வது முக்கியம். இந்தப்பதிவு “திரளான மீட்பு” என்று கூறும் இடத்தில், “அதிகமான மீட்பு” “பொங்கிவரும் மீட்பு” என்ற வேறு சில மொழிப்பெயர்ப்புகளை ஆங்கில வேதாகம பதிப்புகள் அளிக்கின்றன. இந்தச் சொற்றொடர்களின் வெளிச்சத்தில், திரளான மீட்பு என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இயேசு அளவுக்கு அதிகமான கிரயத்தை செலுத்தினார் என்பதே அர்த்தம். நம்முடைய மதிப்பிலும் அதிகமாக அவர் செலுத்தினார்.

ஒருமுறை வானொலியில் ஒலிபரப்ப, ஒரு வாரத்திற்குரிய வேத போதனைகளை நான் ஆயத்தம் செய்யும்போது, மத வார்த்தைகளால், தேய்ந்து போகாத ஒரு நல்ல வார்த்தையை கண்டுபிடிக்க விரும்பினேன். சிறிது நேரத்திற்குப் பிறகு ஆடம்பரமான என்ற வார்த்தையைத் தெரிந்தெடுத்தேன். ஏனென்றால் அது மதவாதிகளால் அதிகம் பயன்படுத்தப்படுவதில்லை. இயேசு ஆடம்பரமாக செலுத்தினார். எல்லாவற்றையும் செலுத்தினார். எதையும் வைத்துக்கொள்ளவில்லை. தேவையான விலையிலும் அதிகம் செலுத்தினார்.

தேவனுடைய அன்பு ஆடம்பரமானது! அநேகர் தேவனைக் கஞ்சத்தனம் உள்ளவராக சித்தரிக்கின்றனர். ஆனால் அவர் கஞ்சத்தனம் உள்ளவர் அல்ல, அவர் மிகவும் தாராளமானவர். அவர் விரும்பும் ஒன்றைக் காணும்போது, முழு விலையையும் அதைவிட அதிகமும் செலுத்துவார்.

## இயேசு கிரயத்தை எப்படி செலுத்தினார்

இயேசு விலைக்கிரயத்தை எவ்வாறு செலுத்தினார் என்பதை இப்பொழுது சிந்திப்போம். இதற்கு நாம் லேவியராகமம் 16ல் இயேசு செலுத்தின பலியின் முன்னோட்டமாக திகழும் ஒரு பகுதிக்குத் திரும்புவோம். பழைய ஏற்பாட்டில் இயேசு மற்றும் அவரது தியாக பலியின் இரண்டு மாபெரும் தீர்க்கதரிசன சித்திரங்கள் உள்ளன.

அநேக சித்திரங்கள் உள்ளன. ஆனால் பஸ்கா ஆட்டுக்குட்டியும், பாவ நிவிர்த்தி செய்யும் நாளின் சித்திரங்களையே நான் பிரதானமானதாக கருதுகிறேன். 7ம் அதிகாரத்தில் நாம் பஸ்காவின் முக்கியத்துவத்தை ஆராய்வோம். ஆனால் இந்த அதிகாரத்தில், பாவ நிவிர்த்தி செய்யும் நாளை நான் ஆராய விரும்புகிறேன்.

## பாவ நிவிர்த்தி செய்யும் நாள்

லேவியராகமம் 16ல் விவரிக்கப்பட்டுள்ள, பாவ நிவிர்த்தி செய்யும் நாள் அன்றிலிருந்து இன்றுவரை அனுசரிக்கப்படும் ஒரு யூத விடுமுறை நாளாக உள்ளது. எபிரெயத்தில் "யோம் கிப்பூர்" அல்லது "யோம் கிப்பூரிம்" என்று அழைக்கப்படும். இது பாவ நிவிர்த்தியின் நாளுக்கான எபிரெய வார்த்தையாகும். அடிப்படையாக, இன்றுவரை பெரும்பாலான யூத மக்கள் அந்நாளில் சூரிய அஸ்தமனத்திலிருந்து அடுத்த நாள் சூரிய அஸ்தமனம் வரை உபவாசம் இருப்பார்கள்.

எருசலேமில் இது விசித்திரமான நாள். ஏனென்றால் சூரிய அஸ்தமனத்திற்கு முன் எல்லா போக்குவரத்தும் நின்றுவிடும். ஏதேனும் அவசர வாகனங்கள் தவிர வேறு போக்குவரவு ஒன்றும் இருக்காது. நகரத்தின் மேல் ஒரு பூரண அமைதல் வந்துவிடும். இதைப்போன்ற ஒன்றை நீங்கள் அனுபவிக்காவிட்டால், பூரண அமைதல் உள்ள பட்டணம் எப்படி இருக்கும் என்று நீங்கள் கற்பனைகூட செய்து பார்க்க முடியாது. நடு வீதியில் நீங்கள் நடக்கலாம், ஏனென்றால் போக்குவரத்து ஒன்றும் இருக்காது. எந்த வாகனமும் உங்களை மோதாது. பெரும்பான்மையாக இருக்கும் மதம் சாராத யூதர்கள்கூட, அந்தப் பாவ நிவிர்த்தி செய்யும் நாளுக்கு மரியாதை செலுத்துவார்கள்.

பாவ நிவிர்த்தி செய்யும் நாளின் நடவடிக்கைகளைக் குறித்துப் பேசுகையில் லேவியராகமம் 16:29 தேவனிடமிருந்து இந்த கட்டளையை பிறப்பிக்கிறது: "உங்கள் ஆத்துமாக்களை தாழ்மைப்படுத்துங்கள்".

இதை உபவாசமாக யூத மக்கள் எப்போதும் புரிந்து கொண்டுள்ளார்கள். யூத சமுதாயத்தில் அநேகர் உபவாசித்து, சுமார் 24 மணி நேரம் ஆகாரம் மற்றும் தண்ணீர்கள் இல்லாமல் இருப்பார்கள்.

## பாவத்திற்கான மறைவு

இந்த புனித நாளில் பல காரியங்கள் அனுசரிக்கப்பட்டாலும், பாவ நிவிர்த்தி செய்யும் நாளின் பிரதான செயலின் மேல் நான் கவனம் செலுத்த விரும்புகிறேன். இந்தப் புனித நாளின் சாராம்சமே, பிரதான ஆசாரியன் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள், தனக்காக, தன் குடும்பத்திற்காக மற்றும் இஸ்ரவேல் மக்களுக்காக, பாவங்களை நிவிர்த்தி செய்ய நுழைவதாகும். இது வருஷத்திற்கு ஒருமுறை மட்டுமே செய்யப்படும். உள்ளே செல்வதற்கு ஆசாரியன் எடுக்க வேண்டிய அடிகள், தெளிவாக பரிந்துரைக்கப்பட்டது. எந்த ஒரு கட்டமும் அதில் மாற்றப்பட்டாலோ, விடப்பட்டாலோ பிரதான ஆசாரியன் மரித்திருப்பார்.

லேவியராகமம் 16ம் அதிகாரம், 11ம் வசனத்தை வாசிப்போம்:

> பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையைக் கொண்டுவந்து, அதைக் கொன்று,

பழைய ஏற்பாட்டில் பாவநிவிர்த்தி என்பதற்குப் பயன்படும் எபிரெய வார்த்தையின் அர்த்தம் முடிபோடுதல் என்பதை புரிந்துகொள்வது அவசியம். அதே பெயர்ச்சொல்லின் இன்னொரு வடிவம் “தார் அல்லது கீல்” என்பதாகும் — அதைக் கொண்டு நோவாவும் அவரது குமாரரும் பேழையை நீர்புகாதபடி பூசினார்கள். பாவநிவிர்த்தியில் பாதுகாப்பின் மூடுதலை இது நமக்கு சித்தரிக்கிறது.

பழைய ஏற்பாட்டில் பூரண பாவநிவிர்த்தி அடையப்படவே இல்லை. நடந்தவை எல்லாம் பாவத்தை ஓர் ஆண்டிற்கு மட்டுமே மூடினது. இயேசு மரிக்கும்வரை அப்படிதான் இருந்தது. தன்னை பலியாக செலுத்துவதால் பாவத்தை நீக்க, இயேசு வந்தார். பழைய ஏற்பாட்டிலிருந்து புதிய ஏற்பாட்டை முற்றிலும் வித்தியாசப்படுத்தும் முக்கியமான அம்சங்களில் இது ஒன்று. இயேசுவின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பின் பாவத்திற்கு வேறு பலி தேவையில்லை.

## அவருடைய பிரசன்னத்திற்குள்

11–12 வசனங்களுக்குத் திரும்பும்போது:

> **பின்பு ஆரோன் தனக்காகவும் தன் வீட்டாருக்காகவும் பாவநிவிர்த்தி செய்யும்படி, தன்னுடைய பாவநிவாரணத்துக்கான காளையைக் கொண்டுவந்து, அதைக் கொன்று, கர்த்தருடைய சந்நிதியிலிருக்கும் பலிபீடத்தின்மேலுள்ள நெருப்புத்தணலினால் தூபகலசத்தை நிரப்பி, பொடியாக்கப்பட்ட சுகந்த தூபவர்க்கத்திலே தன் கைப்பிடிகள் நிறைய எடுத்து, திரைக்கு உட்புறமாகக் கொண்டுவந்து,**

திரைக்குள் செல்ல, பிரதான ஆசாரியனுக்கு இரண்டு பொருட்கள் அவசியமாக இருந்தன. வாசனை தூபம் போடப்பட்ட கலசம் அவன் கையில் இருக்க வேண்டும், அதினால் அவரையும், பரிசுத்த ஸ்தலத்தையும் புகையானது மூட வேண்டும். மற்றொரு பொருள், பலியில் இரத்தம் இருக்க வேண்டும். இந்தச் சித்திரத்தில் இருந்து தேவனுடைய பிரசன்னத்திற்குள் செல்லும் வழி, இரத்தத்தினாலும், தூபத்தினாலும் உண்டாக வேண்டும் என்று காண்கிறோம்.

ஒரு விதத்தில் இது நமக்கான மாதிரியாகும். ஆராதனை என்னும் தூபம் மற்றும் நமது சார்பாக சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தமும் இன்றி,

தேவனுடைய பிரசன்னத்திற்குள் நுழையும் உரிமை நமக்கு இல்லை. (15ம் அதிகாரத்தில் இதைத் தீர்க்கமாக பார்ப்போம்). பாவ நிவிர்த்தி நாளின் செயல்பாடுகள் 13–14 வசனங்களில் தொடர்கின்றன.

> **தான் சாகாதபடிக்குத் தூபமேகமானது சாட்சிப்பெட்டியின்மேல் இருக்கும் கிருபாசனத்தை மூடத்தக்கதாக, கர்த்தருடைய சந்நிதியில் அக்கினியின்மேல் தூபவர்க்கத்தைப் போடக்கடவன்.**
>
> **பின்பு காளையின் இரத்தத்திலே கொஞ்சம் எடுத்து, கீழ்ப்புறமாக நின்று, தன் விரலினால் கிருபாசனத்தின்மேல் தெளித்து, அந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்துக் கிருபாசனத்துக்கு முன்பாக ஏழுதரம் தன் விரலினால் தெளிக்கக்கடவன்.**

ஆசரிப்புக் கூடாரம் (பின்பு வந்த ஆலயமும்) கிழக்கை நோக்கி இருந்தன. ஆகவே கிருபாசனத்தின் கிழக்கு பக்கம்தான் அதின் முன்பக்கம். கிருபாசனத்தை நெருங்கி வரும்போதுதான் புகையினால் சூழப்பட்டிருப்பதை உறுதி செய்துகொண்டு, பிரதான ஆசாரியன் கிருபாசனத்திற்கு முன் ஏழுதரம் இரத்தத்தைத் தெளித்தான்.

அடுத்த அதிகாரத்தில், பாவ நிவிர்த்தி செய்யும் நாள் இயேசுவின் மரணத்தோடு தொடர்புடையது மற்றும் அவர் தமது இரத்தத்தை கிருபாசனத்திற்கு முன் ஏழுதரம் எப்படி தெளித்தார் என்பதையும் ஆராய்ந்து பார்ப்போம்.

# அத்தியாயம் 4
# ஏழு மடங்கு தெளித்தல்

ஏழு என்பது வேதாகமத்தில் மிக முக்கியமான எண். அந்த விதத்தில், பாவநிவாரண நாளில் கிருபாசனத்திற்கு முன்பாக ஏழுமுறை இரத்தம் தெளிக்கப்பட வேண்டும் என்பது இயேசுவின் அனுபவத்தில் ஒரு சரியான நிறைவேற்றத்தைக் கொண்டிருந்தது என்று நான் நம்புகிறேன். இந்த அத்தியாயத்தில், இயேசுவின் இரத்தம் ஏழுதரம் தெளிக்கப்பட்டதை நான் உங்களுடன் பகிர்ந்துகொள்வேன்.

இயேசு சிந்திய இரத்தத்தின் முக்கியத்துவத்தை குறைக்க முடியாது. இயேசுவின் இரத்தத்தை மதிக்காத எவரும் மாம்சத்துக்குரியவர்கள், அவர்கள் ஆவிக்குரியவர்கள் அல்ல என்று நான் நம்புகிறேன். இயேசுவின் இரத்தம் கிறிஸ்தவர்களுக்குத் தெளிவான பிரிவினையின் கோடு. இன்று திருச்சபையின் பெரும் பகுதியினர் இயேசுவின் இரத்தத்திற்கு எதிராகத் திரும்பியுள்ளனர். ஒரு பிரிவினர் இயேசுவின் இரத்தத்தைக் குறிக்கும் ஒவ்வொரு பாடலையும் விட்டுவிட்டு ஒரு புதிய

ATB_2023.indd 47 2/26/2024 4:20:39 PM

பாடல் புத்தகத்தை வெளியிட்டுள்ளனர். இயேசுவின் இரத்தம் இப்போது முக்கியமானது மட்டுமல்ல, வரவிருக்கும் ஆண்டுகளில் இது ஒரு முக்கிய பிரச்சினையாகவும் இருக்கும்.

இந்த அத்தியாயத்தில், நம்மை மீட்பதில் இயேசு சிந்திய இரத்தத்திற்கு கனம் அளிக்கும் விதமாக, இயேசு நமக்காக இரத்தம் சிந்திய ஏழு தனித்தனி சம்பவங்களை முறையாகப் பார்ப்போம்.

## முதல் தெளிப்பு: வியர்வை இரத்தமானது

கெத்செமனே தோட்டத்தில், இயேசு பிதாவின் சித்தத்திற்கு ஜெபத்தில் ஒப்புக்கொடுத்தபோது, லூக்கா 22:44 இந்தக் காட்சியை இவ்வாறாக விவரிக்கிறது:

> அவர் மிகவும் வியாகுலப்பட்டு, அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார். அவருடைய வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது.

அது வெப்பமான இரவு அல்ல. உண்மையில், அது குளிராக இருந்திருக்க வேண்டும். ஏனெனில் அது வசந்த காலத்தில் இருந்தது. இயேசுவுக்கு அதிக வியர்வை வெளியேற காரணம் என்ன? சரீர, ஆவிக்குரிய மற்றும் உணர்ச்சி ரீதியான வேதனையே அவருக்கு வியர்வையை ஏற்படுத்தியது. அதனால் அவரது வியர்வை இரத்தமாக மாறியது.

## இரண்டாவது தெளிப்பு: கோல்களால் அடிக்கப்பட்டது

இரண்டாவதாக, மத்தேயு 26:67ல் பதிவு செய்யப்பட்டுள்ளபடி, பிரதான ஆசாரியரான அன்னாவின் மன்றத்தில் இயேசு இருக்கும் காட்சிக்கு வருவோம்.

> **அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்; சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து:**

உங்களிடம் விளிம்பு குறிப்புடனான ஒரு வேதாகமம் இருந்தால், அது 'அல்லது தடிகளால்' என்று அங்கு நடந்த தாக்குதலைப் பற்றி கூறலாம். தனிப்பட்ட முறையில், இயேசு தடிகளால் தாக்கப்பட்டார் என்று நான் நம்புகிறேன். ஏனென்றால் பழைய ஏற்பாட்டில் அது எப்படி இருக்கும் என்பதை முன்னறிவிக்கும் ஒரு குறிப்பிட்ட தீர்க்கதரிசனம் இருந்தது. மீகா 5:1 கூறுகிறது:

> **சேனைகளையுடைய நகரமே, இப்போது தண்டுதண்டாகக் கூடிக்கொள்; நமக்கு விரோதமாக முற்றிக்கை போடப்படும்; இஸ்ரவேலுடைய நியாயாதிபதியைக் கோலினால் கன்னத்திலே அடிப்பார்கள்.**

என்னைப் பொறுத்தவரை, இது இயேசுவுக்கு என்ன நடந்தது என்பதற்கான தெளிவான கனிப்பு. சந்தேகமில்லாமல், நீங்கள் ஒருவரை கன்னத்தில் தடியால் அடித்தால், நிச்சயமாக இரத்தத்தை வரவழைக்கப் போகிறீர்கள்.

## மூன்றாவது தெளிப்பு: கசையடி

மத்தேயு 27:26க்கு திருப்பினால், மூன்றாவது சம்பவத்தைக் காண்கிறோம். இயேசுவை என்ன செய்வது என்று பொந்தியு பிலாத்து இறுதி தீர்மானம் எடுத்தபோது இது நடந்தது:

> **அப்பொழுது, அவன் பரபாசை அவர்களுக்கு விடுதலையாக்கி, இயேசுவையோ வாரினால் அடிப்பித்து, சிலுவையில் அறையும்படிக்கு ஒப்புக்கொடுத்தான்.**

**“அவரை கசையடிக்கச் செய்தபோது’ என்பது சிறந்த மொழிபெயர்ப்பாகும் என்பது எனது கருத்து. நிச்சயமாக கசையடிக்கும் வேலையை ஆளுநர் தாமே செய்யப்போவது இல்லை.**

**ரோம கசை என்பது சித்திரவதைக்கான ஒரு சிறப்பு கருவியாகும். அது ஒரு கைப்பிடி மற்றும் சாட்டையைக் கொண்டது. அந்தச் சாட்டையில் எலும்பு அல்லது உலோகத் துண்டுகள் பதிக்கப்பட்டு, ஒரு நபரின் சதையைக் கிழிக்கும் விதத்தில் வேண்டுமென்றே வடிவமைக்கப்பட்டிருக்கும். அந்த கசையடி என்பது இயேசுவின் இரத்தத்தின் மூன்றாவது தெளிப்பு.**

## நான்காவது தெளிப்பு: தாடி பிடுங்கப்பட்டது

**நான்காவது சம்பவம், இயேசு கசையடி அல்லது சாட்டையால் அடிக்கப்பட்டதுடன் மிக நெருக்கமாக செல்கிறது. நான்காவது தெளித்தல் பற்றிய விவரத்திற்கு, நாம் பழைய ஏற்பாட்டில் ஏசாயா தீர்க்கதரிசிக்கு திரும்ப வேண்டும். இயேசுவின் துன்பத்தின்போது அவருக்குள் என்ன நடந்தது என்பதைப் புதிய ஏற்பாடு நமக்குச் சொல்லவில்லை என்பதை நீங்கள் உணர்ந்திருக்கலாம் அல்லது உணராமல் இருக்கலாம். புதிய ஏற்பாட்டின் கணக்குகள் எல்லாம், என்ன நடந்தது என்பதைக் குறித்து, ஒரு புறநிலை படத்தை வழங்குகின்றன. இருப்பினும், இயேசுவின் வேதனையைப் பற்றிய நுண்ணறிவுக்காக நீங்கள் தீர்க்கதரிசிகளையும் சங்கீதங்களையும் படித்தால், இயேசு தனக்குள்ளே என்ன சகித்தார் என்பதைப் பற்றிய பல விவரங்களைக் கண்டுபிடிப்பீர்கள்.**

**பழைய ஏற்பாட்டில் அவரது சொந்த துன்பங்கள் என்னவாக இருக்கும் என்பதை மேசியாவின் ஆவி கனித்துள்ளது. உண்மையில், தீர்க்கதரிசிகள் தங்களுக்கு நடக்காத நிகழ்வுகளைப் பற்றி முதல் நபரில் பேசினார்கள். இவைகள் துன்பப்படும் தாசனிடமே நிறைவேறின. ஏசாயா 50:6 இல் உள்ள ஒரு தெளிவான உதாரணம் இங்கே:**

**அடிக்கிறவர்களுக்கு என் முதுகையும்,**

அவர் தன் முதுகை கொடுத்ததைக் கவனியுங்கள். இயேசு தனது சொந்த சித்தத்தாலும் விருப்பத்தாலும் முதுகைக் கொடுத்தார். இந்த உண்மையைப் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம் – அவர் போராடவில்லை. அவர் எதிர்க்கவில்லை. அவர் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை.

**தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக்கொடுத்தேன்; அவமானத்துக்கும் உமிழ்நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை. (அதுதான் கசையடி)...**

இந்தத் தீர்க்கதரிசனப் படம், இயேசுவைத் துன்புறுத்திய செயல்களில், அவர்கள் அவருடைய தாடியிலிருந்து முடிகளையும் பிடுங்கினார்கள் என்பதைக் காட்டுகிறது. அவ்வாறு செய்யும்போது, அந்தச் செயலின் மூலம் இரத்தத்தை வெளியே கொண்டு வந்திருக்க வேண்டும்.

## ஐந்தாவது தெளிப்பு: முட்களின் கிரீடம்

ஐந்தாவது சம்பவத்திற்கு, நாம் மத்தேயு 27, வசனம் 28-க்கு திரும்புவோம். அங்கு ரோம வீரர்கள் இயேசுவை கேலி செய்கிறார்கள்:

**அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை (அல்லது ஊதா) அவருக்கு உடுத்தி,**

இங்கே, ஊதா நிறம் என்ற வார்த்தையின் பயன்பாடு சிறப்பாக இருக்கும். ஏனென்றால் அது ராஜ பரம்பரையின் நிறமாகும். போர்ச்சேவகர்கள் அவரைக் கேலி செய்து, "நீர் ராஜாவாக இருந்தால் உமக்கு ராஜாவின் உடையைக் கொடுப்போம்" என்று கூறினர். முதலில், அவர்கள் இந்த ஊதா நிற ஆடையை அவருக்குக் கொடுத்தார்கள். அது

அவருடைய சொந்த இரத்தத்தால் கறைபட்டிருக்க வேண்டும். பின்னர் அவர்கள் அவருக்கு ஒரு கிரீடம் கொடுத்தார்கள் – ஆனால் அது முட்கிரீடம்.

ஒரு நிமிடத்திற்கு, இயேசுவின் பாவநிவிர்த்தியின் பூரணத்தை இன்னொரு அம்சத்தை நான் உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். அவர் மனிதகுலத்திற்காக மட்டும் அல்ல, மனிதனின் பாவம் இவ்வுலகில் ஏற்படுத்தின எல்லா விளைவுகளுக்காகவும் நிவிர்த்தி செய்தார். இந்த நிறைவேறுதலை நீங்கள் எவ்விதத்தில் பார்த்தாலும், அது குறைவற்றது.

எனவே, அவர் மீது ஊதா நிற அங்கியைப் போட்டுவிட்டு, அவரை முட்களினால் முடிசூட்டினார்கள். அடுத்து நடந்தவைகளை 28 – 30 வசனங்களில் வாசிக்கிறோம்:

> **அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, அவர் வஸ்திரங்களைக் கழற்றி, சிவப்பான மேலங்கியை அவருக்கு உடுத்தி, முள்ளுகளால் ஒரு முடியைப் பின்னி, அவர் சிரசின்மேல் வைத்து, அவர் வலதுகையில் ஒரு கோலைக்கொடுத்து, அவர் முன்பாக முழங்காற்படியிட்டு: யூதருடைய ராஜாவே, வாழ்க என்று அவரைப் பரியாசம்பண்ணி, அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்.**

கோலினாலும், கைகளினாலும் அந்த முட்களை அவருடைய தலையில் அவர்கள் அழுத்தினார்கள். உச்சந்தலை காயப்பட்டால் இரத்தம்அதிகமாகவெளியேறும்என்பதுஅறியப்பட்டஒன்று. இதைமனதில் சித்தரித்து பார்த்தால், தாடி மயிர் கொத்துக் கொத்தாக பிடுங்கப்பட்டு, கன்னத்தில் கோலால் அடிக்கப்பட்ட காயங்களுடன், உச்சந்தலையில் இருந்து இரத்தம் எல்லா பக்கமும் வடிய, வடிந்த இரத்தம் அவருடைய தாடியில் மீந்திருந்த முடிகளில் உறைய இயேசுகாட்சி அளிப்பார்.

ATB_2023.indd 52 2/26/2024 4:20:39 PM

ஏசாயா 52:14ல் வேதம் சொல்கிறது: '...மனுஷனைப்பார்க்கிலும் அவருடைய முகப்பார்வையும், மனுபுத்திரரைப்பார்க்கிலும் அவருடைய ரூபமும், இவ்வளவு அந்தக்கேடு அடைந்தபடியினாலே...' இந்த வசனத்தின் உண்மையான மொழிப்பெயர்ப்பு: 'அவர் மனித தோற்றத்தை இழந்தார்' என்பதாக இருக்கும். இயேசு சகித்த அந்தப் பாடுகளுக்குப் பின் அவர் மனித தோற்றம் இல்லாதவராய் மாறினார்.

எனவே அதுதான் ஐந்தாம் தெளிப்பு – முட்கிரீடம்.

## ஆறாவது தெளிப்பு: சிலுவையில் அறையப்படுத்தல்

ஆறாவது சம்பவத்திற்கு, உண்மையான சிலுவையின் மரணத்திற்கு நாம் வருகிறோம். இது மத்தேயு 27:35ல் விவரிக்கப்பட்டுள்ளது. அதிசயமாக இது வெறும் மூன்றே வார்த்தைகளில் கூறப்பட்டுள்ளது. தற்காலத்து எழுத்தாளராக இருந்தால், பல பத்திகளால், நடந்தவைகளை விவரித்து எழுதி இருப்பார்கள். ஆனால் வேதம் வெறும் 'அவரை சிலுவையில் அறைந்தார்கள்' என்று கூறுகிறது. சிலுவையில் அறையும் பழக்கத்தில் ஏற்படும் காயங்கள் நமக்குத் தெரியும். உயிர்த்தெழுதலுக்குப் பின் இயேசு தமது சீஷர்களுக்கு அழைப்பு விடுத்து தான் சிலுவையில் அறையப்பட்ட காயங்களைப் பார்க்கும்படி சொன்னதிலும் நாம் புரிந்துகொள்கிறோம். அவரைக் கொலை செய்தவர்கள் அவருடைய கைகளையும் கால்களையும் ஆணிகளால் துளைத்தனர். மறுபடியும் அவருடைய இரத்தம் அதிகமாக வழிந்தோடியது – குறிப்பாக அவருடைய கைகளிலிருந்து என்று நான் கருதுகிறேன்.

பொதுவாக, இன்றைய அறிஞர்கள் அவருடைய உள்ளங்கைகளைத் துளைத்ததாக நம்புகிறதில்லை. மாறாக ஆரம் மற்றும் உல்னா எலும்புகளுக்கு இடையில் உள்ள மணிக்கட்டில் ஆணி அடிக்கப்பட்டதாக

நம்புகிறார்கள். ஏனென்றால், மருத்துவரீதியாகப் பார்த்தால், உள்ளங்கைகளால் மட்டுமே உடல் எடையைத் தாங்குவது அவருக்கு மிகவும் கடினமாக இருக்கும். ஆனால் மணிக்கட்டின் மேல் பகுதியில் ஆணிகள் உள்ளே சென்றால், எடையைத் தாங்கும் வகையில் கார்பெல்ஸ் அல்லது மணிக்கட்டு எலும்புகளில் வலிமை இருக்கும். அவரது கைகள் மற்றும் கால்களைத் துளைப்பது அவரது இரத்தத்தின் ஆறாவது தெளிப்பாகும்.

## ஏழாவது தெளிப்பு: ஈட்டி

இயேசுவின் இரத்தத்தின் ஏழாவது மற்றும் கடைசி தெளிப்புக்காக, நாம் யோவான் 19ஐ குறிப்பிடுவோம். இயேசு ஏற்கனவே சிலுவையில் மரித்துவிட்டார். யோவான் 19:31 கூறுகிறது:

> அந்த நாள் பெரிய ஓய்வுநாளுக்கு ஆயத்தநாளாயிருந்தபடியினால், உடல்கள் அந்த ஓய்வுநாளிலே சிலுவைகளில் இராதபடிக்கு, யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கும்படிக்கும், உடல்களை எடுத்துப்போடும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள்.

சிலுவையில் அறையப்பட்ட ஒரு நபர் இன்னும் மரிக்கவில்லை என்றால், மரணதண்டனை செய்பவர்கள் கால்களை உடைத்து மரணத்தை விரைவாகக் கொண்டுவருவார்கள். இது விரைவாக மரணத்தை ஏற்படுத்தும். ஏனெனில், மூச்சு விடுவதற்காக, ஒரு நபர் தனது கால்களால் தனது உடலை உயர்த்த வேண்டும். கால்கள் உடைந்திருந்தால், அந்த நபர் தன்னைத்தானே எழுப்ப முடியாது, மூச்சுத்திணறலால் இறந்துவிடுவார்.

32–33 வசனங்களுடன் இச்சம்பவம் தொடர்கிறது:

> **அந்தப்படி போர்ச்சேவகர் வந்து, அவருடனேகூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய கால்களையும் முறித்தார்கள்.**
>
> **அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து, அவர் மரித்திருக்கிறதைக் கண்டு, அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை.**

சிலுவையில் அறையப்பட்டதால் ஏற்பட்ட காயங்களால் இயேசு உண்மையில் மரிக்கவில்லை. மாறாக, தள்ளப்படுதலினால் ஏற்பட்ட உடைந்த உள்ளத்தால் அவர் மரித்தார். வசனம் 34 கூறுகிறது:

> **ஆகிலும் போர்ச்சேவகரில் ஒருவன் ஈட்டியினாலே அவருடைய விலாவில் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டது.**

'தண்ணீர்' என்பது இருதயத்தைச் சுற்றி இருக்கும் திரவமாகும். இது ஈட்டியால் வெளியாக்கப்பட்டது. தொடர்ந்து படிக்கும்போது, இயேசுவின் சிலுவை பலியில் என்ன நடந்தது என்பதன் முழு துல்லியத்தை மற்றொரு விரிப்பில் காண்கிறோம். வசனங்கள் 35-36 தொடர்கிறது:

> **அதைக் கண்டவன் சாட்சி கொடுக்கிறான், அவனுடைய சாட்சி மெய்யாயிருக்கிறது; நீங்கள் விசுவாசிக்கும்படி, தான் சொல்லுகிறது மெய்யென்று அவன் அறிந்திருக்கிறான். அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை என்கிற வேதவாக்கியம் நிறைவேறும்படி இவைகள் நடந்தது.**

இயேசுவுக்கு நடந்த அனைத்தும், வேதத்தில் வெளிப்படுத்தப்பட்ட, தேவனால் முன்னமே தீர்மானிக்கப்பட்ட திட்டத்தின் நிறைவேற்றம். தேவன் ஒருகனம் கூட சொல்நிலைகளின் கட்டுப்பாட்டை இழக்கவில்லை.

**விடியற்காலம்மட்டும் அதில் ஒன்றும் மீதியாக வைக்காமலும், அதில் ஒரு எலும்பையும் முறிக்காமலும், பஸ்காவினுடைய சகல முறைமைகளின்படியும் அதை ஆசரிக்கக்கடவர்கள். (எண். 9:12 மற்றும் சங்கீதம் 34:20 ஐப் பார்க்கவும்)**

'அவருடைய எலும்புகளில் ஒன்றும் முறிக்கப்படுவதில்லை' என்ற அந்தச் சொற்றொடர் பஸ்கா ஆட்டுக்குட்டியைப் பற்றி கூறப்பட்டுள்ளது. இயேசு அனுபவித்த கொடுமைகள் மற்றும் துஷ்பிரயோகங்கள் இருந்தபோதிலும், அவருடைய எலும்புகள் எதுவும் உடைக்கப்படவில்லை.

**அல்லாமலும் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள் என்று வேறொரு வேதவாக்கியம் சொல்லுகிறது.**

**(யோவான் 19:37).**

அதைச் செய்தவர்கள் துன்மார்க்கர்கள், தேவனற்ற மனிதர்கள் என்றாலும் தேவனால் தீர்மானிக்கப்பட்ட ஒவ்வொரு விவரமும் எவ்வாறு சரியாகச் செயல்படுத்தப்பட்டது என்பதை இதிலிருந்து நீங்கள் பார்க்க முடிகிறதா? இயேசு கடந்து வந்த அனைத்தையும் கடந்து செல்ல நாம் அழைக்கப்படவில்லை என்பதை நீங்களும் நானும் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம். அப்படியிருந்தும், சில சமயங்களில் நம்மில் பெரும்பாலானோர் தீய சக்திகளுக்கும், நியாயமற்ற முறையில் நடத்தப்படுவதற்கும், ஒருவேளை மிருகத்தனத்துக்கும் ஆளாகிறோம். தேவன் அனுமதிப்பதைவிட யாராலும் எதுவும் செய்ய முடியாது என்பதை நினைவுபடுத்துவது நல்லது. அவர் இறுதிக் கட்டுப்பாட்டில் இருக்கிறார்.

இயேசுவின் இரத்தம் ஏழுமடங்கு தெளிக்கப்படுவதைப் பற்றிய நமது பரிசோதனையின் முடிவு இதுதான். நான் புரிந்துகொண்ட வரையில் (இது எப்போதும் உறுதியாக இருக்க முடியாத பகுதி), கிருபாசனத்தின் மேல் இரத்தம் தெளிக்கப்படுவது பின்னர் நடந்தது. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நாம் நுழையும் வழியைப் பற்றி அத்தியாயம் 15 இல் அறியும்போது, இதைக்குறித்து இன்னும் அறிந்துகொள்வோம்.

# அத்தியாயம் 5
# இரத்தத்தில் உயிர் உள்ளது

**இயேசு துன்பம் அனுபவித்ததில், ஏழுமுறை இரத்தம் சிந்தியதன் முக்கியத்துவத்தைப் பற்றி நாம் புரிந்து கொள்ள வேண்டியவை இன்னும் அதிகம் உள்ளது. இந்த அத்தியாயத்தில், இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டதன் முழு தாக்கங்களையும் புரிந்துகொள்ள உதவும். பழைய ஏற்பாட்டில் உள்ள இரண்டு பகுதிகளை நான் ஆராய விரும்புகிறேன்.**

## இரத்தத்தைத் தவிர்த்தல்

**முதல் உண்மை லேவியராகமம் 17–ஆம் அதிகாரத்தில் காணப்படுகிறது. லேவியராகமம் ஒரு மந்தமான புத்தகம் என்று சொல்வது எளிதாக இருக்கும். ஆனால் இந்தப் புத்தகத்தின் நடுவில், சத்தியத்தின் மிக அற்புதமான பொக்கிஷங்கள் உள்ளன.**

நான் பார்க்கிறபடி, தேவனுடைய மக்கள் எந்த நேரத்திலும் தாங்கள் உண்ணும் எந்த மிருகத்தின் இரத்தத்திலும் பங்குகொள்ளக்கூடாது என்பதே லேவியராகமத்தின் ஒரு வலுவான கருப்பொருள். அந்த அறிவுரை இன்றும் கிறிஸ்தவர்களுக்குப் பொருந்தும். நீங்கள் அதை உணருகிறீர்களா? இந்தத் தடையைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். ஏனென்றால் இந்த விஷயத்தில் அதிக அறியாமை உள்ளது.

அப்போஸ்தலர் 15இல், பிரத்தியேகமாக யூதர்களாக இருந்த ஆரம்ப கால சபையில், இயேசுவை நம்பும் புறஜாதிகளை என்ன செய்வது என்ற சிக்கலை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. ஒரு பிரிவினர், "சரி, அவர்கள் மோசேயின் சட்டத்தின் கீழ் வர வேண்டும், விருத்தசேதனம் செய்யப்பட வேண்டும், சட்டத்தைக் கடைப்பிடிக்க வேண்டும், யூதர்களைப் போல ஆக வேண்டும். அப்போதுதான் அவர்கள் காப்பாற்றப்பட முடியும்" என்று கூற, பவுல், பர்னபாஸ், பேதுரு மற்றும் யாக்கோபு ஆகியோர் இந்தப் பிரிவுக்கு எதிராக தங்கள் நிலைப்பாட்டை எடுத்தனர். அவர்கள், 'இல்லை, அது தேவையில்லை' என்றார்கள். பேதுரு "யூதர்களான எங்களால் சட்டத்தைக் கடைப்பிடிக்கவும் அதை பின்பற்றவும் முடியவில்லை. நம்மால் பின்பற்ற முடியாத ஒன்றை புறஜாதிகளை ஏன் பின்பற்ற வேண்டும்?" என்று சொன்னார்.

அப்போஸ்தலரின் நடபடிகளில் பதிவுசெய்யப்பட்ட முழு விவாதத்தையும் நாம் ஆராய்வது நல்லது என்றாலும், அப். 15:28-29 இல் சபையின் இறுதித் தீர்மானம் இதோ:

> அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்த ஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது; இவைகளுக்கு விலகி நீங்கள் உங்களைக் காத்துக்கொள்வது நலமாயிருக்கும். சுகமாயிருப்பீர்களாக என்று எழுதினார்கள்.

சொல்லப்போனால், திருச்சபையில் நாம் எடுக்க வேண்டிய தீர்மானம் அதுதான். பரிசுத்த ஆவிக்கும் நமக்கும் நன்றாகத் தோன்றும் தீர்மானம். சில நேரங்களில் நாம் பரிசுத்த ஆவியை விட்டு விடுகிறோம்.

> **எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும் வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டுமென்பதே.**

நான்கு தடைகள் கூறப்பட்டுள்ளன:

1. விக்கிரகத்திற்கு படைக்கப்படும் பொருட்கள்.
2. இரத்தத்தை உண்பது.
3. கழுத்து நெறிக்கப்பட்ட பொருட்கள். (ஏன் கழுத்து நெறிக்கப்பட்டவைகள்? ஏனெனில் கழுத்தை நெறித்தால், அதில் இரத்தம் தங்கி இருக்கும்.)
4. பாலியல் ஒழுக்கக்கேடு.

இரத்தம் உட்கொள்வது பாலியல் ஒழுக்கக்கேட்டுடன் அதே பிரிவில் வைக்கப்படுவதை நீங்கள் கவனிப்பீர்கள். மிகத் தெளிவாக, நம்முடைய அளவுகோல்கள் எப்போதும் தேவனுடைய அளவுகோல்களைப்போல் இருப்பதில்லை. உலகின் சில பகுதிகளில், மக்கள் இரத்தப்பொரியல் என்று அழைக்கப்படுவதை உண்பார்கள். நான் புரிந்துகொண்டபடி, இது கிறிஸ்தவர்களுக்கு முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. இரத்தத்தை உண்பது, தேவனின் பார்வையில் பாலியல் ஒழுக்கக்கேடுக்குச் சமமானது.

## உயிர் இரத்தம்

இரத்தத்திலிருந்து விலகியிருப்பதன் தற்போதைய, புதுப்பித்த முக்கியத்துவத்தைப் பார்த்த பிறகு, இரத்தத்தில் பங்குகொள்ளாமல்

இருக்கும் பிரச்சனையைக் கையாளும் லேவியராகமம் 17ஐப் பற்றிய நமது படிப்பைத் தொடரலாம். இந்த நடைமுறையைத் தவிர்ப்பது குறித்து பல்வேறு வேத விதிமுறைகள் கொடுக்கப்பட்டுள்ளதையும், அவற்றின் பின்னணியில் உள்ள காரணங்களையும் நாம் காண்கிறோம்.

லேவியராகமம் 17ன் 10ம் வசனத்தில், மோசே மூலம் கர்த்தர் கூறுகிறார்:

> **இஸ்ரவேல் குடும்பத்தாரிலும் உங்களுக்குள் தங்கும் அந்நியர்களிலும் எவனாகிலும் இரத்தம் என்னப்பட்டதைப் புசித்தால், இரத்தத்தைப் புசித்த அவனுக்கு விரோதமாக நான் என் முகத்தைத் திருப்பி, அவன் தன் ஜனத்தில் இராதபடிக்கு அவனை அறுப்புண்டுபோகப் பண்ணுவேன்.**

11ம் வசனத்தில், கர்த்தர் காரணத்தைத் தருகிறார், இந்தக் காரணமும் வேதத்தின் மிக அற்புதமான தீர்க்கதரிசனங்களில் ஒன்றாகும்:

> **மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.**

“மாம்சத்தின் உயிர்” என்று சொல்லும் இடத்தில், “மாம்சத்தின் ஆத்துமா நெஃபெஷ்தி” என்று எபிரேயத்தில் கூறப்படுகிறது. ஆக, இரத்தத்தில் இருப்பது ஆத்துமாவின்–உயிர். இது நமக்குத் தெரிந்ததை உறுதிப்படுத்துகிறது – இரத்த ஓட்டம் நிறுத்தப்படும்போது, உடலில் உயிர் இருக்காது.

முதலில், வேதப்பூர்வ ஆணை வெறுமனே ஒரு ஒழுங்குமுறை போல் தெரிகிறது: நீங்கள் இரத்தத்தைப் பாவநிவர்த்தி செய்யப் பயன்படுத்த போகிறீர்கள். எனவே நீங்கள் அதில் பங்குகொள்ள வேண்டாம்.

ATB_2023.indd 60 2/26/2024 4:20:39 PM

ஆனால் அது தீர்க்கதரிசனமானது, ஏனென்றால் கர்த்தர், ‘உங்கள் ஆத்துமாக்களுக்குப் பரிகாரம் செய்வதற்காக சிலுவையின் பலிபீடத்தின் மேல் அதை உங்களுக்குக் கொடுத்தேன்....’ என்று கூறுகிறார்.

சிலுவையில், இயேசு தம் இரத்தத்தில் இருந்த, தம்முடைய ஆத்தும–ஜீவனை, நம்முடைய ஆத்துமாக்களுக்கான மீட்பின் விலையாகக் கொடுத்தார். கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல், எரிப்பதற்கு எரிவது, அடிப்பதற்காக அடிப்பது, ஆன்மாவுக்கு ஆன்மா என்ற மீட்பின் சட்டத்தின் மாதிரியை இது பின்பற்றுகிறது. சிலுவையில், மனிதகுலத்தின் ஒவ்வொரு ஆத்துமாவையும் மீட்க இயேசு தம் ஆத்துமாவைக் கொடுத்தார்.

## தாழ்மையின் பாதை

ஏசாயா 53–இல் உள்ள பெரிய பாவநிவிர்த்தி அத்தியாயத்தின் அறிமுகமான ஏசாயா 52–இன் கடைசி வசனங்களை ஒருகனம் பார்ப்போம். ஏசாயா 52–இன் 13வது வசனம் கர்த்தருடைய ஊழியக்காரனாகிய துன்பம் நிறைந்த ஊழியரைப் பற்றிய அறிமுகமாகும். அது கூறுகிறது:

> **இதோ, என் தாசன் ஞானமாய் நடப்பார், (அவர் தேவனுடைய முழு சித்தத்தையும் நிறைவேற்றுவார்); அவர் உயர்த்தப்பட மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்.**

அதைப் போலவே, பிலிப்பியர் 2:9 கூறுகிறது:

> **ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,**

ஏசாயா 53 இல் இயேசுவின் அவமானம் சித்தரிக்கப்படுவதற்கு முன்பு, ஏசாயா 52 ஆம் அத்தியாயத்தின் முடிவில் தேவனுடைய வார்த்தை அவருடைய இறுதி மேன்மையை வாக்களித்தது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

## தாழ்மையின் படிக்கட்டு

தாழ்மையைத் தொடரும் கனம் மற்றும் மகிமையின் இந்தப் பாதை பிலிப்பியர் 2 இல், வசனம் 5 தொடங்கி அழகாக விவரிக்கப்பட்டுள்ளது:

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;...**

இயேசு அனுபவித்த ஏழுமடங்கு அவமானம் இதோ:

**...அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,..**

ஒரு சிறந்த மொழிபெயர்ப்பு: 'தேவனுடன் சமத்துவத்தை எட்டிப்பிடிக்க வேண்டிய ஒன்றாக கருதவில்லை' என்பதாகும். அவர் தெய்வீக, நித்திய உரிமையாலே அதைக் கொண்டிருந்தார் – எனவே அவர் அதை எட்டிப்பிடிக்க தேவையில்லாதிருந்தது.

**. . . தம்மைத்தாமே வெறுமையாக்கி,. . .**

கிரேக்கத்தில் கூறப்படுள்ளது. உண்மையில், அவர் தன்னைத்தானே வெறுமை ஆக்கினார். சார்லஸ் வெஸ்லியின் பாடல்களில் ஒன்று, 'முற்றும் முடிய, அவர் அன்பைத் தவிர மற்ற அனைத்தையும் துறந்தார்' என்று கூறுகிறது.

**. . . அடிமையின் ரூபமெடுத்து,. . .**

அது இரண்டாவதுபடி கீழே. அவர் தேவனுடைய குமாரனாக இருந்தாலும், இயேசு ஒரு வேலைக்காரர் ஆனார். 'மனித சாயல் ஆனார்.' தேவதூதர்களை விட சற்று தாழ்ந்த மனிதனின் நிலைக்கு வந்தார்.

**மனுஷர் சாயலானார்,**

அவருக்குச் சிறப்புத் தன்மை எதுவும் இல்லை. அவர் ஒரு சாதாரண மனிதர், தச்சரின் மகன்.

**கீழ்ப்படிந்தவராகி...**

தாழ்மையான மனிதரானார். அவர் ஒரு ஆசாரியனும் அல்ல ஆட்சியாளரும் அல்ல. அவர் உழைக்கும் மனிதராக இருந்தார். பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு போதகர் தேவனிடம், 'ஆண்டவரே, உமது கைகளை எனக்குக் காட்டுங்கள்' என்று ஜெபித்தாராம். கர்த்தர் பதிலளித்து, அவருடைய கைகளை அவருக்கு தரிசனத்தில் காட்டினார். அவர் கைகளில் ஆணியின் அச்சிட்டுகளைப் பார்க்க எதிர்பார்த்தார். ஆனால் அவைகளைக் காணவில்லை. அவர் ஒரு சாதாரண உழைக்கும் மனிதனின் கைகளைப் பார்த்தார், அது அவரை மிகவும் கவர்ந்தது. இயேசு ஒரு தாழ்மையான, சாதாரண மனிதர்.

**...மரணபரியந்தம்..., கீழ்ப்படிந்தவராகி...**

அது ஆறாவது கீழ்நோக்கிய படியாகும். இறுதி படி இதோ:

**...சிலுவையின் மரணம்.**

அந்த கீழ்நோக்கிய படிகளை சாராம்சப்படுத்த, அதை இப்படி சொல்லலாம் :

1. தம்மைத்தாமே வெறுமையாக்கினார்.
2. ஒரு அடிமை: அவர் தேவனுடைய குமாரனாக இருந்தாலும்.
3. மனித சாயலில் வந்தார்: அவர் மனித ரூபத்தில் இருந்தார், ஆனால் அவர் ஆதாமின் முழுமையில் இருந்திருக்க முடியும்.

4. மனித ரூபமாய் காணப்பட்டார்: "நீர் கிறிஸ்து" என்று பேதுரு சொன்னபோது, இயேசு, 'மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை' என்றார். அவர் யார் என்பதைக் குறிக்க அவரது வெளிப்புற தோற்றத்தில் எதுவும் இல்லை.

5. ஒரு தாழ்மையான மனிதர்: ஒரு தச்சரின் மகன். தச்சர்களை எந்த வகையிலும் இழிவுபடுத்தவில்லை. இயேசு உழைக்கும் மனிதராக இருந்தார்.

6. மரணப்பரியந்தம் கீழ்ப்படிதல்: அவர் நோய்வாய்ப்பட்டு இறந்திருக்கலாம், ஆனால் அப்படி நடக்கவில்லை.

7. சிலுவையில் மரணம்: ஒரு குற்றவாளியின் மரணம், வேதனையிலும் அவமானத்திலும்.

இவை கீழ்நோக்கிய ஏழுபடிகள். ஆனால் இதைப் பின்தொடர்ந்து, பவுல் மேலே செல்லும் ஏழுபடிகளைக் குறிப்பிடுகிறார். வேதத்தின் அமைப்பு எவ்வளவு சரியானது என்பதை உங்களால் பார்க்க முடிகிறதா? இவை வெறும் கடிதங்களாக எழுதப்பட்டவை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பவுல் ஒரு இறையியல் திட்டத்தை உட்கார்ந்து யோசித்து எழுதவில்லை. ஒரு குறிப்பு வரைபடம் கூட போடாமல் இருந்திருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அவரை முழு துல்லியத்துடன் வழிநடத்தினார்.

## மகிமைக்கு உயர்த்தும் படிக்கட்டு

பிலிப்பியர் 2, வசனம் 9ல் ஒரு மிக முக்கியமான வார்த்தை இருப்பதைக் கவனியுங்கள்: 'ஆதலால்.' எதினால்? இயேசு தம்மைத் தாழ்த்தினதினால்.'தன்னை உயர்த்துகிறவன் எவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்' என்று இயேசுவே

சொன்னதைக் கண்டிருக்கிறோம். அந்த உண்மை அனைவருக்கும் பொருந்தும்.

இந்தக் கொள்கையின் இரண்டு தெளிவான எடுத்துக்காட்டுகள் இயேசுவும் சாத்தானும். சாத்தான் (முதலில் லூசிபராக இருந்தவன்) தன்னை உயர்த்தினான், தனக்கு உரியதல்லாத ஒன்றை எட்டிப் பிடிக்க முயற்சித்து, விழுந்தான். மறுபுறம், இயேசு, தேவனுக்குச் சமமாய் இருக்கும் தகுதியுடையவராக இருந்தார். ஆனால் தாமாக முன்வந்து அதைத் துறந்து, கீழே இறங்கினார் – மகிமையினால் உயர்த்தப்பட்டார்.

ஆதலால் இங்குக் குறிப்பிட்டுள்ளார் – அது அவர் தம்மைத்தாமே தாழ்த்தினதைக் குறிக்கிறது. பிரியமான குமாரன் என்பதினால் இயேசு இப்பிரபஞ்சத்தில் தமது ஸ்தானத்தைப் பெறவில்லை; அவர் சம்பாதித்தார். அதற்குத் தகுதி உள்ளவரானார். எப்படி? தம்மைத் தாமே தாழ்த்தினத்தினால்.

இப்போது இயேசுவின் அனுபவத்தில் உயர்வின் ஏழுபடிகளைப் பார்ப்போம்.

> **ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,...**

நீங்கள் ஏசாயா 52:13–க்கு திருப்பினால், 'அவர் உயர்த்தப்பட்டு மேன்மையும் மகா உன்னதமுமாயிருப்பார்' என்று காண்பீர்கள். 'அவர் ஆபிரகாமைவிட உயர்ந்தவராகவும், மோசேயைவிடவும், தேவதூதர்களைவிடவும் உயர்ந்தவராகவும் ஆக்கப்படுவார்' என்று ரபீக்கள் விளக்குகிறார்கள் என்று நினைக்கிறேன். பிலிப்பியர் 2:9 க்குத் திரும்புங்கள்:

> **ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி,...**

கிங் ஜேம்ஸ் பதிப்பு 'ஒரு நாமம்' என்று கூறுகிறது. ஆனால் உண்மையான மொழிப்பெயர்ப்பு வெறும் 'நாமம்' தான். எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்.

> **இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்.**

இயேசுவின் உயர்வின் சாராம்சம் இதோ:

1. மென்மையாய் உயர்த்தப்பட்டு
2. எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்
3. அவர் நாமத்திற்கு முன் எல்லா முழங்கால்களும் முடங்கும்
4. வானத்தில் உள்ளவை
5. பூமியில் உள்ளவை
6. பூமியின் கீழானவை
7. எல்லா நாவும் அவரை அறிக்கை பண்ணும்

அந்த அமைப்பு எவ்வளவு குறைவற்றது என்று பார்க்கிறீர்களா? ஏழுபடிகள் கீழே மற்றும் ஏழுபடிகள் மேலே.

## பாவத்திற்கான காணிக்கை:

'மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது' என்று கூறுகிற லேவியராகமம் 17:11-க்கு சரியாக பொருந்தும் ஏசாயா 53, வசனம் 12க்கு இப்போது செல்லலாம். ஏசாயா 53:12 கூறுகிறது:

> அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து...

அவர் தனது ஆத்துமாவை எப்படி மரணத்தில் ஊற்றினார்? எதன் மூலம்? அவரது இரத்தத்தின் மூலம். அவர் தனது இரத்தத்தின் மூலம் தனது ஆத்துமாவைக் கொடுத்தார். இயேசு தம்முடைய இரத்தத்தின் கடைசித் துளி வரையிலும் கொடுத்தார் என்று நான் உண்மையாகவே நம்புகிறேன்—அவர் தம்முடைய முழு ஆத்துமாவையும் ஒரே, இறுதியான, அனைத்திற்கும் போதுமான பாவநிவாரண பலியாக உலகிற்காகக் கொடுத்தார்.

ஏசாயா 53:10 கூறுகிறது:

> கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது,...

அந்தக் கருத்தின் மற்றொரு மொழிப்பெயர்ப்பு, 'அவரது ஆத்துமா தன்னை பாவநிவாரண பலியாக செய்யும்போது'. அவருடைய ஆத்துமாவே இறுதிப் பாவநிவாரண பலியாக இருந்தது, அவர் தனது ஆத்துமாவை அவருடைய இரத்தத்தின் மூலம் ஊற்றினார்.

வேதம் எவ்வளவு துல்லியமானது, எவ்வளவு சரியானது என்பதை நீங்கள் பார்க்கலாம் என்று நம்புகிறேன். அதன் ஒவ்வொரு பகுதியும் ஒன்றாக பொருந்துகிறது. எந்த மனித மனமும் இப்படி ஒரு படைப்பை உருவாக்கியிருக்க முடியாது. மோசே எழுதியது, ஏசாயா எழுதியது

மற்றும் பவுல் எழுதியது ஆகியவை முற்றிலும் ஒத்துப்போகின்றன – பல நூற்றாண்டுகளால் பிரிக்கப்பட்ட எழுத்தாளர்கள். என் அபிப்ராயத்தில், அதன் துல்லியத்தின் வெளிச்சத்தில், வேதத்தை நம்பாதது முட்டாள்தனம் என்று நான் நினைக்கிறேன். தேவனுடைய வார்த்தையைப் புறக்கணிக்கும் பலர் தாங்கள் புத்திசாலிகள் என்று நினைக்கிறார்கள், ஆனால் அவர்கள் உண்மையில் முட்டாள்கள்.

அடுத்த அத்தியாயத்தில், இயேசுவின் சிந்தப்பட்ட இரத்தத்தை நமக்காக எவ்வாறு சுதந்தரிப்பது என்பதை நாம் கற்றுக்கொள்வோம்.

# அத்தியாயம் 6
# இரத்தத்தை சுதந்தரிப்பது எப்படி

இயேசுவின் சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலம் நமக்காக வழங்கப்பட்டுள்ளதை எவ்வாறு சுதந்தரிப்பது என்று நாம் சிந்திக்கும்போது, எனக்குப் பிடித்தமான பகுதிகளில் ஒன்றான வெளிப்படுத்துதல் 12:11ஐ முன்னிலைப்படுத்த விரும்புகிறேன்:

> மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.

மேற்கொள்ளுகிறவர்களின் இந்தப் பட்டியலுக்கு, ஜீவனை இழந்தவர்கள் மட்டுமே தகுதி பெறுகிறார்கள். இயேசுவைப் பின்பற்றுவதற்கான படிகள் லூக்கா 9:23-இல் விவரிக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு நினைவிருக்கிறதா? உன்னையே வெறுத்து உன் சிலுவையை

தினமும் எடுத்துக்கொள். உன் வாழ்க்கையை வைத்துவிட்டு புதிய வாழ்க்கையைத் தேடு. வெளிப்படுத்துதல் 12:11–ல் யோவான் குறிப்பிடும் நபர்கள் இதைச் சரியாகச் செய்தவர்கள். தங்கள் ஜீவனைக் கொடுப்பதன் மூலம், அவர்கள் சாத்தானை தோற்கடிக்க தகுதி பெறுகிறார்கள்.

பிரசங்கத்திலும், ஜெபத்திலும் எல்லாவிதமான ஆவிக்குரிய வார்த்தைகளை பயன்படுத்தும் அர்ப்பணிப்பு இல்லாத கிறிஸ்தவர்களைப் பற்றி சாத்தானுக்குச் சிறிதும் பயமில்லை. அவர்கள் உண்மையில் சாத்தானின் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்துவதில்லை. ஜீவனைக் கொடுத்த உறுதியான கிறிஸ்தவர்களைக் குறித்து மட்டுமே அவனுக்கு பயமுண்டு.

“மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல்” என்று வேதம் கூறும்போது, அவர்களைப் பொறுத்தவரை, உயிருடன் இருப்பது அவர்களின் முதல் முன்னுரிமை அல்ல. அவர்கள் வாழ்ந்தாலும் வாழாவிட்டாலும் தேவனுடைய சித்தத்தைச் செய்வதே அவர்களுக்கு முதலிடம். தேவனுக்கு உண்மையாக இருக்க வேண்டும் என்பதே அவர்களின் மிக முக்கியமான கடமை.

## சாத்தானை வானத்திலிருந்து துரத்துதல்

வெளிப்படுத்துதல் 12:11க்குப் பின்வரும் வசனம் ஒரு சுவாரஸ்யமான வெளிப்பாட்டைக் கொண்டுவருகிறது:

> **ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள். பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ, பிசாசானவன் தனக்குக் கொஞ்சக்காலமாத்திரம் உண்டென்று அறிந்து, மிகுந்த கோபங்கொண்டு, உங்களிடத்தில் இறங்கினபடியால், உங்களுக்கு ஆபத்துவரும் என்று சொல்லக்கேட்டேன்.**

இந்த வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள தருணத்தில், வானம் சுத்திகரிக்கப்பட்டுவிட்டது – 'வானங்களே, களிகூருங்கள்.' ஆனால் பூமியே எச்சரிப்படை! ஏன்? ஏனென்றால் இப்போது பிசாசு வானத்தில் இல்லை. அவன் பூமியிலேயே இருக்கிறான். எல்லாப் பொல்லாப்பையும் செய்து, தன்னால் இயன்ற எல்லாத் தீமைகளையும் செய்ய, ஒரு சில வருடங்கள் மட்டுமே தனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை அறிந்து பூமிக்கு வந்திருக்கிறான்.

## குறுகிய காலம்

என்னைப் பொறுத்தவரை, பூமியில் பிசாசு இருக்கும் காலம் தானியேலின் 9ம் அதிகாரத்தின் எழுபது வாரங்கள் தீர்க்கதரிசனத்துடன் நெருக்கமாக தொடர்புடையது என்பது தெளிவாயிருக்கிறது. அது ஒரு வாரம் முழுவதுமா அல்லது பாதி வாரமா என்பதைக் குறித்து கருத்து தெரிவிக்க நான் ஆயத்தமாய் இல்லை. ஆனால் வெளிப்படுத்துதல் 12:12ல் நாம் ஒரு குறிப்பிட்டக் காலத்திற்கு வந்திருக்கிறோம் என்பது தெளிவாகிறது. தீர்க்கதரிசனத்தின் மாணவனான பிசாசு அதை நன்கு அறிவான். அவன் வானத்திலிருந்து பூமிக்கு வரும்போது, தன் பொல்லாப்புகளைச் செய்ய மூன்றரை ஆண்டுகள் மட்டுமே இருப்பதை அவன் அறிவான்.

மாற்கு 13:20ல் இயேசு கூறுகிறார், "கர்த்தர் அந்நாட்களைக் குறைத்திராவிட்டால், ஒருவனாகிலும் தப்பிப்போவதில்லை; தாம் தெரிந்துகொண்டவர்களினிமித்தமோ, அவர் அந்த நாட்களைக் குறைத்திருக்கிறார்." தத்துவ அளவில் இது மூன்றரை வருடங்கள் என்றாலும், முடிவில் குறைந்தது சில நாட்களாவது குறைக்கபட போகிறது. இருப்பினும், தன்னைக் கட்டி முடிவில்லாத குழியில் அவன் அடைக்கப்படும் முன்னால், பிசாசு அந்தக் குறுகிய காலத்தில் அதிகபட்ச தீங்கைச் செய்ய பிரயாசப்படப் போகிறான்.

வெளிப்படுத்தல் 12:11ஐ நாம் திரும்பிப் பார்த்தால், பூமியிலுள்ள விசுவாசிகள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், அவர்களுடைய சாட்சியின் வார்த்தையினாலும் சாத்தானை ஜெயிக்கிறார்கள் என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். பூமியில் உள்ள விசுவாசிதான் இறுதியில் பிசாசை வானத்திலிருந்து இறக்கிவிடுகிறவர்கள் என்பதை நீங்கள் பார்க்கிறீர்களா? தூதர்கள் அல்ல. தானியேலுக்குச் செய்தது போலவே அவர்களுக்கும் தங்கள் பங்கு உண்டு. ஆனால் இறுதியில், பூமியிலுள்ள விசுவாசிகளே சாத்தானை வீழ்த்துவதில் இறுதித் தோல்வியை அவனுக்கு கொடுக்கப்போகிறார்கள்.

அது உங்களை நன்றாக உணர வைக்கவில்லையா? இது பிரமாண்டமானது என்று நினைக்கிறேன். ஆனால் இங்கு நாம் உணர வேண்டிய மிக முக்கியமான ஒரு விஷயம் இருக்கிறது. நீங்கள் வகிக்கும் முக்கியப் பங்கைக் குறித்து அறியாமல் இருக்க பிசாசு விரும்புகிறான். அவன் விசுவாசிகளை அறியாமையில் வைத்திருக்கும்வரை, தேவன் அவர்களுக்குச் செய்ய நியமித்ததை அவர்கள் செய்ய மாட்டார்கள். ஆகவே, இந்த ஒரு உண்மையைப் பற்றி நம்மை மறந்துவிட செய்ய, பிசாசு தன் வல்லமையால் எல்லா வகையிலும் போராடுகிறான்: சாத்தானை வானத்தில் இருக்கும் அவனுடைய இடத்திலிருந்து வீழ்த்தக்கூடிய ஆவிக்குரிய ஆயுதங்களைத் தேவன் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

நாம் இன்னும் விவரங்களுக்குள் செல்வதற்கு முன், 2 கொரிந்தியர் 10:4-5 இலிருந்து இந்த வசனத்தை நாம் நினைவுபடுத்த வேண்டும்:

> எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக் கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது.
>
> அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும்

**நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்.**

நமக்குக் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய ஆயுதங்கள், தேவனையும் அவருடைய ராஜ்யத்தையும் எதிர்க்கும் ஒவ்வொரு உயர்ந்த காரியத்தையும் வீழ்த்த நமக்கு உதவும். தேவனை எதிர்க்கும் கடைசி, இறுதி, மிக உயர்ந்த காரியம் வானமண்டலங்களில் சாத்தானின் ராஜ்யமே. ஆச்சரியப்படும் விதமாக, அதை வீழ்த்த நமக்கு உதவும் ஆயுதங்களைத் தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ளார்.

## தேவனுடைய சேனை

தேவனுடைய சேனையில் வீரர்களாய் இருப்பதைப் பற்றி கிறிஸ்தவர்கள் தவறாமல் பேசுவார்கள். ஆனால் நம்மில் பலருக்கு ஒரு சிப்பாய் என்றால் என்ன என்பது பற்றி மிகவும் தெளிவற்ற மற்றும் உணர்ச்சிகரமான யோசனையே உள்ளது. நான் குறிப்பிட்டது போல், எனது சொந்த விருப்பமின்றி, இரண்டாம் உலகப் போரில் நான் ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டிஷ் இராணுவத்தில் சிப்பாயாக இருந்தேன். நான் கட்டாயப்படுத்தப்பட்டபோது, கட்டளை அதிகாரியிடமிருந்து, 'உங்கள் உயிரை நீங்கள் இழக்க மாட்டீர்கள் என்று நாங்கள் உத்தரவாதம் அளிக்கிறோம்' என்று ஒரு சிறிய சான்றிதழைப் பெறவில்லை. எந்த இராணுவ வீரரும் கொல்லப்படமாட்டோம் என்ற நிபந்தனையுடன் இராணுவத்தில் சேர்ந்ததில்லை. உண்மையில், ஒரு குறிப்பிட்ட அர்த்தத்தில், ஒரு சிப்பாய் இராணுவத்தில் சேரும்போது, எந்த நேரத்திலும் முன்நிபந்தனைகளில் ஒன்று அவர் அல்லது அவள் கொல்லப்படுவதற்கான சாத்தியத்தை உறுதிப்படுத்துகிறது.

தேவனின் படையிலும் அப்படித்தான். நாங்கள் உயிரைக் கொடுக்க வேண்டியது இருக்காது என்பதற்கு உங்களுக்கும் எனக்கும்

எந்த உத்தரவாதமும் இல்லை. தங்கள் உயிரைக் கொடுக்க பயப்படாதவர்களைப் பார்த்து சாத்தான் பயப்படுகிறான். எல்லாவற்றிற்கும் மேலாக, வாழ்க்கை மற்றவைகளோடு ஒப்பிடும்போது சுருக்கமானதுதான். அது என்றைக்கும் தொடரப் போவதில்லை. பூமியில் வாழும் சில வருடங்களுக்காக நித்திய மகிமையை இழப்பது முட்டாள்தனம்.

## பூரண அர்ப்பணிப்பு

வெளிப்படுத்துதல் 12:11 இல் குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் முற்றிலும் தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மக்கள். அவர்கள் வாழ்ந்தார்களா மரித்தார்களா என்பது அவர்களுக்கு முக்கியமில்லை. அவர்களுக்கு முக்கியமாக இருந்த விஷயம் என்னவென்றால், சாத்தானைத் தூக்கியெறிந்து அவனைக் கீழே தள்ள தேவன் அவர்களுக்கு நியமித்த வேலையை நிறைவேற்ற வேண்டும்.

இந்த மறுசீரமைக்கப்பட்ட மதிப்பு உணர்வைக்கொண்டிருப்பது அறிவொளி பெற்ற சுயநலம் என்று நான் நம்புகிறேன் – இது மிகவும் முக்கியமானதைத் தழுவுகிறது. யோவானின் முதலாம் நிருபத்தில் இருக்கும் இந்த அற்புதமான அறிக்கை, அந்த முன்னோக்கை உறுதிப்படுத்துகிறது:

> உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.
>
> I யோவான் 2:17

நீங்கள் உங்கள் சுயசித்தத்தை முழு அர்ப்பணிப்புடன் தேவ சித்தத்துடன் இணைக்கும்போது, மூழ்கடிக்கப்பட முடியாதவராய் இருப்பீர்கள். நீங்கள் தோற்கடிக்கப்பட முடியாதவர். நீங்கள்

ATB_2023.indd 74 2/26/2024 4:20:40 PM

அசைக்கப்பட முடியாதவர். நீங்கள் வாழ்கிறீர்களா மரிக்கிறீர்களா என்பது இரண்டாம் நிலை முக்கியத்துவம் வாய்ந்தது. என்ன நடந்தாலும் உங்களைத் தோற்கடிக்க முடியாது.

வெளிப்படுத்துதல் 12:11ல் இருந்து கர்த்தர் எனக்குக் காண்பித்த மற்றொரு நுண்ணறிவை நான் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். இந்தக் கேள்விக்கு பதிலாக அது வந்தது: சாத்தானை நாம் எப்படி ஜெயிப்பது? ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும், நம்முடைய சாட்சியின் வார்த்தையினாலும் என்பது பலருக்குத் தெரியும். ஆனால் அவர்கள் அதை மீண்டும் மீண்டும் சொல்லும் சொற்றொடராக மாற்ற முனைகிறார்கள், ‘இயேசுவின் இரத்தம் ஜெயம் ... இயேசுவின் இரத்தம் ஜெயம் ... இயேசுவின் இரத்தம் ஜெயம் ...’ என்று சொல்லுகிறார்கள். அந்தச் செயலை நான் குறைத்து மதிப்பிட விரும்பவில்லை, ஆனால் சில சமயங்களில் அதைச் செய்வது சாத்தானை பாதிக்காது என்பதை நான் கவனித்தேன். இந்த நடைமுறையின் உண்மையை நாம் இன்னும் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று நினைக்கிறேன்.

## சாத்தானை மேற்கொள்ளுதல்

சாத்தானை நாம் எப்படி ஜெயிப்பது? ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், நம்முடைய சாட்சியின் வார்த்தையினாலும். நான் புரிந்துகொண்டபடி, இந்த பகுதியில் மூன்று கூறுகள் உள்ளன – இரத்தம், வார்த்தை (இது தேவனுடைய வார்த்தை) மற்றும் நம்முடைய சாட்சி.

இதோ திறவுகோல். இரத்தம் உங்களுக்கு என்ன செய்கிறது என்று வார்த்தை கூறுகிறதோ அதைத் தனிப்பட்ட முறையில் அறிக்கை செய்யுங்கள். தயவு செய்து மீண்டும் சொல்கிறேன். இப்படித்தான் நீங்கள் சாத்தானை ஜெயிக்கிறீர்கள்: ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், உங்கள் சாட்சியின் வார்த்தையினாலும். முக்கிய வார்த்தைகள்

சாட்சி, வார்த்தை மற்றும் இரத்தம். எனவே, இரத்தம் உங்களுக்கு என்ன செய்கிறது என்று வார்த்தை (அதாவது வேதம்) கூறுகிறதோ, அதற்கு நீங்கள் தனிப்பட்ட முறையில் சாட்சி அளிக்கிறீர்கள். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அதை திறம்பட செய்ய, நீங்கள் அதை சொந்தப்படுத்திக்கொள்ள வேண்டும்.

நீங்கள் யாரிடம் சாட்சி கூறுகிறீர்கள்? சாத்தானிடம். இது ஒரு விசுவாசிகளின் சாட்சி கூட்டம் அல்ல, அங்கு நாம் நம் வாழ்வில் தேவனுடைய கிருபையின் கதையைப் பகிர்ந்து கொள்கிறோம். நீங்களும் நானும் நம் ஆத்துமாவின் எதிரியுடன் நேருக்கு நேர் வரும்போது இது நடைபெறுகிறது. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திலும் அதிகாரத்திலும் நாம் அவனுடன் நேரடியாகப் பேசுகிறோம். மேலும் இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறதோ அதைப் பிசாசிடம் கூறுகிறோம்.

நீங்களும் நானும் அதைச் செய்ய, இரத்தத்தைப் பற்றி வார்த்தை என்ன சொல்கிறது என்பதைத் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். அது தெரியாவிட்டால் இந்த ஆயுதத்தை உங்களால் பயன்படுத்த முடியாது. உண்மையில், நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பற்றி அறியாமல் இருந்தால், இறுதியில் பிசாசுக்கு இரையாகிவிடுவீர்கள். தாக்குதலின் பெரிய ஆயுதம் ஆவியின் பட்டயம், இது தேவனுடைய வார்த்தை. அதை எடுத்துக்கொள்வது நம்முடைய பொறுப்பு என்று வேதம் கூறுகிறது. எபேசியர் 6:17 கூறுகிறது: ‘ஆவியின் பட்டயமாகிய தேவனுடைய வார்த்தையை எடுத்துக்கொள்ளுங்கள்.’

நாம் புரிந்துகொள்ள வேண்டியது இதுதான்: நீங்களும் நானும் ‘இரத்த வங்கியில்’ இருந்து (விரும்பினால்) இரத்தத்தை எடுத்து நம் வாழ்க்கையில் அதைக் கொண்டுவர வேண்டும். பின்வரும் இரண்டு அத்தியாயங்களில், பாஸ்கா சடங்கின் மூலம், நாம் இரத்தத்தை எடுத்து, எப்படி அதை நம் வாழ்வில் பயன்படுத்தலாம் என்பதைப் பற்றி பார்க்க விரும்புகிறேன்.

# அத்தியாயம் 7
# பஸ்கா சடங்கு

முந்தைய அத்தியாயத்தில், இயேசுவின் இரத்தத்தை நடைமுறையில் எப்படி சொந்தப்படுத்திக்கொள்வது என்பதை வெளிப்படுத்துதல் 12:11–லிருந்து கற்றுக்கொண்டோம். இரத்தத்தை நம் வாழ்வில் எவ்வாறு பயன்படுத்துவது என்பதைப் பற்றி மேலும் அறிந்துகொள்வதில், பஸ்கா சடங்கு நமது புரிதலுக்கு உதவும் ஒரு சிறந்த இணையாக வழங்குகிறது.

யாத்திராகமம் 12 க்கு நம் கவனத்தைத் திருப்புவோம், ஏனெனில் இந்த அத்தியாயம் பஸ்காவின் கட்டளையைப் பதிவு செய்கிறது. இஸ்ரவேலருக்கு விடுதலை மற்றும் இரட்சிப்பிற்கான தேவனின் ஏற்பாடாக பஸ்கா எகிப்தில் விளங்கியதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆட்டுக்குட்டியை எடுக்க வேண்டும் (தந்தை, குடும்பத்தில் வேறு யாரும் அதை செய்ய முடியாது) – தந்தை ஆட்டுக்குட்டியைக் கொல்ல வேண்டும் அல்லது பலியிட்டு அதன் இரத்தத்தை ஒரு கோப்பையில் பிடிக்க வேண்டும். ஆட்டுக்குட்டியை பலிகொடுக்கும் இந்தச் செயல், தந்தைகள் தங்கள்

குடும்பங்களின் ஆசாரிய பொறுப்பை உடையவர்கள் என்பதற்கான ஒரு மகத்தான நிரூபணம். ஒவ்வொரு தந்தையும் தன் குடும்பத்தில் ஆசாரியனாக செயல்பட வேண்டியது இருந்தது.

## ஈசோப்பின் முக்கியத்துவம்

ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டு அதன் இரத்தம் பாத்திரத்தில் பிடிக்கப்பட்டதும், மற்றொரு படி இருந்தது. இரத்தம் மிகவும் விலைமதிப்பற்றது, அதில் எதுவும் தரையில் சிந்தப்படக்கூடாது. ஆனால் அந்தக் கோப்பையில் இருந்த இரத்தம் எந்த இஸ்ரவேலனின் குடும்பத்தையும் பாதுகாக்கவில்லை. தகப்பன்மார்கள் அவர்கள் வசித்த இடத்துக்குப் கோப்பையில் இருந்த இரத்தத்தைக்கொண்டு சேர்க்கவேண்டும். அந்த தகப்பன்மார் அதை எப்படி செய்தார்கள்? அவர்கள் என்ன செய்தார்கள் என்பதை பின்வரும் வசனம் கூறுகிறது.

> அப்பொழுது மோசே இஸ்ரவேல் மூப்பர் யாவரையும் அழைப்பித்து: நீங்கள் உங்கள் குடும்பங்களுக்குத் தக்கதாக உங்களுக்கு ஆட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்துக்கொண்டு, பஸ்காவை அடித்து,
>
> ஈசோப்புக் கொழுந்துகளின் கொத்தை எடுத்து கிண்ணியில் இருக்கும் இரத்தத்தில் தோய்த்து, அதில் இருக்கும் அந்த இரத்தத்தை வாசல் நிலைக்கால்களின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் தெளியுங்கள்; விடியற்காலம் வரைக்கும் உங்களில் ஒருவரும் வீட்டு வாசலை விட்டுப்புறப்படவேண்டாம்.
>
> கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது,

ATB_2023.indd 78 2/26/2024 4:20:40 PM

கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார். (யாத்திராகமம் 12:21–23)

இப்பத்தியில் இரண்டு முக்கியமான விதிமுறைகள் உள்ளன. முதலில், அவர்கள் கோப்பையிலிருந்து தாங்கள் வசிக்கும் இடத்திற்கு இரத்தத்தை கொண்டு சேர்க்க வேண்டும். அதைச் செய்வதற்கு ஒரே ஒரு வழிமுறை மட்டுமே இருந்தது, அதாவது ஈசோப்பு கொழுந்தைக் கொண்டு . ஈசோப்பு என்பது மத்திய கிழக்கு முழுவதும் கிட்டத்தட்ட ஒரு களை போல் வளரும் மிகவும் பொதுவான தாவரம் என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். ஈசோப்பை கண்டுபிடிப்பதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. தகப்பன்மார் ஈசோப்பின் ஒரு கொத்தை எடுத்து, அதை இரத்தத்தில் தோய்த்து, அதை வாசலின் மேற்சட்டத்திலும் அதின் நிலைக்கால்களிலும் தெளிக்க வேண்டும், ஆனால் ஒருபோதும் வாசற்படியில் அது விழக்கூடாது. நீங்கள் ஒருபோதும் இரத்தத்தைக் காலால் மிதிக்கக்கூடாது.

அவர்கள் வாழ்ந்த இடத்திற்கு இரத்தம் மாற்றப்பட்டவுடன், அவர்கள் ஒரு நிபந்தனையின் கீழ் பாதுகாப்பாக இருந்தனர்: அது என்ன? அவர்கள் வீட்டிற்குள்ளேயே இருக்க வேண்டியதாயிற்று. இது மிக முக்கியமானது –இரத்தம் கீழ்ப்படிந்தவர்களை மட்டுமே பாதுகாத்தது. நீங்கள் கீழ்ப்படியும் போது நீங்கள் பாதுகாப்பாக இருக்கிறீர்கள்.

## நமது அறிக்கையின் பிரதான ஆசாரியன்

உங்கள் சாட்சியின் அறிக்கையின் முக்கியத்துவத்தை என்னால் மிகைப்படுத்த முடியாது. எபிரேயரின் புத்தகம் இந்தக் கருத்தை வலுப்படுத்துகிறது:

இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும்

**பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்; (எபிரெயர் 3:1)**

எபிரேயரின் எழுத்தாளர், இயேசுவை "நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியர்" என்று அழைக்கிறார். அறிக்கையிடுதல் என்றால் அதையே சொல்வது என்று அர்த்தமாகும். வேதத்திலும், இயேசு கிறிஸ்துவிலும் விசுவாசிகளாகிய நமக்கு, அறிக்கை என்றால், தேவன் தம்முடைய வார்த்தையில் சொல்வதையே நம் வாயால் சொல்வது. நம்முடைய வாயின் வார்த்தைகளை தேவனுடைய வார்த்தையுடன் ஒத்துப்போகச் செய்கிறோம். நம்முடைய அறிக்கையின் பிரதான ஆசாரியர் இயேசுவே. நம்மிடம் அறிக்கை இல்லையென்றால், நமக்குப் பிரதான ஆசாரியர் இல்லை.

## நம்முடைய எதிர்காலத்தை தீர்மானித்தல்

தேவைனுடைய வார்த்தையுடன் சுயநினைவுடனான, வேண்டுமென்ற உடன்பாடு இல்லாமல், இயேசு உங்களை தேவனுக்கு முன்பாக பிரதிநிதித்துவப்படுத்த முடியாது. நீங்கள் சரியான அறிக்கையை அளிக்கும்போது மட்டுமே அவர் உங்கள் சார்பாக வாதிட முடியும். மத்தேயுவின் நற்செய்தியில், இயேசு சொன்னார், 'உன் வார்த்தைகளால் நீ நீதிமான் ஆக்கப்படுவாய், உன் வார்த்தைகளால் ஆக்கினைக்குள்ளாக்கப்படுவாய்' (மத்.12:37). நீங்கள் பேசும் வார்த்தைகளால் உங்கள் விதியை தீர்மானித்துக் கொள்கிறீர்கள்.

நாவு, கப்பலில் இருக்கும் சுக்கான் போன்றது என்று யாக்கோபு கூறினார். இது கப்பலின் மிகச் சிறிய பகுதியாகும், ஆனால் கப்பல் எங்கு செல்லும் என்பதை அது தீர்மானிக்கிறது (யாக்கோபு 3:4). அதுபோலவே, நம் நாவைப் பயன்படுத்தும் விதத்தில் நம் வாழ்க்கையின் போக்கைத் தீர்மானிக்கிறோம். பல கிறிஸ்தவர்கள் தங்கள் நாவைப் பயன்படுத்தும்

ATB_2023.indd 80 2/26/2024 4:20:40 PM

விதத்தில் மிகவும் கவனக்குறைவாகவும் குற்றமுள்ளவர்களாகவும் உள்ளனர்: 'நான் உன்னைப் பார்க்க துடியாய்த் துடிக்கிறேன்.' 'நான் மரண கூச்சப்பட்டேன்.' 'நான் பட்ட அவமானத்துக்கு செத்தே போயிருக்கலாம்னு நினைத்தேன்.' உங்கள் வாழ்க்கையில், இயேசு உங்களுக்காக செய்து நிறைவேற்ற நீங்கள் விரும்பாத ஒன்றையும், உங்களைப் பற்றி உங்கள் வாயினாலேயே ஒருபோதும் கூறாமல் இருப்பது புத்திசாலித்தனமாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

உங்களைச் குறைத்து மதிப்பிடாதபடி கவனமாக இருங்கள், ஏனென்றால் தேவன் உங்களை மிகவும் உயர்வாகக் கருதுகிறார். அவர் இயேசுவின் இரத்தத்தை உங்களில் முதலீடு செய்துள்ளார். உங்களை நீங்களே விமர்சிக்க உங்கள் சொந்த நாவைப் பயன்படுத்தும்போது, நீங்கள் உண்மையில் செய்வது தேவனின் கைவேலையை விமர்சிப்பதாகும். எபேசியரில், பவுல் நாம் அவருடைய வேலைப்பாடு அல்லது தலைசிறந்த படைப்பு என்று கூறுகிறார் (எபே. 2:10ஐ பார்க்கவும்). தேவனின் வேலையை விமர்சிப்பது ஆபத்தான அகங்காரம் என்று நான் நம்புகிறேன். பெருமை நிச்சயமாக கிறிஸ்தவர்களிடையே பரவலாக உள்ளது. ஆனால் அதே அளவிற்கு பெரிய பிரச்சனை என்னவென்றால் நம்மை நாமே குறைத்து மதிப்பிடுவது.

## தெளிக்கப்படும் முன் கீழ்ப்படிதல்

முதல் பேதுரு 1:1–2ல், பேதுருவின் வாழ்த்துதலை நாம் வாசிக்கிறோம்:

**தேசங்களிலே சிதறியிருக்கிறவர்களில்,....**

கிரேக்க வார்த்தை டயஸ்போரா (புலம்பெயர்ந்தோர்). இது இஸ்ரேல் நாட்டிற்கு வெளியே உள்ள யூதர்களுக்குக் குறிப்பாக

உரையாற்றப்படுகிறது. புலம்பெயர்ந்தோர் என்பது இன்றும் அவர்களை விவரிக்கும் யூதரின் சாதாரண முறைமையாகும்.

> ....பிதாவாகிய தேவனுடைய முன்னறிவின்படியே, ஆவியானவரின் பரிசுத்தமாக்குதலினாலே, கீழ்ப்படிதலுக்கும் இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தந் தெளிக்கப்படுதலுக்கும் தெரிந்துகொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு எழுதுகிறதாவது: கிருபையும் சமாதானமும் உங்களுக்குப் பெருகக்கடவது....

கீழ்ப்படிதல் தெளிப்பதற்கு முன் வருகிறது என்பதை கவனிக்கவும். கீழ்ப்படியாதவர்கள் மீது இரத்தம் தெளிக்கப்படுவதில்லை. வீட்டை விட்டு வெளியே செல்பவர்களை இரத்தம் பாதுகாப்பதில்லை. அது தனக்குப் பின்னால் இருப்பவர்களை அல்லது அதன் மறைவில் உள்ளவர்களை மட்டுமே பாதுகாக்கிறது.

## இரத்தத்தை தெளித்தல்

இஸ்ரவேலுக்கும் நமக்கும் கடினமான கேள்வி இதுதான்: நமது சார்பாக நிறைவேற்றப்பட்ட பலியின் சிந்தப்பட்ட இரத்தத்தை நாம் வசிக்கும் இடத்திற்கு எவ்வாறு கொண்டு செல்வது? முக்கியமாக இது நிறைவேற்றப்பட்டு முடிந்தபடியால் இக்கேள்வி எழும்புகிறது. கோப்பையில் இருக்கும் இரத்தத்தை, நாம் பார்த்துக்கொண்டிருக்கும் வரை, அது நமக்கு எந்த நன்மையும் செய்யப் போவதில்லை. இரத்தம் நமக்கு இருக்கிறது, ஆனால் அது எதுவும் செய்யாது. ஈசோப்பு என்று அழைக்கப்படும் இந்த எளிய சிறிய செடியை எடுத்து, இரத்தத்தில் தோய்த்து, அதை நம் வீட்டின் வெளியே, கதவுக்கு மேல் தெளிக்க வேண்டும். அப்போதுதான் பாதுகாக்கப்படுகிறோம்.

ATB_2023.indd 82 2/26/2024 4:20:40 PM

கிறிஸ்தவர்களுக்கு பாஸ்கா மற்றும் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையின் போதனையின் மேலும் சில பயன்பாடுகள் முதல் கொரிந்தியர் 5:7 இல் பவுலிடமிருந்து நமக்கு வருகிறது:

**பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள்.....**

அந்த வாக்கியம் புளிப்பில்லாத அப்பப்பண்டிகையைக் குறிக்கிறது. அந்தப் பண்டிகை நேரத்தில், ஒவ்வொரு யூத குடும்பமும் ஏழு நாட்களுக்கு தங்கள் வீட்டிலிருந்து புளித்த அனைத்தையும் அகற்ற வேண்டும். அவர்களில் சிலர் இன்றும் இதைச் செய்கிறார்கள்.

**...நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு...**

வசனம் 8 தொடர்கிறது:

**ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம் பொல்லாப்பு என்னும் புளித்தமாவோடும் அல்ல, (அது பழைய புளித்த மா – பொல்லாப்பு மற்றும் துர்குணம்), துப்புரவு உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக்கடவோம்.**

இது பஸ்காவுடன் இணைக்கப்பட்ட ஆவிக்குரிய பயன்பாடு ஆகும். ஆனால் முதலில் நாம் விட்டுவிட முடியாத ஒரு முக்கியமான இணைப்புக்கு 7வது வசனத்தின் முடிவிற்குச் செல்ல வேண்டும்:

**ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய (அல்லது மேசியா), கிறிஸ்து நமக்காக பலியிடப்பட்டிருக்கிறாரே.**

இயேசுவின் சிலுவைப் பலியுக்கும் பஸ்காவுக்கும் உள்ள தெளிவான தொடர்பை உங்களால் பார்க்க முடிகிறதா? பேதுரு மேலும் விளக்குகிறார்:

> **உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,**
>
> **குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே. (I பேதுரு 1:18–19)**

ஆட்டுக்குட்டி என்ற வார்த்தையை பேதுரு பயன்படுத்தியதைக் கவனியுங்கள். இது மீண்டும் பஸ்காவுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது. அதிகாரம் 8 இல், பஸ்காவைப் பற்றி நாம் கற்றுக்கொண்டதை எவ்வாறு பயன்படுத்தலாம் மற்றும் அதை நம் சொந்த வாழ்க்கையில் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைப் பார்க்கத் துவங்குவோம்.

# அத்தியாயம் 8
# ஒரு தனிப்பட்ட பயன்பாடு

**இந்த அத்தியாயத்தில், நாம் கற்றுக்கொண்டவற்றின் தனிப்பட்ட பயன்பாட்டை ஆராய விரும்புகிறோம். சந்தேகம் இல்லாமல், பஸ்கா ஆட்டுக்குட்டி பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பே கொல்லப்பட்டது என்று நாம் கூறலாம். ஒரு வித்தில் கூற வேண்டுமானால், இரத்தம் பாத்திரத்தில் உள்ளது. இயேசுவின் இரத்தம் நமக்காக சிந்தப்பட்டது, ஆனால் பாத்திரத்தில் உள்ள இரத்தம் நம்மைப் பாதுகாக்காது. நாம் வசிக்கும் இடத்திற்கு இரத்தத்தை பாத்திரத்தில் இருந்து கொண்டு வர வேண்டும்.**

## ஈசோப்பு என்பது நமது அறிக்கை

**பழைய உடன்படிக்கையின் கீழ், இரத்தத்தை மாற்றுவதற்கு ஈசோப்பை பயன்படுத்தினோம். ஆனால் புதிய உடன்படிக்கையின்**

கீழ் நாம் பயன்படுத்துவது அதுவல்ல. புதியவற்றின் கீழ் நாம் எதைப் பயன்படுத்துகிறோம்? நமது வாயின் அறிக்கை. நமது தனிப்பட்ட சாட்சியமே, அந்த இரத்தத்தை பாத்திரத்தில் இருந்து வெளியே எடுத்து, அதை நம் வாழ்க்கைக்கும், நம் சூழ்நிலைக்கும், நம் குடும்பத்துக்கும், நாம் வாழும் இடத்திற்கும் கொண்டு வருகிறது.

வெளிப்படுத்துதல் 12:11–லிருந்து நாம் கற்றுக்கொண்டது உங்களுக்கு நினைவிருக்கிறதா? அதைச் சுருக்கமாக, "நாம் ஈசாப்பை பயன்படுத்தும்போது சாத்தானை ஜெயிக்கிறோம்" என்று சொல்லலாம். ஈசோப்பு என்றால் என்ன? இது நமது தனிப்பட்ட சாட்சியின் அறிக்கை. 'இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்று தேவனுடைய வார்த்தை கூறுகிறதோ, அதை நம் வாயினால் தனிப்பட்ட முறையில் அறிக்கை செய்யும் போது நாம் சாத்தானை ஜெயிக்கிறோம்.' அந்தச் செயலானது, பாத்திரத்தில் உள்ள இரத்தத்தை எடுத்து, அதை நம்மீதும், நம் வாழ்வின் மீதும், நியாயமாக அதைப் பயன்படுத்தக்கூடிய எந்தச் சூழ்நிலையிலும் தெளிக்கிறது.

இதைத் தனிப்பட்ட முறையில் செய்ய உங்களை அழைக்க விரும்புகிறேன். இயேசுவின் இரத்தத்தை உங்கள் வாழ்க்கையில் சொந்தப்படுத்திக்கொள்ள இது உங்களுக்கு ஒரு வாய்ப்பு. வேதத்திலிருந்து நான் கற்றுக்கொண்ட எல்லா உண்மைகளிலும், மிகவும் மதிப்புமிக்க மற்றும் மிகவும் சக்திவாய்ந்த ஒன்றை நான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றால், இதுவாகத்தான் இருக்கும். இயேசு 'தமது ஆத்துமாவை மரணத்தில் ஊற்றினார்' என்று நாம் படித்த வாக்கியத்தின் முக்கியத்துவத்தையும் நாம் உண்மையில் முழுமையாக கையாளவில்லை. இயேசுவின் இரத்தத்தில், தேவனின் சொந்த ஜீவன் இருந்தது. இது முழு பிரபஞ்சத்தையும் படைத்தவரின் ஜீவன் – அவர் படைத்த எதையும் விட எண்ணற்ற வல்லமை வாய்ந்தது. இந்த உண்மையின் வெளிச்சத்தில், மனித மனதால் இயேசுவின் இரத்தத்தில் வெளிப்பட்ட வல்லமையை அளவிட எவ்வித வழியும் இல்லை.

## ஒரு சொட்டு

பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் ஜாம்பியாவில் பிரசங்கித்துக்கொண்டிருந்தபோது, "சாத்தானின் முழு ராஜ்யத்தில் இருக்கும் வல்லமையை விட இயேசுவின் ஒரு சொட்டு இரத்தத்தில் அதிக வல்லமை உள்ளது" என்று சொன்னேன். என்னுடன் இருந்த சகோதரன் மகேஷ் சாவ்டாவுக்கு, அந்த அறிக்கை அவரது உள்ளத்தில் ஏதோ ஒன்றை பற்றவைத்தது. தலைநகரில் ஒரு வாரம் பிரசங்கிப்பதற்காக அவர் ஜாம்பியாவிலிருந்து ஜயருக்கு (தற்போது காங்கோ ஜனநாயகக் குடியரசு) சென்றார். கின்ஷாசாவில், அவரது கூட்டங்களில் ஒரே வாரத்தில் 50,000 முதல் 3,50,000 பேர் வரை அந்த நகரத்தில் மக்கள் கூட்டம் பெருகும் வகையில் தேவன் அசைவாடினார். மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட ஒரு சிறுவன் உட்பட பல அற்புதங்கள் நடந்தன. பல மணி நேரம் மருத்துவமனையில் இருந்த அவர் மீண்டும் உயிர் பெற்று வந்தார். ஆனால் மகேஷ் பிறகு என்னிடம், 'சாத்தானின் முழு ராஜ்யத்தில் இருக்கும் வல்லமையை விட இயேசுவின் ஒரு சொட்டு இரத்தத்தில் அதிக வல்லமை உள்ளது' என்ற அவ்வாக்கியத்தின் சத்தியமே எனக்கு விசுவாசத்தை அளித்தது' என்றார்.

துரதிஷ்டவசமாக, கோட்பாட்டு ரீதியாக அதை நம்பும் மக்களுக்கும் கூட—இயேசுவின் இரத்தத்தைக் குறைத்து மதிப்பிடுவது ஓரளவு நாகரீகமாகிவிட்டது. சில கிறிஸ்தவர்கள் கல்விசார்ந்த தவறான எண்ணங்களுக்கு தலைவணங்குகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். மக்கள் அறிவுள்ளவர்களாகக் கருதப்பட விரும்பினால், அவர்கள் இயேசுவின் இரத்தத்தைப் பற்றி அதிகம் பேசுவதில்லை, ஏனென்றால் அது பழமையானதாகக் கருதப்படுகிறது.

"இயேசுவின் இரத்தத்தால் நமக்காக நிறைவேற்றப்பட்டவை அனைத்தும் எதிர்மறையானவை" என்று ஒரு போதகர் ஒருமுறை கூறுவதை நான் கேட்டேன். நான் முற்றிலும் உடன்படவில்லை!

பிரபஞ்சத்தில் மிகவும் முன்னேற்றமான விஷயம் தேவனின் ஜீவனே. அந்த ஜீவன் இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்குள் விடுவிக்கப்படுகிறது.

தேவனின் ஜீவனாகிய, இயேசுவின் இரத்தத்தில் உள்ளதை எவ்வாறு சொந்தப்படுத்திக்கொள்வது என்பதை நீங்களும் நானும் கற்றுக்கொள்ளலாம். அதில் இல்லாத எதுவும் நமக்குத் தேவைப்படாது. நாம் அதை எவ்வாறு சொந்தப்படுத்திக்கொள்வது? இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்று வார்த்தை கூறுகிறதோ அதைத் தனிப்பட்ட முறையில் அறிக்கை செய்யும் போது நாம் சாத்தானை ஜெயிக்கிறோம். அது தனிப்பட்டதாக இருக்க வேண்டும். இந்த உண்மையை நீங்கள் நம்பினால், இந்த சொற்றொடரை இப்போதே உரக்கச் சொல்ல வேண்டும் என்று நான் விரும்புகிறேன்:

> **இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்று வார்த்தை கூறுகிறதோ, அதை நாம் தனிப்பட்ட முறையில் சாட்சியாக அறிக்கை செய்யும் போது, நாம் சாத்தானை ஜெயிக்கிறோம்.**

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!

# அத்தியாயம் 9
# மீட்பு

கடந்த சில அதிகாரங்களாக நாம் ஆராய்ந்து கொண்டிருக்கும் வேதவாக்கியத்திற்கு இப்போது திரும்புவோம், வெளிப்படுத்துதல் 12:11:

> **மரணம் நேரிடுகிறதாயிருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்.**

ஒரு நடைமுறைப் பயன்பாட்டை நீங்களும் நானும் அந்த அறிக்கையிலிருந்து செய்யலாம்: இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்று வேதம் கூறுகிறதோ, அதை தனிப்பட்ட முறையில் நாம் சாட்சியாக அறிக்கை செய்யும் போது நாம் சாத்தானை ஜெயிக்கிறோம். அந்த அறிக்கையில் மூன்று கூறுகள் உள்ளன: வார்த்தை, இரத்தம் மற்றும் நமது சாட்சி (அறிக்கை). நம்முடைய அறிக்கை இரத்தத்தைப் பாத்திரத்தில் இருந்து நாம் வசிக்கும் இடத்திற்கு மாற்றும் ஈசோப்பாகும்.

## இரத்தத்தின் வல்லமை

அடுத்த ஏழு அத்தியாயங்களில், இரத்தத்தின் ஏழு மடங்கு வல்லமை என்று நான் கூறியதை நாம் ஆராயப்போகிறோம். வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, இயேசுவின் இரத்தத்தை நம்முடைய சொந்த வாழ்க்கையில் பயன்படுத்தக்கூடிய ஏழு குறிப்பிட்ட வழிகளை ஆராய்வோம். இந்த ஏழும் உறுதியானவை என்று நான் நம்புகிறேன். ஒரு வகையில், இவைகள் இருக்கும்போது, இரத்தத்தைப் பற்றிய மைய உண்மை உங்களிடம் உள்ளது. இரத்தம் ஏழு முறை தெளிக்கப்பட்டது மட்டுமல்ல, அது ஏழு வழிகளில் செயல்படுகிறது.

தேவனுடைய வார்த்தையின்படி இரத்தம் என்ன செய்கிறது என்பதை உங்களுக்குக் கற்பிப்பதே வரும் அத்தியாயங்களில் எனது குறிக்கோள். இரத்தத்தைப் பற்றி வார்த்தை என்ன கற்பிக்கிறது என்பதை நீங்களும் நானும் அறியாதவரை, நாம் சாட்சியாக அதை அறிக்கை செய்ய முடியாது. நாம் வார்த்தையை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

இந்த அத்தியாயத்தில், முதல் பயன்பாட்டை ஆராய்வோம், அதுதான் மீட்பு. மீட்பது என்றால் திரும்ப வாங்குவது. நாம், நம்முடைய பாவத்தினால் நம்மையே சாத்தானுக்கு விற்றுப்போட்டு, சாத்தானின் அடிமைச் சந்தையில் விற்கப்பட வைக்கப்பட்டிருந்தோம். இயேசு சந்தைக்குச் வந்து, சாத்தானின் கையிலிருந்து நம்மை மீட்டெடுக்க விலை கொடுத்தார். அதுதான் மீட்பு.

## கிறிஸ்துவுக்குள் இருப்பது

மீட்பைப் பற்றிய கூடுதல் புரிதலுக்கு, எபேசியர் 1:7ஐப் பார்ப்போம். இது பவுலின் மிக நீண்ட வாக்கியங்களில் ஒன்றாகும், எனவே நாம் அதை முழுவதுமாய் எடுத்துக்கொள்ளாமல் – மீட்பிற்குப் பொருந்தும் பகுதிகளை மட்டும் எடுப்போம்.

**அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது.**

நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது – இயேசுவின் இரத்தத்தினாலே நமக்கு மீட்பு உண்டு. அதின் உட்கருத்து புரிகிறதா? மீட்பைப் பெற நாம் கிறிஸ்துவில் இருக்க வேண்டும். இயேசுவின் இரத்தத்தால் நமக்காக வாங்கப்பட்ட மற்றொரு நன்மை நமது பாவ மன்னிப்பு. மத்தேயு 26:28-ல் கடைசி இராப்போஜனத்தில் இயேசு தம் இரத்தத்தின் சின்னமாகிய கோப்பையை அவர்களுக்குக் கொடுத்ததை ஒப்பிட்டுப் பாருங்கள். அவர் சொன்னார்:

**இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.**

அதேபோல், எபிரேயர் 9:22 கூறுகிறது, 'இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது.' எனவே, நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுவதற்காக இயேசுவின் இரத்தம் சிந்தப்பட்டது.

## மன்னிப்பின் தேவை

மேலே மேற்கோள் காட்டப்பட்டுள்ள எபேசியர் 1:7 பகுதியில், பவுல் இந்த இரண்டு சத்தியங்களையும் ஒருங்கிணைக்கிறார் என்பதை நீங்கள் கவனிப்பீர்கள் – அவருடைய இரத்தத்தின் மூலம் மீட்பு மற்றும் பாவ மன்னிப்பு. நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படும் வரையில் மட்டுமே மீட்பிற்கான முழு சட்டப்பூர்வ உரிமைகளும் நம்மிடம் உள்ளன என்பதைப் புரிந்துகொள்வது மிகவும் அவசியம். நமது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டால், மீட்பின் முழு உரிமையும் நமக்கு உண்டு. ஆனால் நம் வாழ்வில் ஏதேனும் பாவம் இருந்தால் – ஒப்புக்கொள்ளப்படாத

மற்றும் மன்னிக்கப்படாத பாவம் – அந்தப் பகுதியில் மீட்பதற்கான முழு சட்ட உரிமைகளும் நமக்கு இல்லை. அந்த பகுதியில் சாத்தான் இன்னும் உரிமை கொண்டாடுகிறான்.

இந்தச் சத்தியத்தின் நேரடியான வெளிப்பாட்டை நாம் பலமுறை விடுதலை ஊழியத்தில் பார்த்திருக்கிறோம். சாத்தானுக்கு நியாயமான உரிமை இருந்தால், அதை அவன் கைவிட மாட்டான். அவன் முகத்தில் குத்தலாம், ஒரு வாரம் உபவாசம் இருக்கலாம், விடுதலை தரக்கூடிய அனைத்தையும் செய்யலாம். ஆனால் நிலைமை மாறாது, எதிரி நிலைத்திருப்பான் – ஏனென்றால் அந்தப் பகுதியில் இன்னும் தீர்வு காணப்படாத ஒரு சட்டப்பூர்வ உரிமை அவனுக்கு இருப்பது அவனுக்குத் தெரியும்.

## மன்னிக்க தவறுதல்

விசுவாசிகளின் வாழ்வில் சாத்தான் நிலைத்திருக்க சட்டப்பூர்வமாக உரிமைகோரும்மற்றொருபொதுவானதொடர்புடையபகுதிமற்றவர்களை மன்னிக்கத் தவறுதல். கர்த்தருடைய ஜெபத்தில், நாம் மற்றவர்களை மன்னிக்கும் அதே அளவிலேயே தேவனால் மன்னிக்கப்படுகிறோம் என்று இயேசு நமக்குக் கற்பித்தார்: ‘எங்களுடைய எதிராளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்களுடைய பாவங்களை எங்களுக்கு மன்னியும்.’ (மத். 6:12)

நாம் மற்றவர்களை மன்னிக்கும் அளவிற்கு மேலாக தேவனிடம் மன்னிப்பு கோருவதற்கு நமக்கு உரிமை இல்லை. எனவே, நாம் மன்னிக்காத ஒரு நபர் இருந்தால், அதற்கேற்ப நாம் தேவனால் மன்னிக்கப்படுவதில்லை. இதன் விளைவாக, நம் சொந்த வாழ்க்கையில் மன்னிக்க முடியாத பகுதி சாத்தானுக்கு இன்னும் சட்டப்பூர்வ உரிமைகோரலாக உள்ளது. நீங்கள் என்ன வேண்டுமானாலும்

செய்யலாம், ஆனால் மன்னிக்க வேண்டிய யாராக இருந்தாலும் அவரை மன்னிக்கும் வரை பிசாசை வெளியேற்ற முடியாது.

உங்கள் நாட்டில் உள்ள அனைத்து பிரசங்கிகளையும் உங்களிடம் பிரசங்கிக்கவும் உங்களுக்காக ஜெபிக்கவும் நீங்கள் அழைக்கலாம். ஆனால் நீங்கள் பிசாசை விரட்ட மாட்டீர்கள், ஏனென்றால் அவனுக்கு சட்டப்பூர்வ உரிமை உண்டு என்பது அவனுக்குத் தெரியும். பிசாசைப் பற்றி நீங்கள் நினைவில் கொள்ள வேண்டிய ஒரு உண்மை இதுதான்: அவன் ஒரு சட்ட நிபுணன், அவனுக்கு அது நன்றாக தெரியும். இருப்பினும், தேவனுடைய வார்த்தை நமக்கு முழு பாவ மன்னிப்பை வழங்குகிறது. நாம் முழு மன்னிப்பைக் பிடித்துக்கொள்வதும், மன்னிக்காமல் எதையும் விட்டுவிடாமல் இருப்பதும் மிக முக்கியம்.

## பிசாசை தூண்டி எழுப்புதல்

வார்த்தையின் மூலம் பரிசுத்த ஆவியானவரின் பெரிய ஊழியங்களில் ஒன்று, பிசாசை நம்மீது தூண்டி எழச் செய்வது. பலர் என்னிடம், 'நான் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன் மிகவும் அமைதியாக இருந்தேன்' என்று கூறியுள்ளனர். அதில் ஆச்சரியப்படுவதற்கில்லை, ஏனென்றால், துரத்தப்படாத தீய சக்திகள் உங்களிடம் இருந்தால், இதற்கு முன் எப்போதும் இல்லாத ஒரு மோதல் இப்போது இருக்கும். பரிசுத்த ஆவியானவர் எதிரிகளை திறந்த வெளியில் தள்ளிக்கொண்டு வருவார்.

அதனால்தான் சிலர் பரிசுத்த ஆவியை மையமாகக் கொண்ட மதத்தை விரும்புவதில்லை. ஏன்? ஏனென்றால், அவர்கள் எதிரியை அடக்கி, மரியாதைக்குரியவர்களாக காணப்படுவதையே விரும்புவார்கள். அவனை வெளியில் தள்ளி விடவும், அவன் உண்மையான தோற்றமாகிய மிருகத்தைப் போல நடந்து கொள்வதை விரும்புவார்கள். அவர்கள் தங்கள் அண்டை வீட்டாரின் முன் மத முகத்தை கடைப்பிடித்து

மரியாதையுடன் இருப்பார்கள், எதிரியை வெளியேற்றுவதற்காக பரிசுத்த ஆவியானவர் அவர்களில் அசைவாடும்போது, ஏப்பம் விடுவது, துப்புவது அல்லது கத்துவதை விரும்ப மாட்டார்கள்.

விடுதலையின் ஆராதனையில் வருபவர்களிடம் நான் எப்போதும் கூறுவது, ஒருபுறம் அவர்களின் கண்ணியத்திற்கும் மறுபுறம் அவர்களின் விடுதலைக்கும் இடையே அவர்கள் தேர்வு செய்ய வேண்டிய இடத்திற்கு அவர்கள் வந்திருக்கிறார்கள். கண்ணியத்தை விட்டுவிட்டு விடுதலையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதே எனது அறிவுரை. ஏனென்றால் உங்கள் கண்ணியம் பின்னர் திரும்பி வரும். ஆனால் உங்கள் கண்ணியத்தை நீங்கள் பிடித்துக்கொண்டால், நீங்கள் செய்வது உங்கள் வாழ்க்கையில் எதிரியின் இருப்பை மறைப்பதாகும்.

வெளிப்படையாக சொன்னால், பிசாசு விரட்டப்படுவதை விட அடக்கப்படுவதில் மகிழ்ச்சி அடைகிறான். தேர்வு கொடுக்கப்பட்டால், அதையே அவன் விரும்புகிறான். ஆனால், அவனைத் தூண்டி எழும்ப செய்யும் வழி–இனியும் அமைதியாக இருக்க முடியாதபடி அவனைப் பைத்தியமாக்குவதற்கான வழி – இயேசுவின் இரத்தத்தைப் பற்றி சாட்சி கூறுவதாகும். அது நிகழும்போது, பிசாசின் சாதனங்கள் தாங்கள் உண்மையில் என்னவென்பதைக் காட்டத் துவங்குகின்றன.

எபேசியர் 1:7–ன் வெளிச்சத்தில், நீங்களும் நானும் எல்லா பாவங்களையும் அறிக்கை செய்து விட்டுவிட தயாராக இருக்க வேண்டும். தேவன் நம்மை மன்னிக்க வேண்டும் என்று நாம் விரும்புவதைப் போல, நமக்கு எதிராக குற்றம் செய்த, அல்லது நமக்குத் தீங்கு விளைவித்த, அல்லது நமக்கு அநீதி இழைத்த மற்ற எல்லா நபர்களையும் மன்னிக்க தயாராக இருக்க வேண்டும். நாம் அந்த நடவடிக்கையை எடுத்தால், அந்த அடிப்படையில், இயேசுவின் இரத்தத்தின் மூலம், நம் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டுள்ளன என்று நாம் சாட்சியாக அறிவிக்க முடியும்.

## பாவத்தின் கீழ் விற்கப்பட்டவர்கள்

கடந்த அதிகாரத்தில் நாம் 1 பேதுரு 1:18-19 ஐப் பார்த்தோம், அங்கு கூறப்பட்டுள்ளது:

> **உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்,**
>
> **குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே.**

இயேசுவின் இரத்தம் நமது மீட்பின் கிரயமாக இருந்தது. நாம் பிசாசின் பிடியில் இருந்தோம். நாம் அவனுடைய நியாயமான இரையாக இருந்தோம். ஆனால் இயேசு தம்முடைய இரத்தத்தின் கிரயத்தினால் நம்மைத் திரும்ப வாங்கினார், விழுந்த மனித இனத்தை மீட்கக்கூடிய ஒரே விலை.

ரோமர் 7:14ல் பவுல் கூறுகிறார்:

> **...நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன்..**

அன்றைய நாகரீகத்தைப் பற்றி நாம் அறிந்திருந்தால், பவுல் பயன்படுத்தும் உருவகம் நமக்கு முற்றிலும் தெரிந்திருக்கும். ரோமானிய மற்றும் கிரேக்க நாகரிகத்தின் பெரும்பகுதி அடிமைத்தனத்தை அடிப்படையாகக் கொண்டது. இரு சமூகங்களிலும் கணிசமான அடிமட்ட அடிமைகள் இருந்தனர், மேலும் மக்கள் அடிமைச் சந்தையில் அடிமைகளாக விற்கப்படுவது பொதுவானது. அன்றைய பொதுவான லத்தீன் சொற்றொடர் 'ஒரு நபரை ஈட்டியின் கீழ் விற்பது,' அதாவது அவரை அடிமையாக விற்பது. அன்றைய அடிமைச் சந்தையில்,

விற்பனைக்கு வந்தவரை நிறுத்தி வைக்கும் பீடம் ஒன்று இருந்தது. அவன் தலைக்கு மேல் ஒரு ஈட்டி நீட்டப்பட்டிருக்கும், அது அவன் அடிமையாக விற்கப்பட்டதற்கான அடையாளமாக இருந்தது.

'நான் மாம்சத்திற்குரியவன், பாவத்தின் கீழ் விற்கப்பட்டவன்' என்று பவுல் கூறும்போது, 'என் பாவம் என் தலைக்கு மேல் உள்ள ஈட்டியாகும், அது என்னைச் சாத்தானின் அடிமைச் சந்தையில் விற்கிறது' என்பது அர்த்தமாகும். நம் வாழ்வில் ஒரு காலத்தில், நாம் ஒவ்வொருவரும் அங்குதான் இருந்தோம் –– அடிமைகளாக விற்கப்படுவதற்குக் காத்திருந்தோம்.

## ஒரு அடிமையின் வேலை

ஒரு அடிமையின் வேலையைப் பற்றி சிந்திப்பது குறிப்பிடத்தக்கது. ஒரு பெண் அடிமையாக விற்கப்பட்டு சமையல்காரியாக மாறுகிறாள். மற்றொருவள் விற்கப்பட்டு விபச்சாரியாகப் பயன்படுத்தப்படுகிறாள். அது அவளுடைய விருப்பம் அல்ல. இது அடிமையின் உரிமையாளரின் விருப்பம். ஒரு மனிதன் அடிமையாக விற்கப்பட்டு விவசாயத் தொழிலாளியாக முடியும். மற்றொருவன் சில மோசமான நடைமுறை வேலைகளுக்காக அடிமைத்தனத்திற்குள் விற்கப்படலாம். அவருக்கு வேறு வழியில்லை.

அதனால்தான், நீங்களும் நானும் அதிக 'மரியாதைக்குரிய' அடிமைகளாக இருந்திருக்கலாம், ஆனால் குறைவான மரியாதைக்குரியவர்களை இழிவாகப் பார்க்காமல் கவனமாக இருக்க வேண்டும். அது அவர்களின் விருப்பம் அல்ல; அது அடிமையின் எஜமானனின் விருப்பமாக இருந்தது. விபச்சாரியையோ குடிகாரனையோ நாம் வெறுக்கக் கூடாது. அவர்கள் அடிமைகளாக விற்கப்பட்டனர், அவர்களுக்கு வேறு வழியில்லை – அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதை அடிமையின் எஜமானனே தீர்மானித்தான்.

ATB_2023.indd 96 2/26/2024 4:20:40 PM

நீங்களும் நானும் அடிமைத்தனத்திற்குள் விற்கப்பட நிறுத்தப்பட்டபோது, இயேசு அடிமைச் சந்தைக்குள் நடந்து வந்து, 'நான் அந்த மனிதனை வாங்குகிறேன். நான் அந்தப் பெண்ணை வாங்குகிறேன். என்ன விலை? என் இரத்தம்' என்றார். அதுவே இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்படுதல் என்பதன் பொருள். அதைக்குறித்து உங்களால் உற்சாகமடைய முடியாவிட்டால், உங்களுக்காக இயேசு தம்முடைய இரத்தத்தைச் சிந்தியதன் மூலம் உங்களுக்காக என்ன சாதித்தார் என்பதை நீங்கள் ஒருபோதும் புரிந்து கொள்ளவில்லை என்பதே அர்த்தம்.

## மீட்பின் யதார்த்தம்

இயேசுவின் மீட்பின் உண்மை பெரும்பாலான மக்களுக்கு இன்னமும் யதார்த்தமாக மாறவில்லை. மீட்பின் யதார்த்தத்தை நமக்கு உண்மையானதாக மாற்றக்கூடிய ஒரே நபர் பரிசுத்த ஆவியானவர். துள்ளிக் குதித்து, கூச்சலிட்டு, நடனமாடும் அளவுக்கு உற்சாகமாக இருப்பவர்களைப் பார்த்து சிலர் சிரிப்பார்கள். ஆனால் தேவன் நமக்காக என்ன செய்திருக்கிறார் என்பதை நாம் அறிந்தால், குதித்து நடனமாடாமல் இருக்க முடியாது.

இந்த நற்செய்திக்கு தர்க்கரீதியான எதிர்வினையை பரிசுத்த ஆவியானவர் நமக்குத் தருகிறார். நீங்களும் நானும் தொலைந்து போன நித்தியத்திற்குச் செல்லும் தொலைந்த ஆத்மாக்களாக இருந்தோம். நம் இரட்சகரால் விடுவிக்கப்பட்டதைப் பற்றி நாம் ஏன் மகிழ்ச்சியடையக்கூடாது? தேவன், அன்பே தவிர வேறு எந்தக் காரணமும் இல்லாமல், அவருடைய பரிபூரணமான, களங்கமற்ற குமாரனை நம் இடத்தில் மரிக்கும்படி கொடுத்தார். எனவே, 'நான் தந்தையாகிய தேவனை நம்புகிறேன்....' என்று சொல்லும் போது, நாம் ஒரு சலிப்பான குரலில் பதிலளிக்க வேண்டுமா? அப்படி பதிலளித்தால் நாம் உண்மையிலேயே

விசுவாசிக்கிறோமா? அப்படி விசுவாசித்தால் நமது பதில் வேறுவிதமாக இருக்கும். உயிரற்ற பதில் மதம்; நமக்கு விசுவாசம் இருக்கும்போது, அது நம்மை முழுமைமாக மாற்றுகிறது.

முதல் பேதுரு 1:18–19க்கு பக்கத்தில், நான் எப்போதும் சங்கீதம் 107:2ஐ வைக்க விரும்புவேன்:

**கர்த்தரால் சத்துருவின் கைக்கு நீங்கலாக்கி மீட்கப்பட்டு,**

எதிரி யார்? சாத்தான். நாம் மீட்கப்பட்டால் நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் உண்மையில் மீட்கப்பட்டோம் என்று சொல்ல வேண்டும். இது நமது சாட்சியின் அறிக்கையின் ஒரு பகுதியாகும்.

## அணு யுக சங்கீதம்

சங்கீதம் 91 'அணு யுக சங்கீதம்' என்றும் 'எல்லா வகையான தீமை மற்றும் ஆபத்து மற்றும் தீங்குகளிலிருந்தும் பரிபூரண பாதுகாப்பின் சங்கீதம்' என்றும் அழைக்கப்படுகிறது – அவைகள் எப்படி, எப்போது வந்தாலும். இந்த அழகான சங்கீதத்தை நீங்கள் நன்கு அறிந்திருக்கலாம், எனவே நான் அதை முழுமையாக மேற்கோள் காட்ட மாட்டேன். முதல் இரண்டு வசனங்களுக்கு மட்டும் கவனம் செலுத்துவோம்:

**உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.**

எபிரேய மொழியில் 'தங்கியிருப்பான்' என்ற வார்த்தைக்கு பொதுவாக இரவைக் கடத்துவது என்று பொருள். இது 'இரவைக் கழித்தல்' என்பதற்கான குறிப்பாக அடிக்கடி பயன்படுத்தப்படும் வார்த்தையாகும். எனவே, இருள் சூழ்ந்த நேரத்தில், உண்மையான

விசுவாசி சர்வவல்லவரின் நிழல் அல்லது பாதுகாப்பின் கீழ் இருப்பார். இப்போது இரண்டாவது வசனத்தைப் பார்ப்போம்:

**நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.**

இந்தச்சொற்றொடர்கள் முன்அறைஅல்லதுநுழைவாயில்–மீதமுள்ள வசனங்களின் முழுமையான பாதுகாப்பிற்குள்ளான வழி. கதவைத் திறப்பது எது? இது உங்கள் சாட்சி: 'நான் சொல்லுவேன்.' நீங்கள் அதைச் சொல்லவில்லை என்றால், அது உங்களிடம் இல்லை. சங்கீதம் 91ல் கூறப்பட்டுள்ளதைக் கூறுவதற்கு கொஞ்சம் தைரியம் தேவை. ஆனால் அதைச் சொல்பவர்களுக்கு மட்டுமே அதில் வாழ வேதப்பூர்வ உரிமை உண்டு. அதை திறம்படச் செய்வது நமது சாட்சியின் வார்த்தை.

உண்மை நம் சாட்சியின் அறிக்கை மூலம் வருகிறது. எனவே அதைச் சொல்லலாம். என்னுடைய தனிப்பட்ட சாட்சி இது:

**இயேசுவின் இரத்தத்தினாலே நான் சாத்தானின் கையிலிருந்து மீட்கப்பட்டுள்ளேன். இயேசுவின் இரத்தத்தால் என் பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டது.**

நான் சாத்தானின் கையில் இருந்தேன்; இனி அவன் கையில் நான் இல்லை. அவன் கையிலிருந்து நான் மீட்கப்பட்டேன். உயிரை எடுக்கிறவனாகிய பிசாசின் கையிலிருந்து என்னை விடுவித்து, உயிரைக் கொடுப்பவராகிய, நல்ல மேய்ப்பரின் கையில் என்னை ஒப்புவித்ததும் இயேசுவின் இரத்தமே. மேலும், "ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறிக்கமாட்டான்" என்று இயேசு கூறினார். பிசாசின் கையிலிருந்து என் வாழ்க்கை கர்த்தருடைய கைக்கு மாற்றப்பட்டது.

இந்த அற்புதமான சத்தியத்திற்கு சாட்சியமளிப்பதன் மூலம், நீங்கள் மிகப்பெரிய ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றைச் செய்கிறீர்கள்.

இது உங்கள் வாழ்நாட்கள் முழுவதையும் பாதிக்கலாம். உங்கள் சாட்சி பரலோகத்தில் உள்ள சேனைகளால் பார்க்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. உங்கள் சாட்சியே நீங்கள் வசிக்கும் இடத்திற்கு இரத்தத்தை கொண்டு செல்லும் ஈசோப்பு.

# அத்தியாயம் 10
# சுத்திகரிப்பு

இயேசுவின் இரத்தத்தின் இரண்டாவது பயன்பாடு சுத்திகரிப்பு ஆகும். சுத்திகரிப்பு சம்பந்தமாக, நாம் பரிசீலிக்கும் முதல் வசனம் 1 யோவான் 1:7 ஆகும்.

> **அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.**

இந்த வசனத்தில், தொடரும் நிகழ்காலத்தில் மூன்று வினைச்சொற்கள் இருப்பதைக் காண்பது முக்கியம். அந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காக, வசனத்தை பின்வருமாறு விளக்கலாம்: "நாம் தொடர்ந்து ஒளியில் நடந்தால், ஒருவரோடொருவர் தொடர்ந்து ஐக்கியமாயிருப்போம், இயேசுவின் இரத்தம் நம்மைத் தொடர்ந்து சுத்திகரிக்கும்."

இந்த வசனத்தில் 'நடந்தால்' என்ற வார்த்தையின் பயன்பாடு வாக்குறுதியளிக்கப்பட்ட அனைத்து முடிவுகளும் நிபந்தனைக்குட்பட்டவை என்பதை தெளிவுபடுத்துகிறது. அவைகள் நிபந்தனைக்குக் கீழ்ப்படிதலைப் பொறுத்தது.

இந்தப் பத்தியில் இரத்தத்தைப் பயன்படுத்துவதைக் குறித்து நாம் பேசும் முன், தேவனுடைய வார்த்தையில் ஒன்றோடொன்று தொடர்புடைய அல்லது பிரிக்க முடியாத மூன்று செயல்கள் உள்ளன என்பதைக் கவனிக்க வேண்டியது அவசியம். இந்த மூன்று செயல்களும் ஒளியில் நடப்பது, ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் கொள்வது மற்றும் இரத்தத்தால் சுத்திகரிப்பு.

## நிபந்தனைக்குட்பட்ட சுத்திகரிப்பு

இரத்தத்தின் சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பைக் கோரும் பலரை நான் சந்தித்திருக்கிறேன், ஆனால் அத்தகைய சுத்திகரிப்பு மற்றும் பாதுகாப்பைப் பெறுவதற்கான நிபந்தனைகளை அவர்கள் சந்திக்கவில்லை. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் சுத்திகரித்தல் என்பது ஒரு நிபந்தனையை நிறைவேற்றுவதில் மூலம் வரும் ஒரு விளைவு ஆகும். கூறப்பட்டுள்ள நிபந்தனையை நாம் நிறைவேற்றுவதாய் அது சார்ந்திருக்கிறது.

அவர் ஒளியில் இருப்பது போல் நாமும் ஒளியில் நடந்தால், இரண்டு விளைவுகள் உண்டாகும். ஒன்றல்ல, இரண்டு. இரத்தத்தால் சுத்திகரிக்கப்படுவது இரண்டாவது விளைவு. முதல் விளைவு, நாம் ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் வைத்திருப்பது. இரண்டாவது முடிவு என்னவென்றால், இயேசுவின் இரத்தம் எல்லாப் பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்திகரிக்கிறது.

தர்க்கரீதியாக, நாம் ஐக்கியத்தில் இல்லை என்றால், நாம் வெளிச்சத்தில் நடக்கவில்லை என்பதற்கான சான்றாக இது

செயல்படுகிறது. மாறாக, நாம் வெளிச்சத்தில் நடக்கவில்லை என்றால், இயேசுவின் இரத்தத்தின் சுத்திகரிப்பை நாம் கோர முடியாது.

இறுதியில், நாம் இந்த முடிவுக்கு வருகிறோம்: நாம் ஐக்கியத்திற்கு வெளியே இருந்தால், நாம் வெளிச்சத்திற்கு வெளியே இருக்கிறோம். நாம் வெளிச்சத்திற்கு வெளியே இருந்தால், இரத்தம் நம்மை சுத்திகரிப்பதில்லை.

## வெளிச்சத்தில் மட்டுமே

இந்தக் கட்டத்தில் நான் வழங்கக்கூடிய மிக முக்கியமான கோட்பாடுகளில் ஒன்று இதுதான்: இயேசுவின் இரத்தம் வெளிச்சத்தில் மட்டுமே சுத்திகரிக்கிறது. நூற்றுக்கணக்கான கிறிஸ்தவர்கள் இரத்தத்தை அணுகுவதற்கான உரிமையைப் பற்றி தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் 1 யோவான் 1:7 இன் பிற்பகுதியை மேற்கோள் காட்டினாலும், அதில் கூறப்பட்டுள்ள நிபந்தனையை அவர்கள் ஒருபோதும் நிறைவேற்றுவதில்லை.

அவர் ஒளியில் இருப்பது போல நாமும் ஒளியில் நடக்க வேண்டும். நாம் ஒளியில் நடக்கிறோம் என்பதற்கான முதன்மையான ஆதாரம், நாம் ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் வைத்திருப்பதுதான். ஐக்கியத்திற்கு புறம்பே; வெளிச்சத்திற்கு புறம்பே. இனி இரத்த சுத்திகரிப்பின் கீழ் இல்லை. இப்படித்தான் இருக்கிறது. ஐக்கியம் என்பது ஒளியின் இடம்.

ஐக்கியம் என்பது சோதனைக்குரிய இடம். ஏன்? ஏனெனில் எவ்வளவு நெருங்கிய ஐக்கியமோ, அவ்வளவு அதிகமாக வெளிச்சம் பிரகாசமாக இருக்கும். மறைவான மூலைகள் இல்லாத, நிழல்கள் இல்லாத, விரிப்பின் கீழ் எதுவும் துடைக்கப்படாத, எதுவும் மறைக்கப்படாத இடத்திற்கு நீங்களும் நானும் வரும் வரை, நாம் வெளிச்சத்தில் இருக்க மாட்டோம். அத்தகைய வெளிப்படையான இடம் இயற்கை மனிதனை மிகவும் பயமுறுத்தும் இடம். ஆனால் இயேசுவின் இரத்தம் அதன்

சுத்திகரிப்பு செயல்பாட்டை முழுமையாக நிறைவேற்றும் ஒரே இடம் அதுதான். நீங்கள் சுத்திகரிப்பை விரும்பினால், அது வெளிச்சத்தில் உள்ளது. நீங்கள் தேவனிடம் எவ்விதத்திலும் தவறாக இருந்தால் அல்லது உங்கள் அண்டை வீட்டாரிடம் தவறாக நடந்தால், நீங்கள் முழுமையாக வெளிச்சத்தில் இல்லை. இதன் விளைவாக, இரத்தம் வெளிச்சத்தில் தவிர வேறெங்கும் பயன்படாது.

நீங்களும் நானும் செய்ய வேண்டியது என்ன? நாம் வெளிச்சத்திற்கு வர வேண்டும். வெளிச்சத்திற்கு வருவது என்றால் என்ன? நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டும். இது இயற்கை மனிதன் எடுக்கும் கடினமான நடவடிக்கைகளில் ஒன்றாகும். வெளிச்சம் மிகவும் பிரகாசமாக தெரிகிறது. 'ஓ, அந்த பயங்கரமான விஷயத்தை, அந்த மோசமான நினைவகத்தை, அந்த குற்ற ரகசியத்தை என்னால் கொண்டு வர முடியவில்லை, என்னால் அதை வெளிச்சத்திற்கு வெளிப்படுத்த முடியவில்லை.'

இயற்கை மனிதன் அதிலிருந்து பின்வாங்குகிறான். ஆனால் அது வெளிச்சத்திற்கு வரும்போது அது மறைந்துவிடும் என்பதே உண்மை. ஏன்? ஏனெனில் அப்போது இரத்தம் அதைச் சுத்திகரிக்கிறது. துரதிர்ஷ்டவசமாக, நீங்கள் அதை வெளிச்சத்திற்குக் கொண்டு வரவில்லை என்றால், நீங்கள் அதை வைத்திருக்கிறீர்கள். இது ஒரு மிக முக்கியமான கோட்பாடாகும் – இரத்தம் ஒளியில் மட்டுமே செயல்படுகிறது.

## முற்றிலும் சுத்தப்படுத்தப்படுதல்

நான் கிழக்கு ஆப்பிரிக்காவில் ஐந்து வருடங்கள் வாழ்ந்தபோது, ஸ்வாஹிலி மொழி எனக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. நான் அதை முழுமையாகக் கற்றுக்கொள்ளவில்லை, ஆனால் கொஞ்சம் புரிந்து கொள்ளும் அளவுக்கு அதில் ஈடுபட்டேன். ஸ்வாஹிலி மொழியில், முழுமையான மற்றும் நிரந்தரமான ஒன்றை விவரிக்கும் ஒரு சிறப்பு

காலம் உள்ளது. 'இயேசுவின் இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் நம்மைச் சுத்தப்படுத்துகிறது' என்று நன்கு அறியப்பட்ட பாடலில், சுவாஹிலி மொழி பேசுபவர்கள், 'தாமு யா யேசு ஹுசாஃபிஷா கபிசா' என்று கூறுவார்கள்.

ஸ்வாஹிலி மொழிக்கு சில அரபு வேர்களும் உள்ளன—அது ஆப்பிரிக்காவின் கிழக்குக் கடற்கரையில் தங்கள் பொருட்களை மேலும் கீழும் கொண்டு சென்ற அரபு வணிகர்களின் கிளை. எனவே, ஒருவருக்கு அரபு மொழி தெரிந்தால், "தாமு யா இயேசு" என்பது இயேசுவின் இரத்தத்தைக் குறிக்கிறது என்பதை அவர்கள் அறிவார்கள். ஹுசாஃபிஷா என்பது 'சுத்தப்படுத்துவது.' ஹு என்றால் அது முழுமையாக அல்லது முற்றிலும் செய்கிறது என்று அர்த்தம். 'தாமு யா யேசு ஹுசாபிஷா கபிசா' இயேசுவின் இரத்தம் நம்மை முழுவதுமாக, முற்றிலும் அல்லது பூரணமாய் எல்லாப் பாவங்களிலிருந்தும் சுத்தப்படுத்துகிறது என்று நமக்குச் சொல்கிறது. அந்த மொழிபெயர்ப்பானது எப்போதும் என்னுடன் ஒட்டிக்கொண்டது, ஏனென்றால் அது மிகவும் கச்சிதமாக கருத்தை சொல்கிறது.

நீங்களும் நானும் இயேசுவின் இரத்தத்தின் சுத்திகரிப்பு பற்றி தியானிக்கும்போது, தொடர்ச்சியான மற்றும் முழுமையான ஒன்றைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இயேசுவின் இரத்தத்தின் சுத்திகரிக்கும் வல்லமையைப் பற்றிய இந்த உண்மையை நாம் இவ்வாறு அறிக்கையிடலாம்:

> **நான் வெளிச்சத்தில் நடக்கும்போது, இயேசுவின் இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் இப்போதும் தொடர்ந்தும் என்னைச் சுத்திகரிக்கிறது.**

சங்கீதம் 51 இல் இந்தக் கருத்துக்கு அழகான வர்ணனை உள்ளது, இது தாவீது விபச்சாரம் மற்றும் கொலை செய்த பாவங்களுக்காக

தண்டனை பெற்ற பிறகு அவர் செய்த மனந்திரும்புதலின் சங்கீதமாகும். இதுவரை எழுதப்பட்ட மிக அழகான சங்கீதங்களில் இதுவும் ஒன்று என்று நான் நம்புகிறேன். நாம் ஒவ்வொருவரும் அதை அவ்வப்போது நமது சொந்த ஜெபமாக வாசிப்பது நல்லது என்று நான் நினைக்கிறேன். (சங்கீதங்களை எனது ஜெபமாக ஆக்குவதை நான் நம்புகிறேன். நான் அவற்றை மட்டும் படிப்பதில்லை, அவற்றை எனது ஜெபங்களாக படிக்கிறேன்.) வசனம் 7ல், தாவீது கூறுகிறார்:

> **நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.**

நம்முடைய முந்தைய அத்தியாயங்களிலிருந்து, தாவீது ஈசோப்பின் பயன்பாட்டை அறிமுகப்படுத்தியதை நாம் கவனத்தில் கொள்கிறோம். ஈசோப்பின்உட்பொருள் என்ன? நான் இருக்கும் இடத்திற்கு இரத்தத்தை கொண்டு வருவதற்கான வழிமுறை இது. இது இயேசுவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்படுவதற்கான ஒரு தீர்க்கதரிசன முன்னோட்டமாகும்.

இந்த வசனத்தை நீங்கள் படிக்கும் போது, அதை ஒரு பயிற்சியாக மட்டும் சொல்லாமல், அதை ஒரு பிரார்த்தனையாக ஆக்குமாறு நான் உங்களை ஊக்குவிக்கிறேன். சங்கீதம் 51:7: "ஈசோப்பினால் என்னைச் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவும், நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன். இது அழகான சிந்தனை அல்லவா?

இந்த வசனத்தை மனதில் கொண்டு, நாம் கற்றுக்கொண்ட சாட்சியை மீண்டும் கூறுவோம்:

> **நான் வெளிச்சத்தில் நடக்கும்போது, இயேசுவின் இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் இப்போதும் தொடர்ந்தும் என்னைச் சுத்திகரிக்கிறது.**

இயேசுவின் இரத்தம் இப்போது என்னைச் சுத்திகரிக்கிறது என்று இந்த அறிக்கையில் கூறுகிறேன். நான் ஏன் இதைச் சொல்கிறேன்? ஏனென்றால் நான் எப்போதும் இங்கே–இப்போது என்ற அறிக்கையை நம்புகிறேன். பொதுவான ஒன்று மட்டுமல்ல, தற்போதைய தருணத்தில் உண்மையானது. அது இப்போது என்னை இங்கே சுத்தப்படுத்துகிறது. ஆனால் அது தொடர்ந்தும் சுத்திகரித்துக்கொண்டிருக்கும்.

நாம் குற்றவாளிகளாக இருக்கும்போது நீங்களும் நானும் எங்கு செல்ல முடியும் என்பதை அறிவது என்ன ஒரு உறுதி! ஒரு கணம் நிறுத்திவிட்டு, குற்றவாளிகளாய் எங்கு செல்வது என்று தெரியாத பில்லியன் கணக்கான மக்களைப் பற்றி சிந்தியுங்கள். உங்கள் பாவத்தின் தாக்கத்தால் துன்புறுத்தப்பட்டு, மன்னிப்பையும் சமாதானத்தையும் பெற எங்கு செல்வது என்று தெரியாமல், குற்ற உணர்ச்சியுடன் இருப்பது எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். அதுதான் இன்றைய மனிதகுலத்தின் நிலை.

ATB_2023.indd 108 2/26/2024 4:20:40 PM

# அத்தியாயம் 11
# நீதிமானாக்கப்படுதல்

நம் வாழ்வில் இயேசுவின் இரத்தத்தின் அடுத்த விளைவு நீதிமானாக்கப்படுத்துதல். நீதிமானாக்கப்படுத்துதல் என்ற வார்த்தையானது, தன் உண்மையான அர்த்தத்தை அடிக்கடி மறைத்துவிடும் ஒரு அலுப்பான இறையியல் சொல்லாகும். நாம் முதலில் அந்த வார்த்தையின் மூல பதத்தைப் பார்ப்போம், பின்னர் நீதிமானாக்கப்படுத்துதலை நான் எவ்வாறு புரிந்துகொண்டுள்ளேன் என்பதை விளக்குகிறேன்.

## நீதியின் இணைப்பு

ரோமரின் நிருபத்தின் உண்மையான கருப்பொருள் – எனக்கு மிகவும் உற்சாகம் அளிக்கின்ற – நீதி. பவுல் ரோமர்களுக்கு கடிதம் எழுதுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, யோபு கேள்வி கேட்டிருந்தார்: "தேவனுக்கு

முன்பாக மனிதன் நீதிமானாக இருப்பது எப்படி?" (யோபு 9:2). ரோமரின் புத்தகமே தேவனுடைய பதில்.

ரோமரின் மையக் கருப்பொருள் நீதி – எனவே நீங்கள் நீதியில் ஆர்வம் கொண்டவர்களாய் இருந்தால், நீங்கள் ரோமரில் ஆர்வமாக இருப்பீர்கள். இதை வேறுவிதமாகக் கூறினால், உங்களுக்கு ரோமரின் புத்தகத்தில் ஆர்வம் இல்லை என்றால், நீங்கள் நீதியில் ஆர்வம் உள்ளவர்கள் அல்ல என்ற அர்த்தமாகும்.

இயேசு தம்முடைய மலைப்பிரசங்கத்தில், "நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்" என்றார். ஆசீர்வாதங்கள் அல்ல, குணப்படுத்துதல்கள் அல்ல, செழிப்பு அல்ல. ஆசீர்வாதம் பெறாமலேயே அந்த நன்மைகள் அனைத்தையும் நீங்கள் பசி தாகத்தை போல் பின் தொடரலாம். ஆனால் நீதிக்காக பசியும் தாகமும் ஏற்படும் போது, நீங்கள் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நீங்கள் நீதியின் மீது பசி மற்றும் தாகமாய் இருந்தால், எதோ ஒரு சமயத்தில் ரோமரின் புத்தகத்தை நீங்கள் பற்றிக்கொள்ளதான் வேண்டும்.

ரோமர் 5:8–9 இல் நீதிக்கும் நியாயப்படுத்தப்படுதலுக்கும் இடையே ஒரு தொடர்பைக் காண்கிறோம்:

> **நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்.**
>
> **இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே.**

முதலாவதாக, இயேசு, நமக்காகத் தம்முடைய ஜீவ இரத்தத்தைக் கொடுப்பதன் மூலம், நம்மீது தம்முடைய அளப்பரிய அன்பின் நிரூபணத்தையும் ஆதாரத்தையும் வழங்குகிறார் என்பதை நான்

உங்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வயலில் உள்ள பொக்கிஷம் மற்றும் விலை உயர்ந்த முத்து பற்றிய உவமைகள் பற்றிய நமது ஆய்வில் இந்த உண்மையைக் கண்டுபிடித்தோம். அவருடைய இரத்தத்தால் நாமும் நீதிமான்களாக்கப்பட்டோம் என்பதை இந்த வசனம் உறுதிப்படுத்துகிறது.

## குணாதிசயத்தில் ஒரு மாற்றம்

எபிரேயம் மற்றும் கிரேக்கம் இரண்டிலும் நியாயம் அல்லது நீதி என்று மொழிபெயர்க்கப்பட்ட ஒரு வார்த்தை உள்ளது. எபிரேயத்தில், இது **tsaddiq** (சதிக்) மற்றும் கிரேக்கத்தில் இது **dikaiosune** (டிகாயோசுனே) ஆகும். ஆனால் அந்த வார்த்தை நியாயம் என்று மொழிபெயர்க்கப்பட்டாலும், நீதி என்று மொழிபெயர்க்கப்பட்டாலும், அது ஒரே வார்த்தைதான். ஆங்கிலத்தில், இது மிகவும் சிக்கலானது. நியாயப்படுத்தப்படுவதற்கும் நீதிமானாவதற்கும் இடையே ஒரு நுட்பமான வேறுபாடு உள்ளது.

நியாயம் என்ற வார்த்தையைக் கருத்தில் கொள்ளும்போது, சட்டபூர்வமான மற்றும் சட்டத்தின் அடிப்படையில் நாம் சிந்திக்க முனைகிறோம். நீதி என்று சொல்லும்போது, பண்பு மற்றும் நடத்தையின் அடிப்படையில் சிந்திக்கிறோம். ஆனால் பைபிளின் மொழியில் அத்தகைய பிரிவு இல்லை. நாம் அவருடைய இரத்தத்தால் நியாயப்படுத்தப்பட்டுள்ளோம் என்பது அவருடைய இரத்தத்தால் நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்று அர்த்தம்.

நியாயப்படுத்தப்பட்டதாக மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது அதினோடு தொடர்புடைய அர்த்தங்களின் முழு வரிசையையும் கொண்டுள்ளது. முதலாவதாக, இதற்குச் சட்டப்பூர்வ அர்த்தம் உள்ளது. நீங்கள் நியாயப்படுத்தப்படும் போது, நீங்கள் நிரபராதி என்று அர்த்தம். நீங்கள் விசாரணையில் இருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் விடுவிக்கப்பட்டீர்கள். அது நல்ல செய்தி! கொலைக்குற்றம் சாட்டப்பட்டு,

விடுவிக்கப்பட்டதைக் கண்டுபிடிக்கும் போது ஒரு நபர் என்ன உணருவார் என்று யோசித்துப் பாருங்கள். அத்தகைய உணர்வை உங்களால் கற்பனை செய்ய முடிந்தால் – நியாயப்படுத்தப்படுவதைப் பற்றி நீங்கள் அப்படி உணர வேண்டும். அது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தர வேண்டும்.

இரண்டாவதாக, நீங்கள் குற்றவாளி அல்ல.

மூன்றாவதாக, நீங்கள் நீதிமான்களாகக் கருதப்படுகிறீர்கள். பல கிறிஸ்தவர்கள் அங்கேயே நிற்கிறார்கள், ஆனால் இந்த வார்த்தையின் முழு அர்த்தமும் அதைவிட அதிகம் என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். அது ‘நீ நீதிமான் ஆக்கப்பட்டாய்.’ இயேசுவின் இரத்தம் உங்களை நீதிமான்களாகக் கருதுவதற்கு மட்டும் காரணமாகாது. அது உங்களை நீதிமான்களாக்கும்.

நீதிமானாக்கப்படுவது என்ற வார்த்தையானது ‘பாவமே செய்யாததுபோல் நான் இருக்கிறேன்’ என்று கூறுவதற்கான மற்றொரு வழி. ஏனென்றால், நான் கிறிஸ்துவின் நீதியால் நீதிமானாக்கப்பட்டுள்ளேன், அதற்கு தீய கடந்த காலமும் இல்லை, குற்றத்தின் நிழலும் இல்லை. எனவே, சாத்தான் எனக்கு எதிராக எதையும் கூற முடியாது. நாம் நீதிமான்களாக்கப்பட்டாலொழிய நாம் நியாயப்படுத்தப்பட முடியாது என்பதை நீங்களும் நானும் அங்கீகரிக்க வேண்டும். இது ஒரு சட்ட விழாவை விட மேலானது. இது பெயர் அட்டையை மாற்றுவதை விட அதிகம். இது நமது குணத்திலும் வாழ்விலும் இயேசுவின் இரத்தத்தால் உருவாக்கப்பட்ட மாற்றம்.

## நீதியின் ஈவு

தெய்வீக பரிமாற்றம் என்ற எனது போதனையில், நான் வேதாகமத்திலிருந்து பெறுகின்ற கூற்றுகளில் ஒன்று பின்வருமாறு: இயேசுவின் நீதியால் நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக நம்முடைய

பாவத்தினால் அவர் பாவமாக்கப்பட்டார். அவருடைய நீதியினால் நீதிமான்களாக்கப்பட்ட நீங்கள் நியாயப்படுத்தப்பட்டுள்ளீர்கள். குற்ற உணர்ச்சியும் இல்லை, கடந்த காலத்தோடு எந்தப் பிரச்சனையும் இல்லை. அது எல்லாம் அழிக்கப்பட்டு விட்டது.

ரோமர் 3:24-25 இந்தக் கருத்தை நமக்கு மிகத் தெளிவாக்குகிறது.

> **...இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;....**

அந்த வசனத்தில் இலவசமாக என்ற வார்த்தை இருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன், ஏனென்றால் தேவன் அதை நமக்குப் பரிசாகத் தருகிறார். மதவாதிகளின் பிரச்சினைகளில் ஒன்று, அவர்கள் எப்போதும் நியாயப்படுத்துத்தலை சம்பாதிக்க முயற்சி செய்கிறார்கள் - அவர்கள் ஒருபோதும் வந்தடைவதில்லை. அவர்கள் ஒருபோதும் திருப்தியடைவதும் இல்லை அல்லது இளைப்பாறுவதும் இல்லை, ஏனென்றால் அவர்கள் நீதிமான்களாவதற்கு இன்னும் கொஞ்சம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். அது வேலை செய்யாது. வசனம் 24ஐ மீண்டும் கூறுவோம், மேலும் கொஞ்சம் சேர்ப்போம்:

> **...இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; தேவன் பொறுமையாயிருந்த முற்காலத்தில் நடந்த பாவங்களைத் தாம் பொறுத்துக்கொண்டதைக்குறித்துத் தம்முடைய நீதியைக் காண்பிக்கும்பொருட்டாகவும், தாம் நீதியுள்ளவரும், இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவனை நீதிமானாக்குகிறவருமாய் விளங்கும்படி,...**

இயேசுவின் இரத்தத்தில் உள்ள விசுவாசத்தின் மூலம் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். இந்தக் குறிப்பைப் பற்றிய கூடுதல் விளக்கமாக, ரோமர் 4:4ஐ நாம் சுருக்கமாகப் பார்க்க வேண்டும்:

**கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி கிருபையென்றெண்ணப்படாமல், கடனென்றெண்ணப்படும்.**

பல கிறிஸ்தவர்களின் தவறான எண்ணம் இவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது: “நான் எப்போதும் சரியாக வாழ்ந்துள்ளேன், எப்போதும் என் கடமையைச் செய்துள்ளேன். தேவன் எனக்கு கடன்பட்டிருக்கிறார். தேவன் அதை எனக்குக் கொடுக்க வேண்டும்; அது ஒரு கடன்.” ஆனால் உண்மையில், தேவன் யாருக்கும் கடன்பட்டிருக்கவில்லை.

இதை உறுதிப்படுத்த, வசனம் 5 இன் தொடக்கத்தைப் பார்ப்போம்:

**ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால்,...**

நீங்கள் எடுக்க வேண்டிய முதல் படி என்ன? எதையும் செய்வதை நிறுத்துங்கள். உங்களை நீதிமான்களாக்கும் முயற்சியை நிறுத்துங்கள். கொஞ்சம் சிறப்பாக இருக்க முயற்சிப்பதை நிறுத்துங்கள். அதையெல்லாம் நிறுத்துங்கள். நீங்கள் என்ன செய்ய வேண்டும்? நம்புங்கள். இது அவ்வளவு எளிமையானதா? இது அவ்வளவு எளிதானது இல்லையென்றால், நீங்களும் நானும் அதை ஒருபோதும் அடைய மாட்டோம்.

5வது வசனத்தில் உள்ள அற்புதமான உண்மையைக் கவனியுங்கள்:

**ஒருவன் கிரியை செய்யாமல் பாவியை நீதிமானாக்குகிறவரிடத்தில் விசுவாசம் வைக்கிறவனாயிருந்தால், அவனுடைய விசுவாசமே அவனுக்கு நீதியாக எண்ணப்படும்.**

தேவன் நேர்மையற்றவர்களை நீதிமான்களாக்குகிறார். அதைத்தான் வேதம் சொல்கிறது, நான் அதை நம்புகிறேன்!

2 கொரிந்தியர் 5:21 இல் இதே போன்ற உண்மையை நாம் காண்கிறோம்:

> **நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்.**

முதல் சில பிரதிபெயர்களின் இடங்களில் சில பெயர்களை வைக்க விரும்புகிறேன்: 'ஏனெனில், நாம் இயேசுவுக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத இயேசுவை நமக்காக (தேவன்) பாவமாக்கினார்.'

இந்தப் பகுதியின் தொடக்கத்தில் நான் மேற்கோள் காட்டிய முழுமையான பரிமாற்றத்தை இந்த வசனம் வெளிப்படுத்துகிறது: நாம் அவருடைய நீதியால் நீதிமான்களாக்கப்படுவதற்காக இயேசு நம்முடைய பாவத்தினால் பாவமாக்கப்பட்டார். இந்த நீதி அவருடைய இரத்தத்தில் உள்ள விசுவாசத்தின் மூலம் கிடைக்கிறது. இரத்தத்தில் உள்ள விசுவாசத்தினால் நாம் நீதிமான்களாக்கப்பட்டோம்.

## அவருடைய நீதி

இயேசுவின் அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்ட கட்டளை – மத்தேயு 6:33 – அடிக்கடி தவறாகப் புரிந்து கொள்ளப்படுகிறது:

> **முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்; (உங்களுடையது அல்ல).**

ரோமர் 10ல் யூதர்கள் தங்கள் சொந்த நீதியை நிலைநாட்டப் போய், இயேசு கிறிஸ்துவின் விசுவாசத்தினாலே தேவனால் உண்டான

நீதிக்கு தங்களை ஒப்புக்கொடுக்கவில்லை. இயேசு கிறிஸ்துவின் நீதியை ஏற்றுக்கொள்ள மனத்தாழ்மை தேவை. ஏன்? ஏனென்றால், முதலில், உங்கள் பழைய சுயமரியாதையின் ஒவ்வொரு துளியையும் நீங்கள் துறந்துவிட்டீர்கள் என்று அர்த்தம்.

ஏசாயா 64:6 சொல்கிற கருத்தைக் குறித்துப் பல கிறிஸ்தவர்கள் ஆச்சரியப்படுகிறார்கள்:

> எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது,

நம்முடைய பாவமெல்லாம் அல்ல, நம்முடைய நீதிகள் யாவும் தேவனுடைய பார்வையில் அழுக்கான கந்தையாய் இருக்கிறது. நீங்களும் நானும் நம்முடைய தேவாலய உறுப்பினரிடம், சுயநீதி, நற்செயல்கள், பக்தி ஆகியவற்றின் அழுக்கு கந்தல்களை வெளிப்படுத்தும் வரை, பிசாசு தேவனுடைய முன்னிலையில் நம்மை கிழித்து எறிந்துவிடுவான். ஆனால் நீங்களும் நானும் தேவனுடைய வார்த்தை, இயேசுவின் இரத்தம் மற்றும் கிறிஸ்துவின் விசுவாசத்தினால் உண்டான நீதியைத் தவிர வேறு எதையும் சார்ந்து இல்லாத இடத்திற்கு வரும்போது, நாம் பிசாசுக்கு இலக்காக இருக்க முடியாது. தேவனுக்கு முன்பாக அவன் குற்றஞ்சாட்டுவதன் மூலம் விரலை வைக்க நம்மில் எதுவும் இல்லை.

## நீதியின் முடிவுகள்

உண்மையான நீதியானது நம் வாழ்வில் சில உடனடி மற்றும் உறுதியான விளைவுகளை ஏற்படுத்த வேண்டும். வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள சிலவற்றை ஆராய்வோம். உண்மையில், நமது வாழ்க்கை முறை, நமது அணுகுமுறை, நமது உறவு, நமது கிறிஸ்தவ வாழ்க்கை மற்றும் சேவையின் செயல்திறன் ஆகியவை, நாம் நீதிமான்களாக

ஆக்கப்பட்டுள்ளோம் என்பதை நாம் எவ்வளவு உணர்ந்துகொள்கிறோம் என்பதைச் சார்ந்திருக்கிறது. நீதிமொழிகள் 28:1 கூறுகிறது:

> ஒருவனும் தொடராதிருந்தும் துன்மார்க்கர் ஓடிப்போகிறார்கள்; நீதிமான்களோ சிங்கத்தைப்போலே தைரியமாயிருக்கிறார்கள்.

இன்று பெரும்பாலான கிறிஸ்தவர்களிடையே அதிக தைரியத்தை நாம் காணபதில்லை. பெரும்பாலும் அநேகர் பயமுற்றும் மன்னிப்பு கேட்கிறவர்களாகவும் இருக்கின்றனர். தீமை அல்லது பிசாசை எதிர்கொள்ளும்போது அவர்கள் பின்வாங்க முனைகிறார்கள். உண்மையான மூலகாரணம், அவர்கள் தேவனுடைய பார்வையில் நீதிமான்கள் என்ற உண்மையை—இயேசு கிறிஸ்துவைப் போலவே நீதிமான்கள் என்ற உண்மையை—அவர்கள் ஏற்றுக்கொண்டு மதிக்கவில்லை. நீங்களும் நானும் அதை அங்கீகரிக்கும்போது, அது நம்மைத் தைரியப்படுத்துகிறது.

நீதியின் மற்றொரு முடிவை ஏசாயா அழகாகக் கூறுகிறார்:

> கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன்; என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது; மணவாளன் ஆபரணங்களினால் தன்னை அலங்கரித்துக்கொள்ளுகிறதற்கும், மணவாட்டி நகைகளினால் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளுகிறதற்கும் ஒப்பாக, அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்.
>
> (ஏசாயா 61:10)

ஏசாயா இரண்டு ஏற்பாடுகளைக் கொண்டாடுகிறார்—இரட்சிப்பு மற்றும் நீதி. நாம் இயேசு கிறிஸ்துவின் மீதும், நமக்காக அவருடைய தியாகத்தின் மீதும் நம்பிக்கை வைக்கும்போது, இரட்சிப்பின் ஆடையை அணிவோம். ஆனால் அது அங்கு நிற்கவில்லை – நீங்களும் நானும்

நீதியின் அங்கியால் மூடப்பட்டிருப்போம். அவர் 'நீதியின் அங்கியால் என்னைச் சுற்றிக்கொண்டார்' என்று ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு (NASB) கூறுகிறது.

இந்த ஊக்கமளிக்கும் வார்த்தையை நான் உங்களுக்கு கொடுக்கலாமா? நீங்கள் முற்றிலும் இயேசு கிறிஸ்துவின் நீதியால் மூடப்பட்டிருக்கிறீர்கள். பிசாசு உங்களுக்கு எதிராக எதுவும் சொல்ல முடியாது. நீங்கள் தவறு செய்த அனைத்தையும் அவன் உங்களுக்கு நினைவூட்டினால், அவனுடன் உடன்படுங்கள். "நீ சொல்வது சரிதான், சாத்தானே. ஆனால் அது எல்லாம் கடந்த காலத்தில்தான். இப்போது நான் இயேசு கிறிஸ்துவின் நீதியை அணிந்திருக்கிறேன். இதில் ஏதாவது தவறு கண்டுபிடிக்க முடியுமா என்று பாரு!"

ஏசாயா நீதியின் இன்னும் சில முடிவுகளை மேற்கோள் காட்டுகிறார். ஏசாயா 32:17 கூறுகிறது:

> **நீதியின் கிரியை சமாதானமும், நீதியின் பலன் என்றுமுள்ள அமரிக்கையும் சுகமுமாம்.**

இந்த வசனத்தின்படி, நீதியின் மூன்று விளைவுகள் உள்ளன–சமாதானம், அமைதி மற்றும் உறுதி. இயேசு கிறிஸ்துவின் நீதியால் நாம் நீதிமான்களாக்கப்பட்டோம் என்பதை உணருவதிலிருந்து அவை அனைத்தும் வந்துள்ளன. அது நமக்குத் தைரியத்தையும், சமாதானத்தையும், அமைதியையும், உறுதியையும் தருகிறது.

புதிய ஏற்பாட்டில் இதேபோன்ற சிந்தனைக்கு கடந்துபோவோம், ரோமர் 14:17, ஒரு பழக்கமான வசனம், கூறுகிறது:

> **தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது.**

இந்தக் குணாதிசயங்கள் அனைத்தும் நீதியின் விளைவுகள். விசுவாசத்தினால் நாம் நீதியைப் பெறாவிட்டால், இந்த மற்ற எல்லா குணங்களுக்காகவும் போராடி முயற்சிப்போம், ஆனால் அவற்றை அடைய முடியாது. கிறிஸ்தவர்கள் யாரோ சொன்னதினால், மகிழ்ச்சியாக இருக்க முயல்வது, அமைதி பெற முயற்சிப்பது, ஓய்வெடுக்க முயற்சிப்பது அல்லது உறுதியாக இருக்க முயற்சிப்பது போன்றவற்றைப் பார்ப்பது பரிதாபமாக இருக்கிறது—இவை அனைத்தும் அவர்களுக்கு இருக்க வேண்டும் என்று அந்த நபர்கள் சொன்னதினால்!

என் அனுபவம் என்னவென்றால், ஒரு விசுவாசி உண்மையிலேயே பாவமன்னிப்பு மற்றும் விசுவாசத்தின் மூலம் நீதியின் நிச்சயத்தில் நடக்கும்போது, இவை அனைத்தும் நடக்கும். மகிழ்ச்சி இயற்கையாகவே பாய்கிறது. சமாதானம் ஒரு முயற்சி அல்ல. உறுதி இருக்கிறது. தைரியம் தன்னை வெளிப்படுத்துகிறது. இது நிகழாதபோது, மூலப் பிரச்சனை என்னவென்றால், விசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் நீதியால் நீதிமான்களாக்கப்பட்டதை உணர வேண்டும்.

## மதத்திற்கு எதிராக நீதி

முரண்பாடாக, பெரும்பான்மையான மதவாதிகள் தாங்கள் எவ்வளவு பாவம் செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி சுற்றிச் சென்றால், அவர்கள் மிகவும் பரிசுத்தமானவர்கள் என்று நினைக்கிறார்கள். ஒரு நபர் தன்னை நேர்மையானவர் என்று கூறிக்கொண்டால் அவர் மிகவும் கர்வத்துடன் இருப்பார் என்பது பொதுவான மத அணுகுமுறை. உங்கள் தோல்விகள், உங்கள் முரண்பாடுகள் மற்றும் நீங்கள் செய்த தவறுகளைப் பற்றி தொடர்ந்து பேசினால், நீங்கள் மதவாதி என்று இதே நபர்கள் அடிக்கடி கூறுவார்கள்.

நான் வளர்க்கப்பட்ட தேவாலயத்தில், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையும் நாங்கள் அத்தகைய அறிக்கைகளை செய்ய

வேண்டியதிருந்தது. நாங்கள் “மா பாவிகள், எங்களை மன்னியும். காணாமற்போன ஆடுகளைப் போல நாங்கள் வழித்தப்பி திரிந்து; செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளை செய்து வந்தோம், எங்களுக்குச் சுகமே இல்லை” என்று சொல்ல வேண்டியிருந்தது.

அந்த வார்த்தைகளை சொல்வதில் ஒருவித தயக்கத்தை நான் எப்போதும் உணர்ந்தேன். எப்படியோ, நான் ஒரு பரிதாபகரமான குற்றவாளியாக வகைப்படுத்தப்பட விரும்பவில்லை என்று எனக்குத் தெரியும். மற்ற குற்றவாளிகளைப் பார்த்தபோது, அவர்கள் பரிதாபகரமானவர்கள் என்பதை நான் நிச்சயமாக ஒப்புக்கொண்டேன். இறுதியில், ’எல்லா மதங்களாலும் என்னை ஒரு பரிதாபகரமான குற்றவாளியாக செய்ய முடிந்தால், நான் மதம் இல்லாமல் ஒரு குற்றவாளியாக இருக்க முடியும் – பாதி பரிதாபம் இல்லாமல்!’ என்று சொல்லிக் கொண்டேன். அதனால் இறுதியாக நான் வருத்தம் இல்லாத குற்றவாளி ஆனேன்.

இப்போது, அந்த வார்த்தைகளை என்னால் சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால் நான் ஒரு நயவஞ்சகனாக இருப்பேன். முதலாவதாக, இயேசு கிறிஸ்துவில் எனக்கு தெய்வீக ஆரோக்கியம் இருப்பதாக நான் நம்புகிறேன். இரண்டாவதாக, ஆறு நாட்களுக்குப் பிறகு, ஞாயிற்றுக்கிழமை காலையில், நான் தவறிவிட்டேன், வழிதவறிவிட்டேன், நான் செய்யக்கூடாதவற்றைச் செய்தேன் என்று சொல்ல வேண்டும் என்பது தெரிந்தால், திங்கட்கிழமை காலையில் பாவத்தின் மீதான வெற்றிக்காக நான் எப்படி ஜெபிப்பேன்?

பிரச்சனையைப் பார்க்க முடிகிறதா? இத்தகைய அறிக்கைகள் எனது நம்பிக்கையின் அடிப்படையை முற்றிலும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. ஆனாலும் அது கேட்பதற்கு மிகவும் நன்றாக தோன்றுகிறது. நான் இதைச் சொல்வதைக் கேட்கும்போது நீங்கள்

ATB_2023.indd 120 2/26/2024 4:20:40 PM

திகிலடையலாம், ஆனால் நான் ஒவ்வொரு வார்த்தையையும் உணர்ந்தே சொல்கிறேன். இருபது ஆண்டுகள் நான் அதைக் கடந்து வந்தேன், அது போதும்!

இயேசுவின் இரத்தத்தின் மூலம் நீதிமானாக்கப்பட்டதைப் பற்றிய எனது அறிக்கை இதோ:

> **இயேசுவின் இரத்தத்தினால், நான் நியாயப்படுத்தப்பட்டு, விடுதலையாக்கப்பட்டு, குற்றமற்றவன் என்று தீர்க்கப்பட்டு, நீதிமானாக எண்ணப்பட்டு, பாவமே செய்யாதது போல் நீதிமானாக்கப்பட்டுள்ளேன்!**

அதுவே நான் வசிக்கும் இடத்திற்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் என் சாட்சி. ஒன்றுக்கு மேற்பட்ட முறை இதைச் சொல்ல நான் உங்களை ஊக்குவிக்கிறேன். தேவனுடைய வார்த்தையிலிருந்து வந்த இந்த சத்தியத்திற்கு நான் எவ்வளவு அதிகமாக சாட்சி கொடுக்கிறேனோ, அவ்வளவு சிறப்பாக நான் உணர்கிறேன். இதன் முடிவு? நான் இயேசுவில் நீதியுள்ளவன் என்பதை அறிவது எனக்கு மிகுந்த தைரியத்தையும், அமைதியையும், உறுதியையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது.

ATB_2023.indd 122 2/26/2024 4:20:40 PM

# அத்தியாயம் 12
# பரிசுத்தமாக்கப்படுதல்

நான் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்பும் இயேசுவின் இரத்தத்தின் அடுத்த பயன்பாடு பரிசுத்தமாக்கப்படுதல்.

பரிசுத்தமாக்கப்படுதல் என்பது, சில நேரங்களில் பொருள் மறைக்கப்படும் அந்த நீண்ட சொற்களில் ஒன்றாகும். சாராம்சத்தில், பரிசுத்தமாக்கப்படுதல் என்பது மூல பாஷைகளில் பரிசுத்தம் என்ற வார்த்தையுடன் நேரடியாக தொடர்புடையது. Sanctify (பரிசுத்தமாகுதல்) என்ற ஆங்கில வார்த்தை, Saint (பரிசுத்தவான்) என்ற வார்த்தையுடன் தொடர்புடையது.

## உடன்படிக்கை

இந்த முதல் பகுதியில், இயேசுவின் இரத்தத்தின் பரிசுத்தமாக்கும் வல்லமையைக் காட்ட எபிரேயரின் புத்தகத்திலிருந்து இரண்டு வசனங்களை எடுத்துக் கொள்வோம்.

நாம் முதலில் எபிரெயர் 10:29-ஐப் பார்ப்போம், அது ஒரு விசுவாச துரோகியைப் பற்றி பேசுகிறது. இவர் ஒரு காலத்தில் கிறிஸ்தவை அறிந்திருந்தும், நம்பிக்கையிலிருந்து பின்வாங்குபவர்-- கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை வேண்டுமென்றே மறுதலித்து நிராகரிப்பதன் மூலம் விசுவாசத்திலிருந்து விலகிச் செல்கிறார். அவர் துறக்கும் மற்றும் ஒரு வகையில் தீட்டுப்படுத்தும் நம்பிக்கையின் அனைத்து புனித காரியங்களையும் இப்பகுதி குறிப்பிடுகிறது.

> தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள்.

இயேசுவின் இரத்தத்தை காலடியில் மிதிப்பது பற்றி வசனம் பேசுகிறது என்பதைக் கவனியுங்கள். இந்தக் குறிப்பு பஸ்கா விழாவுடன் தொடர்புடையது, அங்கு இரத்தம் வாசல் நிலைக்கால்கள் மற்றும் மேற்சட்டத்தில் பூசப்பட்டது, வாசற்படியில் அல்ல. இயேசுவின் இரத்தத்திற்கு நாம் ஒருபோதும் அவமரியாதை காட்டக்கூடாது. ஆனால் இங்கே ஒரு நபர் புதிய உடன்படிக்கையின் இரத்தத்தால் பரிசுத்தப்படுத்தப்பட்டார், பின்னர் அதிலிருந்து பின்வாங்குகிறார். இங்கு நாம் பேசுவதற்கான முக்கிய விஷயம் என்னவென்றால், மக்கள் நம்பிக்கையிலிருந்து பின்வாங்குகிறார்கள் என்பது அல்ல, ஆனால் உடன்படிக்கையின் இரத்தத்தால் நாம் பரிசுத்தமாக்கப்படுகிறோம் என்பதுதான்.

நாம் ஆராய விரும்பும் எபிரேயரின் இரண்டாவது வசனம் அத்தியாயம் 13, வசனம் 12:

> **அந்தப்படியே, இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்.**

இது, இயேசு நகர வாசலுக்கு வெளியே பாவநிவாரண பலியாக சிலுவையில் அறையப்பட்டதைக் குறிக்கிறது, இது தேவனுடைய மக்களின் இருக்கும் வளாகத்திற்குள் செலுத்தப்பட முடியாது.

## பிரித்தெடுக்கப்படுதல்

நமது பரிசுத்தம் அல்லது பரிசுத்தமாக்கப்படுதல் என்ற விஷயத்தில், சில முக்கியமான பரிசீலனைகள் உள்ளன. பரிசுத்தமாக அல்லது தேவனுக்குப் பிரித்துவைக்கப்பட்டவர்கள் என்று எண்ணப்படுவதற்கு, நாம் சரியான அறிக்கையை ஏறெடுக்க வேண்டும். இதில் இரண்டு அம்சங்கள் உள்ளன – நாம் எதில் இருந்து பிரிக்கப்பட்டுள்ளோம், எதற்காக பிரிக்கப்பட்டுள்ளோம். நாம் பாவத்திலிருந்தும், தீட்டுப்படுத்துகிற எல்லாவற்றிலிருந்தும் பிரித்து வைக்கப்பட்டு, தேவனுடைய சொந்த பரிசுத்தத்தால் பரிசுத்தமாக்கப்படுகிறோம்.

பரிசுத்தமாக்கப்படுவது என்பது சாத்தானின் வருகையின் பகுதியிலிருந்து அகற்றப்பட்டு, நீங்கள் தேவனுக்குப் பயன்படும் இடத்தில் நிறுத்தப்பட வேண்டும் –– பிசாசு அழைக்கும்போது அவனுக்கு இடம் இருக்க கூடாது. பரிசுத்தமாக்கப்பட்ட ஒருவர் ஆவிக்குரிய ரீதியில் தேவன் அவரை அணுகக்கூடிய இடத்தில் இருக்கிறார், பிசாசு அணுக முடியாது. அதுதான் பரிசுத்தமாக்கப்படுதல் என்பதன் பொருள் – தேவனுக்காகப் பிரித்துவைக்கப்பட்டு, பரிசுத்தமாக்கப்படுதல்.

நமது நீதியின் செயல்முறை போலவே, சுத்திகரிப்பு அல்லது பரிசுத்தம், கிரியைகள், முயற்சிகள் மதத்தால் வருவதில்லை. இது இயேசுவின் இரத்தத்தில் உள்ள விசுவாசத்தினால் வருகிறது. 'தம்முடைய இரத்தத்தால் மக்களைப் பரிசுத்தப்படுத்துவதற்காக, இயேசு, நகர வாசலுக்கு வெளியே பாடுபட்டார்.' பரிசுத்தமாக்கப்படுவதென்றால் தேவனுக்கென்று பிரித்து வைக்கப்படுவதாகும். தேவனுடையது அல்லாத எதுவும் உங்களை அணுகுவதற்கு உரிமை இல்லை, அது இரத்தத்தால் விலக்கப்படுகிறது.

## ஒரு மீட்பின் வேறுபாடு

சுத்திகரிப்பு மற்றும் பரிசுத்தத்தில் பிரித்துவைக்கப் படுவது, நாம் யார் என்பதில் ஒரு வேறுபாட்டை நிறுவுகிறது. எகிப்து மக்களுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் இடையே ஒரு மீட்பின் வித்தியாசத்தை ஏற்படுத்துவதாக, பார்வோனிடம் தேவன் கூறினார். எகிப்தில் குடியிருந்தாலும், எகிப்தில் வந்த வாதைகள் இஸ்ரவேலருக்கு வராது. இது ஏன் நடந்தது? ஏனென்றால், மீட்பின் வித்தியாசம் இருந்தது. நம் வாழ்வின் மீட்பின் வேறுபாடு இயேசுவின் இரத்தமே. இயேசுவின் இரத்தத்தால் நாம் தேவனுக்கென்று பிரித்து வைக்கப்பட்டுள்ளோம்.

துன்மார்க்கர்கள் மீதான அவருடைய நியாயத்தீர்ப்பு நீதிமான்கள் மீதும் வர வேண்டும் என்பது தேவனுடைய விருப்பம் அல்ல என்பது உங்களுக்குத் தெரியுமா? இங்கே இந்தக் கோட்பாட்டிற்குள் செல்ல என்னால் நேரம் எடுக்க முடியாது, ஆனால் வேதம் முழுவதும் உறுதிப்படுத்தும் உண்மை இது. (ஒரு உதாரணத்திற்கு ஆதியாகமம் 18:25 ஐப் பார்க்கவும்.) நான் இயேசுவின் இரத்தத்தால் தேவனுக்கென்று பிரித்துவைக்கப்பட்டால், பொல்லாதவர்கள் மீதான தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் என் மீது ஒருபோதும் விழக்கூடாது. நான் பிரிந்து

நிற்கிறேன். அந்த நியாயத்தீர்ப்புகள் பொருந்தும் ஆவிக்குரிய பிரதேசத்தில் நான் இல்லை.

## முற்றிலும் இடம்பெயர்ந்தவர்கள்

இது தொடர்பாக, கொலோசெயரின் ஒரு வசனத்தை மட்டும் தருகிறேன். இது கொலோசெயர் 1:13-14, ஆனால் நான் வசனம் 12இலிருந்து துவங்குவேன். அனைத்து விசுவாசிகளின் சார்பாக முதல் நபரில், பன்மையில் பேசுகையில், பவுல் கூறுகிறார்:

> ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும், இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.

இருளுக்கு வல்லமை உண்டு என்பதை கவனியுங்கள். கீழ்ப்படியாமையின் காரணமாக, கீழ்ப்படியாதவர்களின் மீது சாத்தானுக்கு அதிகாரம் உள்ளது.

சாத்தானின் வல்லமை இருந்தபோதிலும், இயேசுவின் இரத்தத்தில் விசுவாசம் வைத்து, சாத்தானின் அதிகாரப் பகுதியிலிருந்து நாம் அகற்றப்பட்டுள்ளோம். நாம் தேவன் மற்றும் இயேசு கிறிஸ்துவின் ராஜ்யத்திற்கு மாற்றப்பட்டுள்ளோம் அல்லது இடம்பெயர்க்கப்பட்டுள்ளோம். கிரேக்க மொழியில், convey (KJV யில் மொழிபெயர்க்கவும்) என்ற வார்த்தைக்கு 'ஒரு இடத்திலிருந்து மற்றொரு

இடத்திற்கு கொண்டு செல்வது' என்று பொருள். வேதாகமத்தில், இது மொத்த பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது.

பழைய ஏற்பாட்டில், பூமியிலிருந்து பரலோகத்திற்கு இடம்பெயர்க்கப்பட்ட இரண்டு மனிதர்கள் இருந்தனர். ஏனோக்கு மற்றும் எலியா – இருவரும் உடல் ரீதியில் பரலோகத்திற்குச் சென்றனர். எலியா விட்டுச் சென்றது அவனுடைய மேலங்கியை மட்டுமே, ஆனால் அவனது உடல் பரலோகத்திற்குச் சென்றது. நான் வேதத்தை புரிந்து கொண்டபடி, இதுவே நமக்கும் உண்மை–நாம் முற்றிலும் இடம்பெயர்க்கப்பட்டிருக்கிறோம். இனி நடக்கப் போவதில்லை; நாம் ஏற்கனவே இடம்பெயர்க்கப்பட்டுள்ளோம்—ஆவி, ஆத்துமா மற்றும் சரீரம். நாம் பிசாசின் பிரதேசத்திலோ அல்லது பிசாசின் சட்டங்களின் கீழோ இல்லை. நாம் தேவனுடைய குமாரனின் பிரதேசத்திலும் அவருடைய சட்டங்களின் கீழும் இருக்கிறோம்.

## இரண்டு எதிரிடை சட்டங்கள்

பிசாசின் சட்டம் மற்றும் தேவனின் சட்டம் இரண்டும் ரோமர் 8 இல் கூறப்பட்டுள்ளது. பிசாசின் சட்டம் பாவம் மற்றும் மரணத்தின் சட்டம். ஆனால் தேவனுடைய ராஜ்யத்தின் சட்டம், கிறிஸ்து இயேசுவிலுள்ள ஜீவனின் ஆவியின் பிரமாணமாகும். அந்த வசனத்தை ஒரு கணம் ஆராய்வது நல்லது, ஏனென்றால் அது இரண்டு ராஜ்யங்களையும் அவற்றின் எதிரெதிர் சட்ட அமைப்புகளின் செயல்பாடையும் இங்கே விவரிக்கிறது. ரோமர் 8:2ல், பவுல் தனது தனிப்பட்ட அறிக்கையை அளிக்கிறார்:

> கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.

நான் பிசாசின் பிரதேசத்தில் இல்லை, நான் பிசாசின் சட்டத்தின் கீழ் இல்லை. அவனுடைய ராஜ்யம் எனக்குப் பொருந்தாது. ஏனென்றால் நான் வேறொரு ராஜ்யத்தில் இருக்கிறேன். நான் இயேசுவின் இரத்தத்தின் மூலம் ஆவி, ஆத்துமா மற்றும் சரீரமாக இடம்பெயர்க்கப்பட்டேன்/மாற்றப்பட்டுள்ளேன். அந்த இடபெயர்ப்பு இயேசுவின் இரத்தத்தால் தேவனுக்குப் பரிசுத்தமாக்கப்படுவதன் மூலம் (அல்லது பிரித்தெடுக்கப்பட்டதன் மூலம்) வருகிறது.

## பாஸ்போர்ட் தேவை

சரீரத்தின் உயிர்த்தெழுதலுக்கும் ஒரு ராஜ்யத்திலிருந்து மற்றொரு ராஜ்யத்திற்கு இடம்பெயர்க்கப்படுவதற்கும் இடையே ஒரு ஒப்பீடு செய்ய விரும்புகிறேன். இயேசு சரீரத்தில் உயிர்த்தெழுந்தது, நமது உயிர்த்தெழுதலுக்கு ஒரு முன்மாதிரி. வேறொரு வெளிச்சத்தில், பவுல் பிலிப்பியர் 3ல் 'நம்முடைய குடியிருப்பு பரலோகத்தில் உள்ளது' (வசனம் 20) என்று கூறுகிறார். அந்த உண்மை மீண்டும் பிறந்து இயேசுவுக்காக வாழ தன்னை அர்ப்பணித்த அனைவருக்கும் பொருந்தும். நாம் இந்த பூமியில் வாழ்கிறோம், நாம் இங்கே பூமியில் உள்ள ஒரு நாட்டின் குடிமக்கள் – ஆனால் நமது உண்மையான குடியுரிமை பரலோகத்தில் உள்ளது.

நீங்கள் ஒரு நாட்டின் குடிமகனாக இருந்தால், அந்த நாட்டிலிருந்து பாஸ்போர்ட்டை எடுத்துச் செல்லும் பாக்கியம் உங்களுக்கு உள்ளது. இது உங்கள் குடியுரிமைக்கான சான்று. நம்மிடம் பாஸ்போர்ட் உள்ளது, அது நம்மைப் பரலோகத்தின் குடிமக்களாக அடையாளப்படுத்துகிறது – அதுதான் இயேசுவின் இரத்தம்.

**நம்முடைய குடியிருப்போ பரலோகத்திலிருக்கிறது, அங்கேயிருந்து கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.**

**அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.**

**(பிலிப்பியர் 3:20–21)**

ஒரு உண்மையான கிறிஸ்தவரின் அடையாளத்தை தயவுசெய்து கவனியுங்கள் – நீங்களும் நானும் இரட்சகருக்காக ஆவலுடன் காத்திருக்கிறோம். 'எங்கள் அற்பமான சரீரம்' என்ற சொற்றொடரின் புதிய கிங் ஜேம்ஸ் மொழிபெயர்ப்பு ஒரு நேரடி மொழிபெயர்ப்பு அல்ல. நேரடியான மொழிபெயர்ப்பு மிகவும் தெளிவானது: 'அவர் நம்முடைய அவமானத்தின் சரீரத்தை அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒத்திருக்குமாறு மாற்றுவார்.'

நாம் ஒவ்வொருவரும் பாவத்தின் காரணமாக அவமானமான நிலையில் இருக்கிறோம் என்பதை நம் உடலால் தொடர்ந்து நினைவுபடுத்தப்படுகிறோம். ஆனால் இயேசு இந்த அவமானத்தின் சரீரத்தை தம்முடைய மகிமையின் சரீரத்தின் சாயலாக மாற்றப் போகிறார். அது ஒரு உற்சாகமான வாய்ப்பு – எதிர்நோக்க வேண்டிய ஒன்று.

## அவரது பரிசுத்தத்தில் பங்கேற்பவர்கள்

நமது சரீரங்கள் அவமானகரமான நிலையில் உள்ளன என்பதை நினைவூட்டும் 'தண்டனை' உடன் இணைத்து, எபிரேயரின் புத்தகம் இதே போன்ற சிந்தனையைக் கொண்டுள்ளது. நமது பூமிக்குரிய பிதாக்கள் தங்களின் சிறந்த தீர்ப்பின்படி நம் வாழ்நாளில் ஒரு குறுகிய காலத்திற்கு

நம்மைத் சிட்சித்தார்கள் என்று அது கூறுகிறது. ஆனால் தேவன் அதையே வேறு விதத்தில் வேறொரு முடிவுக்காக செய்கிறார்:

> **அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். (எபிரெயர் 12:10)**

முடிவுகளைப் பெற நாம் எதையும் செய்யவில்லை என்பதை மீண்டும் கவனியுங்கள். நாம் நீதிமான்களாக இருப்பதற்கு நம்முடைய சொந்த முயற்சியால் நீதிமான்களாக்கப்படுவதில்லையோ, அதேபோல் பரிசுத்தமாக இருப்பதற்காக நமது சொந்த முயற்சிகளால் நாம் பரிசுத்தமாக்கப்படுவதில்லை. இயேசுவின் இரத்தத்தினாலே அவருடைய பரிசுத்தத்தில் பங்கு பெறுகிறோம்.

அந்த எண்ணத்தை வெளிப்படுத்துவதற்கான சாத்தியமான வாய்மொழி அறிக்கை இதோ:

> **இயேசுவின் இரத்தத்தினாலே, நான் சுத்திகரிக்கப்பட்டு, பாவத்திலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு, தேவனுக்கென்று பிரித்து வைக்கப்பட்டு, தேவனுடைய பரிசுத்தத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டுள்ளேன்.**

## கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள்

நமது சரீரங்களைப் பற்றிய நமது விவாதத்தைக் குறிப்பிடுகையில், விவாதத்தை ஒரு படி மேலே கொண்டு செல்ல விரும்புகிறேன். விசுவாசியின் உடலைப் பொறுத்தவரை, நம் உடல்களைப் பற்றிய நாம் பிரகடனம் செய்யும் தருணத்தில், இயேசுவின் இரத்தம் உண்மையில்

செயல்படத் தொடங்குகிறது என்பதை நான் கற்றுக்கொண்டுள்ளேன். சாத்தான் மற்றும் தீய ஆவிகளைக் கையாள்வதில் நான் இதுவரை கண்டுபிடித்த மிக சக்திவாய்ந்த பிரகடனத்தை உங்களுக்கு மேலே கொடுத்துள்ளேன். நான் அதை அனுபவத்தால் கற்றுக்கொண்டேன், அது எவ்வாறு செயல்படுகிறது என்பதை நான் பார்த்துள்ளேன்.

இந்த யோசனையை மேலும் வளர்க்க, 1 கொரிந்தியர் 6:19–20இல் விசுவாசியின் உடலைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்பதை முதலில் பார்ப்போம்:

> **உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?**
>
> **கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.**

'கிரயத்திற்கு கொள்ளப்பட்டவர்கள்' என்பது நம்மை மீட்பின் கருப்பொருளுக்கு திரும்ப அழைத்துச் செல்கிறது என்பதை தயவுசெய்து கவனிக்கவும். பிசாசின் கையிலிருந்து நாம் என்ன விலைக்கு வாங்கப்பட்டோம்? இயேசுவின் இரத்தம். நம்மில் எவ்வளவு திரும்ப வாங்கப்பட்டது? நமது ஆவி மட்டுமா? இல்லை. நம் ஆவி மற்றும் நம் சரீரம் இரண்டும் தேவனுக்குச் சொந்தமானது. ஏன்? ஏனென்றால், நம் முழு ஆள்தத்துவத்திற்கும் இயேசு மொத்த மீட்பின் விலையைச் தம் இரத்தத்தினால் செலுத்தினார் – சரீர ரீதியாகவும், ஆவிக்குரிய ரீதியிலும்.

## அத்துமீறி நுழைய அனுமதியில்லை

நீங்கள் இயேசுவால் வாங்கப்பட்டீர்கள் என்பதை நினைவில் வையுங்கள்; நீங்கள் உங்களுக்குச் சொந்தமானவர்கள் அல்ல. நீங்கள் உங்களுக்குச் சொந்தமானவர்கள் என்று நீங்கள் நம்பினால், நீங்கள் இயேசுவின் இரத்தத்தால் வாங்கப்படவில்லை. நீங்கள் இதை இருவழிகளில் அனுபவிக்க முடியாது. நீங்கள் உங்களுக்கும் தேவனுக்கும் சொந்தமாக இருக்க முடியாது. கர்த்தர் உங்களைத் தனக்காக விரும்புகிறார்; அவர் உங்களுக்காக விலை கொடுத்தார் – அவருடைய விலையேறப்பெற்ற இரத்தம்.

1 கொரிந்தியரின் பகுதி, நாம் நம்முடைய சரீரத்தாலும் ஆவியினாலும் 'தேவனை மகிமைப்படுத்த வேண்டும்' என்று கூறுகிறது, ஏனென்றால் இரண்டும் தேவனுக்கு சொந்தமானவை. இரண்டும் இயேசுவின் இரத்தத்தால் பிசாசின் கையிலிருந்து மீட்கப்பட்டவை . என் ஆவியோ, என் ஆத்துமாவோ, என் உடலோ இனி சாத்தானின் ஆதிக்கத்திலோ கட்டுப்பாட்டிலோ இல்லை.

இதை மிகத் தெளிவாகச் சொல்கிறேன் – எனக்கு இன்னும் உயிர்த்தெழுந்த சரீரம் இல்லை. எனக்கு மரணத்திற்கேதுவான சரீரம் உள்ளது. ஆனால் அந்தச் சாவுக்கேதுவான சரீரம் ஒவ்வொரு நார்ச்சத்தோடும், ஒவ்வொரு உயிரணுவோடும், ஒவ்வொரு திசுக்களோடும் தேவனின் சொத்து, பிசாசினுடையது அல்ல. இந்தப் பிரதேசத்தில் பிசாசு வந்தால், அவன் அத்துமீறி நுழைகிறான். இயேசுவில் என் உரிமைகளை நான் சரியாகப் புரிந்து கொண்டால், நான் ஒரு அடையாளத்தை வைத்து, “அத்துமீறல் இல்லை. வெளியே போ!' என்று சொல்லலாம். அது எப்படி சாத்தியம்? ஏனெனில் சட்டப்படி எனது உடல் பிசாசுக்குச் சொந்தமானது அல்ல. அது இயேசுவினுடையது.

## ஒரு தனிப்பட்ட குடியிருப்பு

என் உடலுக்கு இயேசு ஒரு விசேஷித்த நோக்கத்தைக் கொண்டுள்ளார் – அது தேவத்துவத்தின் மூன்றாவது நபரான பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட வசிப்பிடமாக இருக்க வேண்டும். அதனால்தான் என் உடல் புனிதமானது. இது பரிசுத்த ஆவியின் நியமிக்கப்பட்ட வசிப்பிடமாகும். "தேவன் கைகளால் கட்டப்பட்ட ஆலயங்களில் குடியிருப்பதில்லை" என்று வேதம் பலமுறை தெளிவாகக் கூறுகிறது.

பாப்டிஸ்ட் தேவாலயமோ, எபிஸ்கோபல் தேவாலயமோ, கத்தோலிக்க தேவாலயமோ, பிரஸ்பைடிரியன் தேவாலயமோ, ஜெப ஆலயமோ அல்லது வேறு எந்த தேவாலயமோ தேவன் வசிக்கும் ஆலயம் அல்ல. கைகளால் செய்யப்படாத கோயிலில் அவர் வசிக்கிறார்; இது தெய்வீக நோக்கத்தின்படி தெய்வீக கைவேலையால் செய்யப்பட்டது. அவர் வசிக்கும் அந்த ஆலயம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட விசுவாசியின் சரீரமாகும்.

1 கொரிந்தியர் 6:13ல் பவுல் கூறுகிறார்:

> வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப்பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.

நம் சரீரங்கள் அசுத்தமான, ஒழுக்கக்கேடான நோக்கங்களுக்காக இல்லை—விபச்சாரம் அல்லது பெருந்தீனிக்காக அல்ல.

இது சமீபத்தில் நான் நீதிமொழிகள் புத்தகத்தில் படிக்கும் போது எனக்கு வந்தது. நான் படித்தது என்னை ஸ்தம்பிக்க செய்தது: 'நீதிமான் தனக்குத் திருப்தியாகப் புசிக்கிறான்;' (நீதி. 13:25). ஒரு விசுவாசி அளவுக்கு அதிகமாக உண்ணாமல் இருப்பது நீதியின் அடையாளம். ஏன்? ஏனென்றால் என் உடல் தேவனின் ஆலயம். பெருந்தீனியாலோ,

ATB_2023.indd 134 2/26/2024 4:20:40 PM

குடிப்பழக்கத்தாலோ, ஒழுக்கக்கேடுகளினாலோ, வேறு எந்தத் தவறான உபயோகத்தினாலும் நான் அதைத் தீட்டுப்படுத்தக்கூடாது. சரீரம் தேவனுக்காகவும், தேவன் சரீரத்திற்காகவும் இருக்கின்றனர்.

## குடியிருப்பவரின் உரிமைகள்

நான் என் உடலைத் தேவனுக்குச் சமர்ப்பிக்கும் போது, என் உடலுக்கான உரிமை அவருக்கு இருக்கிறது. நான் ஒரு சொத்தை வாங்கினால், அதன் பராமரிப்புக்கு நான் பொறுப்பாவேன். நான் வாடகை வீட்டில் வசிக்கிறேன் என்றால், அதை பராமரிக்கும் பொறுப்பு வீட்டு உரிமையாளருக்கு உள்ளது. நீங்களும் நானும் ஒரு குத்தகைதாரரைப் போல நம் உடலின் மீது இயேசுவுக்கு தற்காலிக உரிமையை அனுமதித்தால், அவர் பராமரிப்பிற்கான பொறுப்பை ஏற்கமாட்டார். ஆனால், நம்முடைய சரீரத்தை இயேசு சொந்தமாக்கிக் கொண்டால், அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பு அவருக்கு இருக்கிறது. அதுதான் அவர் விரும்பும் உறவு. என் சரீரம் தேவனுக்கு, தேவன் சரீரத்திற்கு. என் சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம்.

அத்தியாயத்தின் இந்தப் பகுதியை நாம் முடிக்கும்போது, பெரும் செயல்திறனைக் கொண்ட ஒரு அறிக்கை மற்றும் பிரகடனத்தை நோக்கி நம்மை வழிநடத்த விரும்புகிறேன். எனது சொந்த அனுபவத்தில், இந்த சாட்சியம் உண்மையில் ஆற்றல் வாய்ந்ததாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சில சமயங்களில் ஒரு விடுதலை ஆராதனையில், 'சகோதரர் பிரின்ஸ், நான் உண்மையில் விடுதலை பெற்றேன் என்று எனக்கு எப்படித் தெரியும்?' என்று மக்கள் கேட்பார்கள்.

நான் அவர்களுக்கு இவ்வாறு பதிலளிக்கிறேன்: 'இயேசுவின் இரத்தத்தைப் பற்றி சாட்சியளிக்க ஆரம்பிக்க வேண்டும்.' பரிசுத்த ஆவியானவர் இல்லாவிட்டால் இந்த அணுகுமுறை செயல்படாது. ஆனால், தேவனின் வல்லமை ஒரு கூட்டத்தில் இருந்தால், மக்கள்

ATB_2023.indd 135 2/26/2024 4:20:40 PM

இயேசுவின் இரத்தத்திற்கு சாட்சியளிக்கத் தொடங்கினால், உங்களுக்குள் கிளர்ச்சியூட்டும் விஷயங்களை நீங்கள் உணருவீர்கள். அடிப்படையில், இரத்தத்தை எதிர்க்கும் எதுவும் பிசாசுக்குரியது. பிசாசை எதிர்க்கும் எதுவும் உங்களுக்குள் இல்லாதவரை சாட்சியளிக்கும்படி மக்களை ஊக்குவிப்பேன். எதிர்வினை நிறுத்தப்பட்டால், நீங்கள் தெளிவாக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம்.

இந்தப் புத்தகத்தின் போதனை முழுவதும் நாம் உறுதிபடுத்தியபடி, ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினாலும், நம்முடைய சாட்சியின் வார்த்தையினாலும் நாம் அவனை ஜெயிக்கிறோம். நான் உங்களுக்கு வழங்கப் போவது அனுபவத்தால் நான் நிரூபித்த அறிக்கை. உங்கள் உடலைப் பற்றி சாட்சியளிக்க நீங்கள் இறங்கும்போது, அப்போதுதான் பட்டாசுகள் உண்மையில் வெடிக்க துவங்குகின்றன. சிலரின் மதம் மிகவும் ஆவிக்குரியதாய், பூமியில் அவர்களுக்கு எதுவும் செய்யாதே போகிறது. இங்கே மற்றும் இப்போது என்ற நிலையில் எந்த முடிவுகளையும் வழங்காது.

தனிப்பட்ட முறையில், ஒவ்வொரு முறையும் நான் இந்த அறிவிக்கையை செய்யும்போதும் நன்றாக உணர்கிறேன். ஒவ்வொரு முறை சொல்லும்போதும் முன்பு இருந்ததை விட நன்றாக உணர்கிறேன்.

> **என் சரீரம் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட, பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் ஆலயம். எனவே, பிசாசுக்கு என்னில் இடமில்லை, என் மீது அதிகாரமில்லை. என் சரீரம் தேவனுக்காக, தேவன் என் சரீரத்திற்காக.**

அந்தப் பிரகடனத்தைச் செய்ய நீங்கள் கொஞ்சம் பயப்படுவதை உணரலாம். ஒருவேளை நீங்கள், ‘சரி, நான் அப்படிச் சொன்னால், நரகம் அனைத்தும் எனக்கு விரோதமாய் அவிழ்ந்துவிடும்!’ என்று

யோசிக்கலாம். அப்படி நடந்தால், கவலைப்பட வேண்டாம். அதுவே நீங்கள் பிசாசை காயப்படுத்தியதற்கான உறுதியான அறிகுறியாகும். உங்கள் சாட்சியைத் தொடர வேண்டும் என்பதே எனது ஆலோசனை. புயல் அகன்றபின், உங்கள் பிரதேசத்தில் நீங்கள் உறுதியாக இருப்பதைக் காண்பீர்கள்.

ATB_2023.indd 138 2/26/2024 4:20:40 PM

# அத்தியாயம் 13
# ஜீவன்

இப்போது நாம் இயேசுவின் இரத்தத்தின் அடுத்த பயன்பாட்டிற்கு வருகிறோம், இது ஜீவன்.

லேவியராகமம் 17:11ன் படி, எல்லா மாம்சத்தின் உயிரும் இரத்தத்தில் இருப்பதை நீங்கள் நினைவில் கொள்வீர்கள். இயேசு தம்முடைய ஆத்துமாவை ஊற்றியபோது, அவர் தம்முடைய ஜீவனை ஊற்றினார். ஆத்துமாவுக்குப் பரிகாரம் செய்வது இரத்தம். இதன் பொருள், தேவனின் ஜீவன் – படைத்தவரின் ஜீவன் – இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு வருகிறது.

அந்த வாக்கியத்தின் திறனைக் கணக்கிட நம் மனித மனங்களுக்கு வழியில்லை. ஏனென்றால் சிருஷ்டிகர், தாம் உருவாக்கிய அனைத்தையும்விட எல்லையற்ற பெரியவர். இருப்பினும், இயேசுவின் இரத்தத்தில் இருக்கும் வல்லமையின் முழுமையை நாம் புரிந்து

கொள்ள முடிந்தால் அது அற்புதமாக இருக்கும். நாம் முன்பு சொன்னது நினைவிருக்கிறதா? சாத்தானின் ராஜ்யம் முழுவதிலும் இருக்கும் வல்லமையை விட இயேசுவின் இரத்தத்தின் ஒரு துளியில் அதிக வல்லமை உள்ளது – ஏனென்றால் இயேசுவின் இரத்தத்தில் தேவனின் நித்திய, உருவாக்கப்படாத, அளவிட முடியாத ஜீவன் உள்ளது. தேவனின் ஜீவன் என்பது எதுவும் படைக்கப்படும் முன்பே இருந்த ஒன்றாகும்.

## நான் அவரை எழுப்புவேன்

நம்மில் செயல்படும் தேவனின் ஜீவனின் வல்லமையைக் குறித்து, யோவான் 6:53–54ஐப் பார்த்து இந்த அத்தியாயத்தை ஆரம்பிக்கலாம்:

> அதற்கு இயேசு அவர்களை நோக்கி: ....“மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்”.

பல்வேறு நேரங்களிலும், பல்வேறு இடங்களிலும், இயேசு மெய்யாகவே அல்லது மெய்யாகவே மெய்யாகவே என கூறுகிறார். இயேசுவின் மிக அழுத்தமான கூற்றுகளில் சில மெய்யாகவே அல்லது மெய்யாகவே மெய்யாகவே என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. இந்த பத்தியில் அவர் சொல்வது அத்தகைய தருணங்களில் ஒன்று. இது உயர் மட்டத்தின் முன்னுரிமையைக் கொண்ட ஒரு அறிக்கை.

> ...நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.

ATB_2023.indd 140 2/26/2024 4:20:40 PM

தயவு செய்து அந்த வாக்கியத்தை கவனியுங்கள்: 'நான் அவனை எழுப்புவேன்.' நம் உடல் உயிர்த்தெழும் வரை நமது மீட்பு முழுமையடையாது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். அது உயிர்த்தெழுதலில் மட்டுமே நிறைவடைகிறது.

பிலிப்பியர் 3:7–11ல் பவுல் கூறினார்:

> **ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன். அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.**
>
> **நான் கிறிஸ்துவை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கும், நியாயப்பிரமாணத்தினால் வருகிற சுயநீதியை உடையவனாயிராமல், கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் வருகிறதும் விசுவாசமூலமாய் தேவனால் உண்டாயிருக்கிறதுமான நீதியை உடையவனாயிருந்து, கிறிஸ்துவுக்குள் இருக்கிறவனென்று காணப்படும்படிக்கும்,**
>
> **இப்படி நான் அவரையும் அவருடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும் அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி, எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடெழுந்திருப்பதற்குத் தகுதியாகும்படிக்கும்,**

சரீரத்தின் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தைப் பார்ப்பது நம் ஒவ்வொருவருக்கும் மிகவும் முக்கியம். துரதிர்ஷ்டவசமாக, பல கிறிஸ்தவர்களுக்கு நம் சரீரம் முக்கியமானது அல்ல என்ற எண்ணம் கொடுக்கப்பட்டுள்ளது. எளிமையாகச் சொன்னால், அது தேவனின் மதிப்பீடு அல்ல. நம் சரீரம் மிகவும் முக்கியமானது என்று தேவன்

கூறுகிறார். நமது சரீரங்கள் பரிசுத்த ஆவியானவரின் ஆலயங்கள். அவை பிரமிக்கத்தக்க அதிசயமாய் உருவாக்கப்பட்டுள்ளன. தேவன் நம் உடலை அழுகிய நிலையில் விட்டுவிடப் போவதில்லை என்று உறுதியளிக்கிறார். இயேசு அனுபவித்ததைப் போன்ற மகிமையுடன் அவர் அவர்களை உயிர்த்தெழ செய்யப் போகிறார். மீட்பின் முழுமையான செயல் மற்றும் நிறைவு உயிர்த்தெழுதலின் மூலம் வருகிறது.

## நம்முடைய தீவிர எதிர்பார்ப்பு

நாம் சொன்ன கருத்து மிக முக்கியமானது. அப்படியிருந்தும், அநேக கிறிஸ்தவர்கள் உயிர்த்தெழுதலின் முக்கியத்துவத்தை பற்றிக் கொள்ளவில்லை என்பதை நான் காண்கிறேன். பவுல், ரோமர் 8:18–19ல் கூறிய கருத்தின் மூலம் வித்தியாசமாக யோசித்தார் என தெரிகிறது:

> ஆதலால் இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்லவென்று எண்ணுகிறேன்.
>
> (உயிர்த்தெழுதலில்). மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது.

தேவனுடைய புத்திரர் எப்போது வெளிப்படுவார்கள்? உயிர்த்தெழுதலில். படைப்பில் உள்ள அனைத்தும் அதற்காக காத்திருக்கின்றன. படைப்பு எதிர்பார்ப்பின் முனையில் உள்ளது. மரங்கள், கடல்கள், ஆறுகள், மலைகள் எல்லாம் காத்திருக்கின்றன. அனைத்து படைப்புகளும் மிகவும் உற்சாகமாக இருப்பது அசாதாரணமானது மற்றும் முரண்பாடானது – இருப்பினும், திருச்சபையின் பெரும்பகுதி இதைக் குறித்து உற்சாகமாக இருக்கவில்லை.

20ஆம் வசனத்தில் படைப்பின் சூழ்நிலையைப் பற்றி மேலும் வாசிக்கிறோம்:

> அதேனென்றால் சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக்கொள்ளும் என்கிற நம்பிக்கையோடே,

மனிதனின் பாவத்தின் காரணமாக அனைத்து படைப்புகளும் பாதிக்கப்பட்டன. மனிதன் பாவம் செய்வதற்கு முன் முட்களும் இல்லை, நெறிஞ்சல்களும் இல்லை. எதுவும் மரிக்கவுமில்லை. எதுவும் கெட்டுப்போகவில்லை. 21வது வசனத்தில் நிலைமை தொடர்கிறது:

> அந்தச் சிருஷ்டியானது சுய இஷ்டத்தினாலே அல்ல, கீழ்ப்படுத்தினவராலேயே மாயைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது.

நாம் மகிமையான எதிர்காலத்திற்குள் வரப்போவது மட்டுமல்ல, படைப்பும் வரப் போகிறது. இருப்பினும், தேவன் தனது முன்னுரிமையை நிர்ணயித்துள்ளார் – நாம் உள்ளே வரும் வரை படைப்பு வராது. படைப்பு ஏக்கத்துடன் கேட்கிறது, ‘நீங்கள் ஏன் இவ்வளவு மெதுவாக இருக்கிறீர்கள்? நீங்கள் ஏன் உற்சாகமடையவில்லை? யுகத்தின் முடிவு நெருங்குவதற்குத் தேவையானதை நீங்கள் ஏன் செய்யவில்லை?’ இது வசனம் 22ன் கருப்பொருள்:

> ஆகையால் நமக்குத் தெரிந்திருக்கிறபடி, இதுவரைக்கும் சர்வ சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவவேதனைப்படுகிறது.

ஆச்சரியப்படும் விதமாக, ஒவ்வொரு முறையும் பவுல், ‘எங்களுக்குத் தெரியும்’ என்று கூறும்போது, பெரும்பாலான தற்கால கிறிஸ்தவர்களுக்குத் தெரியாது என்பதுதான் உண்மை. முழு படைப்பும்

பிரசவ வலியில் உள்ளது என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். எதற்காக காத்திருக்கிறது? தேவ புத்திரர் வெளிப்பட, ஒரு புதிய யுகத்தின் பிறப்பு மற்றும் அழிவிலிருந்து விடுதலைக்காக காத்திருக்கிறது.

பவுல் 23 ஆம் வசனத்தில் மற்றொரு அறிக்கையை செய்கிறார், அது மீண்டும் பல கிறிஸ்தவர்களுக்கு உண்மை அல்ல:

> அதுவுமல்லாமல், ஆவியின் முதற்பலன்களைப் பெற்ற நாமுங்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திரசுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து, (அதுதான் பரிந்து பேசுதல்) நமக்குள்ளே தவிக்கிறோம்.

இறுதி சொற்றொடரைப் பார்த்தீர்களா? ரோமர் 8ல் பவுல் எழுதும் அனைத்தும் சரீரத்தின் மீட்பாகிய, உயிர்த்தெழுதலுடன் தொடர்பு உள்ளது. அவர் விவரிக்கும் எதுவும் மறுமை வரை நடைபெறாது.

## உண்மையான பானம்

இந்த அத்தியாயத்தில் நாம் ஆராய்ந்த முதல் வசனமான யோவான் 6க்கு நாம் திரும்பும்போது, ஒரு சுவாரஸ்யமான கண்டுபிடிப்பை நாம் செய்கிறோம். இந்த அதிகாரத்தில் நான்கு முறை 'கடைசி நாளில் நான் அவனை எழுப்புவேன்' என்று இயேசு விசுவாசியைப் பற்றி கூறுகிறார். இது இரட்சிப்பின் ஒரு பகுதியாகும், ஆனால் இது யோவான் 6:54–56 இல் பேசப்பட்ட ஒன்றை முன்னிறுத்துகிறது:

> என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு;....

உண்டாகும் அல்ல, உண்டு.

**...நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன். என் மாம்சம் மெய்யான போஜனமாயிருக்கிறது, என் இரத்தம் மெய்யான பானமாயிருக்கிறது. என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவன் என்னிலே நிலைத்திருக்கிறான், நானும் அவனிலே நிலைத்திருக்கிறேன்.**

இந்த வினைச்சொற்கள் தொடர் நிகழ்காலத்தில் உள்ளன என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். 'என் மாம்சத்தை எப்பொழுதும் புசித்து, என் இரத்தத்தில் தொடர்ந்து பானம்பண்ணுபவன், தொடர்ந்து என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருப்பேன்.' தேவன் தனது மாம்சத்தை புசிபதற்கும், தனது இரத்தத்தைக் பானம்பண்ணுவதற்கும் அளப்பரிய முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பது இப்பகுதியிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. அவர் இங்கு திருவிருந்தை பற்றிப் பேசுகிறார் என்று நான் உறுதியாய் நம்புகிறேன்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நான் அரேபிய கிறிஸ்தவர்களுடன் ஒரு அரபு நகரத்தில் சிறிது காலம் வாழ்ந்தேன். அவர்கள் கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற விரும்பியபோது, "இயேசுவின் இரத்தத்தைக் குடிப்போம்" என்பார்கள். இது நமக்கு என்ன சொல்கிறது? அந்த அரபு கிறிஸ்தவர்களுக்கு சரியான சித்திரம் இருந்தது. இயேசுவின் இரத்தத்தைக் குடிப்பது திருவிருந்து. இதைப் பற்றிய நமது முழு அணுகுமுறையும் 'இரத்தம் குடிக்கும் எண்ணம் எனக்குப் பிடிக்கவில்லை' என்ற அருவெறுப்பாக இருக்கலாம். இந்த அறிக்கையை நான் புரிந்து கொள்ள பல ஆண்டுகள் ஆனது. அப்படியிருந்தும், நித்திய ஜீவனைப் பெற, நாம் அவருடைய இரத்தத்தைக் பானம்பண்ணி, அவருடைய மாம்சத்தை புசிக்க வேண்டும்.

உயிர் இரத்தத்தில் இருக்கிறது என்று சொல்லும் லேவியராகமம் 17:11ல் உள்ள முக்கிய கூற்றை மீண்டும் ஒருமுறை நினைவுகூருகிறோம். உங்களுக்கும் எனக்கும் உயிர் வேண்டுமென்றால்

இரத்தத்தை உரிமையாக்கிக்கொள்ள வேண்டும். இரத்தத்தைப் உரிமையாக்கிக்கொள்ள ஒரே வழி திருவிருந்து என்று நான் கூறவில்லை, ஏனென்றால் நமது சாட்சியத்தின் மூலம் அதை எவ்வாறு உரிமையாக்கிக்கொள்ள முடியும் என்பதை நான் கற்பித்தேன். ஆனால் தனிப்பட்ட முறையில், அவருடைய மாம்சத்தைப் புசிப்பதும், அவருடைய இரத்தத்தைக் பானம்பண்ணுவதும் என்ற கொள்கை எனக்கு மிகவும் முக்கியமானதாகிவிட்டது.

1 கொரிந்தியர் 11:25ல் பவுல், திருவிருந்தைப் பற்றி, 'நீங்கள் இதைப் பானம்பண்ணும் போதெல்லாம், என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்' என்று கூறுகிறார். ஆனால் பல தேவாலயங்கள் 'நீங்கள் எப்போதாவது செய்யும்போது' என்று சொல்ல முனைகின்றன. அதிர்ஷ்டவசமாக, பல வழிபாட்டு பிரிவுகளில் இது உண்மை இல்லை. நான் அதை மிகவும் பாராட்டுகிறேன். நான் கலந்து கொண்ட மிக அழகான ஆராதனைகளில் சில திருவிருந்து ஆராதனைகளாய் இருந்துள்ளன. தொடர்ச்சியான திருவிருந்தின் முக்கியத்துவத்தை அவர்கள் கடைப்பிடித்துள்ளனர்.

## திருவிருந்தை குறித்த எங்கள் அணுகுமுறை

ரூத்தும் நானும் பல ஆண்டுகளாக, எல்லோரும் எங்களைப் போல் ஆக வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்பதை தெளிவுபடுத்தி வருகிறோம். எங்களுடைய சில பழக்கவழக்கங்கள் மற்றும் நடைமுறைகளை நான் பகிர்ந்து கொள்ளும்போது, நீங்களும் அதையே செய்யவேண்டும் என்று எந்த எதிர்பார்ப்போடும் அதை செய்யவில்லை. நான் பகிர்வதை அப்படி எடுத்துக்கொள்ளாதீர்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு ரூத்தும் நானும் திருவிருந்து போதுமான அளவில் எடுக்கவில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

அதனால், எங்கள் வீட்டுக்கு ஆசாரியன் என்ற முறையில், தினமும் திருவிருந்து எடுக்க வேண்டும் என்று சொல்ல நான் தயங்கவில்லை. எனவே இப்போது நாங்கள் அதிகாலை நேரத்தில் தேவனோடு செலவிடும் நேரத்தில் அதை எடுத்துக்கொள்கிறோம். நாங்கள் எப்போதும் அப்பம் மற்றும் திராட்சரசம் எடுத்து அந்த நேரத்தை முடிக்கிறோம். ஒவ்வொரு கிறிஸ்தவனும் அதைச் செய்ய வேண்டும் என்று நான் சொல்லவில்லை, நாங்கள் அதைச் செய்கிறோம் என்று நான் நன்றியுடன் சொல்கிறேன். அந்தப் பழக்கத்தை நாம் தவிர்த்துவிட்டால், முக்கியமான ஒன்று நம் வாழ்வில் இருந்து போய்விடும் என்று நானும் ரூத்தும் உணர்கிறோம்.

நான் அதை மிகவும் எளிமையான முறையில் செய்ய விரும்புகிறேன். மேலும் குறிப்பிட்ட முறையில் அதைச் செய்ய விரும்புகிறேன். "ஆண்டவரே, உம்மை நினைவுகூரும்படி நாங்கள் இதைச் செய்கிறோம்; உம்முடைய மரணத்தை நாங்கள் தெரிவிக்கிறோம்.' நாங்கள் அரை வருடம் வாழும் எருசலேம் போன்ற ஒரு இடத்தில், பெரும்பாலான மக்கள் கர்த்தரை நம்பாதபோது, அவருடைய மரணத்தை அறிவிப்பது மிகவும் அற்புதமானது என்று நான் சொல்ல வேண்டும். அப்போது நான், 'இந்த அப்பத்தை உமது மாம்சமாகவும், திராட்சரசத்தை உமது இரத்தமாகவும் பெறுகிறோம்' என்று கூறுகிறேன். மீண்டும், இந்த நடைமுறையை நான் குறிப்பாக பரிந்துரைக்கவில்லை. ஆனால், கிறிஸ்தவர்களாகிய நாம் இரத்தத்தில் உள்ள உயிரை நமக்குத் தேவையான அளவுக்குப் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று நான் பரிந்துரைக்கிறேன்.

## காலத்திலிருந்து உயர்த்தப்படுதல்

நானும் ரூத்தும் ஒன்றிணைந்து திருவிருந்து எடுக்கும்போது, பவுல் சொல்வதைக் கவனத்தில் கொள்கிறோம்: "நீர் வருமளவும் உமது மரணத்தை தெரிவிக்கிறோம்." இந்த இரண்டு அம்சங்களையும் நாம் நினைவில் கொள்கிறோம்—சிலுவை மற்றும் வருகை. அந்த

இன்றியமையாத உண்மைகளை நினைவூட்டாமல் ஒரு நாளையும் நாங்கள் தொடங்குவதில்லை.

திருவிருந்தை குறித்து ஒருவர் இப்படிச் சொல்லியிருக்கிறார்: திருவிருந்து உங்களை காலத்திலிருந்து உயர்த்துகிறது. திருவிருந்தில், உங்களுக்கு சிலுவையைத் தவிர கடந்த காலம் இல்லை, வருவதைத் தவிர எதிர்காலம் இல்லை. அவர் வரும்வரை சிலுவையின் நினைவாக இதைச் செய்கிறீர்கள்.

திருவிருந்தை எடுத்துக்கொள்வதற்கான எங்கள் வழிமுறையைப் பகிர்வது, இந்தச் சடங்கை நீங்கள் அனுசரிக்கும் முறையை மாற்றும் நோக்கத்திலல்ல. ஆனால், இரத்தத்தில் கலந்திருக்கும் ஜீவனைப் பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை நீங்கள் பயன்படுத்துகிறீர்களா என்பதைச் சிந்திக்கத் தூண்டுவதாகும்.

இந்த உண்மையை தனிப்பட்ட முறையில் பயன்படுத்த, பின்வரும் அறிவிப்பை ஒன்றாகச் செய்வோம்:

> **கர்த்தராகிய இயேசுவே, நான் உமது இரத்தத்தைப் பெறும்போது, அதில் உமது ஜீவனை, தேவனுடைய ஜீவனைப் பெறுகிறேன்—தெய்வீக, நித்திய, முடிவில்லாததுமான ஜீவன்.**

# அத்தியாயம் 14
# பரிந்து பேசுதல்

**நாம் ஆராயப்போகும் இரத்தத்தின் கடைசி இரண்டு பயன்பாடுகள் சற்றே தனித்துவமானவை மற்றும் ஆச்சரியமானவை. அவை இரண்டும் நம்மை காலத்தின் தளத்திலிருந்து வெளியேற்றி, பரலோக மற்றும் நித்திய மண்டலங்களுக்கு அழைத்துச்செல்லும்--இதில்தான் நாம் எப்படியும் முடிவடைய விரும்புகிறோம்.**

**பயன்படுத்துவதற்கான முதல் ஏற்பாடு உங்களை ஆச்சரியப்படுத்தலாம். இது பரிந்து பேசுதல். நம்முடைய கவனத்திற்கான முக்கியப் பகுதிகள் எபிரேயர் 12ல் இருக்கும்.**

## நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்

**பரிந்து பேசுவதலைப் பற்றிய எபிரேயர் 12-ன் பிரிவுகளைப் பார்ப்பதற்கு முன், நாம் வசனம் 22-ல் தொடங்குவது முக்கியம்.**

ATB_2023.indd 149 2/26/2024 4:20:40 PM

‘நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்’ என்ற இந்த வசனம் பூரண காலத்தில் பேசப்படுகிறது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ‘நீங்கள் வரப் போகிறீர்கள்’ என்று கூறவில்லை, ஆனால் ‘நீங்கள் வந்திருக்கிறீர்கள்’ என்று கூறுகிறது. ஆவியில், நியமிக்கப்பட்ட இடத்திற்கு நீங்கள் ஏற்கனவே வந்துவிட்டீர்கள். உங்கள் மாம்சத்தில் நீங்கள் பூமியில் அமர்ந்திருக்கிறீர்கள், ஆனால் உங்கள் ஆவியில் நீங்கள் வேறொரு மண்டலத்தில் இருக்கிறீர்கள்.

> **நீங்களோ சீயோன் மலையினிடத்திற்கும், ஜீவனுள்ள தேவனுடைய நகரமாகிய பரம எருசலேமினிடத்திற்கும், ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்களினிடத்திற்கும், பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும், யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனிடத்திற்கும், பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும், புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசுவினிடத்திற்கும், ஆபேலினுடைய இரத்தம் பேசினதைப்பார்க்கிலும் நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்துசேர்ந்தீர்கள்.**
>
> **(எபிரெயர் 12:22–24)**

அந்தப் பகுதியில், நாம் ஏற்கனவே வந்த எட்டு இடங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன:

1. சீயோன் மலைக்கு;
2. பரலோக எருசலேமுக்கு (பூமிக்குரிய எருசலேம் அல்ல), ஜீவனுள்ள தேவனுடைய நகரம்;
3. எண்ணற்ற தேவதூதர்களின் கூட்டத்திற்கு;
4. பரலோகத்தில் பேரெழுதப்பட்ட முதற்பேறானவர்களின் சங்கத்திற்கு;

5. அனைவருக்கும் நீதிபதியாகிய தேவனிடத்திற்கு;
6. பூரணமாக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகளினிடத்திற்கும்;
7. புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தரான இயேசுவிடம்;
8. ஆபேலின் இரத்தத்தைவிட சிறந்தவைகளைப் பேசும் தெளிக்கப்பட்ட இரத்தத்திற்கு.

## இது சிறந்த விஷயங்களைப் பேசுகிறது

பட்டியலில் கடைசி இலக்கு தெளிக்கப்பட்ட இரத்தம் அல்லது ஆபேலின் இரத்தத்தை விட நமக்காக சிறப்பாக பேசும் இயேசுவின் தெளிக்கப்பட்ட இரத்தம். இயேசுவின் இரத்தத்தைப் பற்றி நமக்குள் ஒரு கேள்வியைக் கேட்டுக்கொள்ளலாம். எங்கே தெளிக்கப்பட்டது? தெளிக்கப்படும் இரத்தம், பிரதான ஆசாரியினின் படத்தை நிறைவேற்றுதலாக நான் பார்க்கிறேன். ஆசரிப்புக் கூடாரத்தின் நாட்களில், பிரதான ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் வழியில் ஏழு முறை இரத்தத்தைத் தெளித்தார், பின்னர் அவர் அதை கிருபாசனத்தின் மீது தெளித்தார். பரலோகத்தில் கிருபாசனம் இருப்பதாக நான் நம்புகிறேன்; இயேசுவின் இரத்தம் பரலோகத்தின் கிருபாசனத்தில் தெளிக்கப்பட்டுள்ளது என்றும் நான் நம்புகிறேன். எபிரேய எழுத்தாளர் சொல்வதை அவருடைய இரத்தம் துல்லியமாக செய்கிறது என்று நான் மேலும் நம்புகிறேன்: அது நம் சார்பாக பேசுகிறது.

இயேசுவின் இரத்தம் ஆபேலின் இரத்தத்திலிருந்து மூன்று வழிகளில் வேறுபடுகிறது என்பது எனக்கு மிகவும் சுவாரஸ்யமானதாக தோன்றுகிறது:

முதலாவது, ஆபேலின் இரத்தம் அவருடைய விருப்பத்திற்கு எதிராக சிந்தப்பட்டது; இயேசு தம் இரத்தத்தை மனமுவந்து சிந்தினார்.

இரண்டாவதாக, **ஆபேலின் இரத்தம் பூமியில் தெளிக்கப்பட்டது; இயேசுவின் இரத்தம் பரலோகத்தில் தெளிக்கப்பட்டது.**

மூன்றாவதாக, **ஆபேலின் இரத்தம் பழிவாங்கலுக்காக கூக்குரலிட்டது; இயேசுவின் இரத்தம் இரக்கத்தையும் மன்னிப்பையும் கோருகிறது.**

ஆதியாகமம் 4:10ல் தேவன் காயீனிடம், "என்ன செய்தாய்? உன் சகோதரனுடைய இரத்தத்தின் சத்தம் பூமியிலிருந்து என்னை நோக்கிக் கூப்பிடுகிறது.' ஆபேலின் இரத்தம் பழிவாங்குவதற்காக கூப்பிடுவதைப் போலவே, இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மன்னிப்பையும் கருணையையும் கோருகிறது. இதில் நமக்கு என்ன அர்த்தம்? இயேசுவின் இரத்தத்தின் மூலமாய் தேவனுடைய சந்நிதியில் இரவும் பகலும் நமக்காக இடைவிடாது பரிந்துபேசுதல் நடக்கிறது என்ற உண்மையை நாம் புரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.

## நாம் ஜெபிக்க முடியாதபோதும்

1950களின் பிற்பகுதியில் நான் கென்யாவில் இருந்தபோது, நான் ஒரு கார் விபத்தில் சிக்கி என் உயிரையே பறிகொடுக்கும் தருணத்திற்கு வந்தேன். என்னுடைய எந்தத் தவறாலும் விபத்து நடக்கவில்லை. ஒரு பெட்ரோல் லாரி சாலையில் எங்களுக்கு முன்னால் சென்றது, அதிலிருந்து கசிந்த எண்ணெய், எங்கள் கார் மணிக்கு 55 மைல் வேகத்தில் 9 அடி கட்டத்திற்கு மேல் சறுக்கியது. கார் காற்றில் முழுவதுமாக ஒரு பல்ட்டி அடித்து, என்ஜின் இயங்கும் நிலையில் மீண்டும் அதன் சக்கரங்களின் மேலே விழுந்தது என்று நான் உறுதியாக நம்புகிறேன். எங்களால் காரை அவ்விடத்திலிருந்து ஓட்டிச் செல்ல முடிந்தது, இதுவே பெரிய ஆச்சரியமாக இருந்தது.

அந்த நேரத்தில் காரில் மூன்று பேர் இருந்தனர்: எனது முதல் மனைவி லிடியா, ஓட்டுனர் இருக்கையின் பக்கத்தில் இருந்தவர்; நான், காரை

ஓட்டிக்கொண்டிருந்தேன்; மற்றும் எங்கள் சிறிய ஆப்பிரிக்க குழந்தை, ஜெசிக்கா, ஒரு வயதுக்கு குறைவான காலக்கட்டம். இந்த ஸ்டேஷன் வேகனில் தட்டையாக அமைக்கப்பட்ட பின் இருக்கையின் கீழ் பாதியில் ஒரு குழந்தையை வைக்கும் கூடையில் அவள் இருந்தாள்.

கரையின் அடிப்பகுதியில் காரில் நான் என்னையே கண்டபோது, ஏதோ பயங்கரமான சம்பவம் நடந்ததை நான் அறிந்தேன். உங்கள் முதல் உள்ளுணர்வு, எப்போதும், கதவைத் திறப்பது. எனவே, நான் கதவைத் திறந்தபோது, ஏன் மைதானம் வழக்கத்தை விட அதிகமாக உள்ளது என்று யோசித்தேன். கரையை கவிழ்த்துவிட்டு கார் கீழே வந்தபோது, எனது எடை ஓட்டுநர் இருக்கையை காரின் தரையில் கீழே தள்ளியது என்பதை நான் பின்னர் கண்டுபிடித்தேன். அந்த கடினமான தரையிறக்கத்தில் இருந்து, என் முதுகுத்தண்டில் மூன்று முதுகெலும்புகளை உடைத்தேன், அதை நான் சிறிது நேரம் கண்டுபிடிக்கவில்லை.

மிகவும் ஆச்சரியமான அற்புதம் என்னவென்றால், எங்கள் சிறிய குழந்தை கூடையிலிருந்து முன்னோக்கி தூக்கி எறியப்பட்டு கியர் லீவரின் மேல் விழுந்தாள் – ஆனால் அவளுக்கு காயம் எதுவுமில்லை. (அது மிக சிறிய தலையுறையுடன் கூடிய ஒரு சிறிய ஸ்டேஷன் வேகன்.) லிடியா என் பக்கத்து இருக்கையில் இருந்து பின்னோக்கி தூக்கி எறியப்பட்டு, குழந்தை கூடைக்குள் முழுவதுமாக சிக்கிக்கொண்டாள். அவள் தலை அவள் முழங்கால்களுக்கு எதிராக இருந்தது. சில கீறல்கள் தவிர, லிடியா காயமடையவில்லை. நான் மட்டும் பலத்த காயம் அடைந்தேன்.

நான் மருத்துவமனையில் சிறிது காலம் இருந்த பிறகு, என் ஆவி இடம்பெயர்ந்தது போல் உணர ஆரம்பித்தேன். இதை உங்களால் புரிந்து கொள்ள முடியுமா இல்லையா என்று தெரியவில்லை, ஆனால் ஜெபம் செய்வதற்கு எனக்குள் ஆவி இல்லை என்பது போல் இருந்தது. எனக்கு ஜெபம் தேவை என்று தெரிந்தும், எனக்காக நானே ஜெபிக்க முடியாமல் மருத்துவமனையில் கிடந்தேன்.

அந்த சூழ்நிலையில், ஒரு ஊக்கமளிக்கும் யதார்த்தத்தை நான் உணர்ந்தேன். என்னால் ஜெபிக்க முடியாவிட்டாலும், இயேசுவின் இரத்தம் என் சார்பாகப் பேசிக்கொண்டிருந்தது. இரவும் பகலும் இடைவிடாமல், நாம் பலவீனமாக இருந்தாலும் சரி, பலமாக இருந்தாலும் சரி, அது பேசுகிறது. நாம் சரியோ தவறோ, இயேசுவின் இரத்தம் எப்போதும் நம் சார்பாகப் பேசுகிறது. எப்போதும், அது இரக்கத்தையும் மன்னிப்பையும் கோருகிறது.

பரிந்துபேசுதலைப் பற்றிய இந்த அத்தியாயத்தை முடிக்க, நமக்காகப் பேசும் இயேசுவின் இரத்தத்தைப் பற்றிய சாட்சியை அறிவிப்போம். நாம் இதை மிகவும் தனிப்பட்ட அறிக்கையாய் வெளியிடுவோம்:

**நான் ஜெபிக்க முடியாதபோதும், உமது இரத்தம் பரலோகத்தில் எனக்காக மன்றாடுகிறதற்காக உமக்கு நன்றி ஆண்டவரே.**

# அத்தியாயம் 15
# திடநம்பிக்கையுடன் பிரவேசித்தல்

**இயேசுவின் இரத்தத்தின் ஏழாவது மற்றும் இறுதி பயன்பாட்டிற்கு வருகிறோம். இந்தப் பயன்பாடு எபிரேயர் புத்தகத்திலும் காணப்படுகிறது – இது மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவதைப் பற்றியது.**

## புதிதும் ஜீவனுமான மார்க்கம்:

**எபிரேயர் 10:19-22ல் நாம் வாசிக்கிறோம்:**

**ஆகையால், சகோதரரே,நாம் பரிசுத்த ஸ்தலத்தில்...**

**தைரியம் என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையின் அர்த்தம் பேச்சு சுதந்திரம். பெரும்பாலான நவீன மொழிபெயர்ப்புகள்**

திடநம்பிக்கை என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன என்று நான் நம்புகிறேன். நமக்கு முழு நம்பிக்கை உள்ளது. நாம் வெட்கப்படத் தேவையில்லை; நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை, ஆனால் நாம் மிகவும் பயபக்தியுடன் இருக்க வேண்டும். இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்கு முழு நம்பிக்கை உள்ளது.

**...ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்,...**

இரத்தம் எங்கே தெளிக்கப்பட்டது? எல்லாவற்றிலும் புனிதமான இடமாகிய மகா பரிசுத்த ஸ்தலத்தில் – கிருபாசனத்தின் மீது.

**...அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்...**

பரிசுத்தமான இடத்திற்குள் நுழைய, இரத்தம் தெளிக்கப்பட்ட வழி நமக்கு உண்டென்று இந்த வசனம் சொல்கிறது.

**...தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும்,; துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், (எல்லாவற்றிலும் பரிசுத்தமான ஸ்தலத்திற்கு, கிருபாசனத்தின் அருகில் வாருங்கள்) சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்....**

உண்மையாக ஆராதிப்போரின் 4 தகுதிகளை 22ம் வசனம் குறிப்பிடுகிறது:

1. உண்மையான இதயம்;
2. விசுவாசத்தின் முழு நிச்சயம்;
3. துர் மனசாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயங்கள்;
4. சுத்த ஜாலத்தால் கழுவப்பட்ட சரீரங்கள்.

சுத்த ஜலம் அல்லது தூய நீர், தேவனின் வார்த்தை என்று நான் நம்புகிறேன். (உண்மையில், இது தண்ணீர் ஞானஸ்நானத்திற்கு ஒரு பயன்பாட்டைக் கொண்டுள்ளது, ஆனால் அது இந்த போதனையின் எல்லைக்கு அப்பாற்பட்டது.) இயேசுவின் இரத்தத்தின் மூலம் பிரபஞ்சத்தின் மிக பரிசுத்த ஸ்தலமான தேவனுடைய உடனடி பிரசன்னத்திற்குள் நுழைவதற்கு நமக்குத் தைரியம் உள்ளது. அவருடைய இரத்தம் நம் சார்பாக பேசுகிறது.

## ஒரு பிரதான ஆசாரியன்

தேவனுடைய வீட்டில் நம்மைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரதான ஆசாரியர் இருக்கிறார், அவர்தான் இயேசு. அவருடைய ஆசாரியத்துவம் எபிரேயர் 6:19–20ல் பேசப்படுகிறது. கிறிஸ்துவில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையைப் பற்றி எழுத்தாளர் கூறுகிறார்:

> அந்த நம்பிக்கை நமக்கு நிலையும் உறுதியும் திரைக்குள்ளாகப் போகிறதுமான ஆத்தும நங்கூரமாயிருக்கிறது. நமக்கு முன்னோடினவராகிய இயேசு மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நித்திய பிரதான ஆசாரியராய் நமக்காக அந்தத் திரைக்குள் பிரவேசித்திருக்கிறார்....

மகா பரிசுத்த ஸ்தலத்தில், நமக்காகப் பேசும் இயேசுவின் இரத்தம் தெளிக்கப்பட்டுள்ளது. உட்பிரவேசிப்பதற்கு நமக்கு இரத்தம் தெளிக்கப்பட்ட வழி உண்டு. மேலும் தேவனுடைய உடனடி பிரசன்னத்தில் ராஜா மற்றும் ஆசாரியரான மெல்கிசேதேக்கின் முறைமையின்படி நமக்கு ஒரு பிரதான ஆசாரியர் இருக்கிறார். அந்த நன்மைகள் அனைத்தும் அவருடைய விலைமதிப்பற்ற இரத்தத்தை மையமாகக் கொண்டுள்ளன.

## ஒரு திசை மட்டுமே

மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவது உங்களை உற்சாகப்படுத்துகிறதா என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் அது என்னை மிகவும் உற்சாகப்படுத்துகிறது. பெரும்பாலான கிறிஸ்தவர்களுக்கு வாசஸ்தலத்தின் முக்கியத்துவமா, பிற்கால ஆலயத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியோ ஒரு சிறிய பார்வை கூட இல்லை என்பது எனது அனுபவம். இவை பரலோக வாசஸ்தலத்தின் ஒரு மாதிரி என்று சிலருக்கு மட்டுமே தெரியும். எபிரேயர் 9:24 பூமிக்குரிய மற்றும் பரிசுத்த ஸ்தலங்களுக்கு இடையே உள்ள தொடர்பை மேற்கோள் காட்டி நமது முன்னோக்கைச் சேர்க்கிறது:

> **அந்தப்படி, மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்திலேதானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்...**

இந்த அத்தியாயத்தின் மூலம் ஒரு இலக்கை என்னால் நிறைவேற்ற முடிந்தால், எனது மிக முக்கியமான நோக்கத்தை அடைந்திருப்பேன். அந்த இலக்கு என்ன? ஒரு திசையில் மட்டுமே செல்ல வேண்டும் என்ற

ATB_2023.indd 158 2/26/2024 4:20:40 PM

ஏக்கத்தை உங்களில் தூண்டுகிறது – மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள். ஏன்? ஏனென்றால் அங்குதான் நாம் தேவனோடு சந்திக்கிறோம்.

## புதிதும் ஜீவனுமான மார்க்கம்

எபிரேயர் 10 இல் உள்ள நமது தொடக்கக் கருத்திற்கு மீண்டும் திரும்புவோம், அங்குப் புதிய உடன்படிக்கை மற்றும் இயேசுவின் பிரதான ஆசாரியத்துவத்தைப் பற்றிய ஒரு அறிக்கை உள்ளது. வசனம் 19 கூறுகிறது:

> **ஆகையால், சகோதரரே, நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர்...**

மோசேயின் உடன்படிக்கையின் கீழ், பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் வழி இன்னும் வெளிப்படுத்தப்படவில்லை. ஆனால் புதிய உடன்படிக்கையின் கீழ், இயேசுவின் இரத்தத்தால் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு நுழைவதற்கு நமக்குத் தைரியம் இருக்கிறது.

> **...அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறபடியினாலும்,...**

மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு வழியைத் திறக்கும் கிழிந்த திரை சிலுவையில் கிழிந்த இயேசுவின் சரீரம்.

> **...தேவனுடைய வீட்டின்மேல் அதிகாரியான மகா ஆசாரியர் நமக்கு ஒருவர் இருக்கிறபடியினாலும், துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், சுத்த ஜலத்தால் கழுவப்பட்ட சரீரமுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். (எபிரெயர் 10:21–22)**

இயேசு கிறிஸ்துவில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தின் மூலம் நாம் நெருங்கி வருகிறோம். சிலுவையில் அவருடைய பாவநிவாரண பலியின் மூலம். இப்போது தேவனுடைய பிரசன்னத்தில் நமக்காக அவருடைய பிரதான ஆசாரிய ஊழியத்தின் மூலம். நமக்கான இந்த ஏற்பாடுகள் மூலம், பழைய உடன்படிக்கையின் கீழ் யூத மக்களுக்கு கிடைக்காததை நாம் பெற்றுள்ளோம். மகா பரிசுத்த ஸ்தலமாக அறியப்படும் எல்லாவற்றிலும் பரிசுத்தமான இடத்திற்குள் பிரவேசிப்பதற்கான தைரியம் நமக்கு இருக்கிறது. மகா பரிசுத்த ஸ்தலத்திற்குச் செல்லும் வழி இப்போது உங்களுக்கும் எனக்கும் திறக்கப்பட்டுள்ளது. இதைத்தான் நான் இந்த அத்தியாயத்தில் விவாதிக்க விரும்புகிறேன்—இயேசுவின் இரத்தத்தின் மூலம் நமக்குக் கிடைக்கும் பிரவேசம்.

அந்த முழு இடமும் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்த பல்வேறு வழிகள் உள்ளன. அது தேவனுடைய தன்மைக்கு பொருந்தும்; அது பரலோகத்தின் தன்மைக்கும் மற்றும் பல தலைப்புகளுக்கும் பொருந்தும். இந்த மூன்று பகுதிகளையும் மனிதனின் தன்மையாகவும் நாம் பார்க்கலாம்—ஆவி, ஆத்தும மற்றும் சரீரம். வெளிப்பிரகாரம் சரீரத்தையும், பரிசுத்த ஸ்தலம் ஆத்துமாவையும், மகா பரிசுத்த ஸ்தலம், ஆவியையும் குறிக்கின்றது.

ஆசரிப்புக் கூடாரத்திற்குள் நுழையும்போது இயற்கை மனிதனுடன் எப்போதும் ஒரு மோதல் இருக்கும், ஏனென்றால் நீங்கள் மேலும் உள்ளே செல்லும்போது, ஒரு அர்த்தத்தில், அதிக குறுகிய இடமாக மாறுகிறது. உங்கள் விருப்பத்தேர்வுகள் குறைந்து, முடிவடையும் போது நீங்கள் 10 முழத்திற்கு 10 முழமாகிய ஒரு சிறிய பெட்டியில் முடிவடைகிறீர்கள். அங்கு ஒரே ஒரு பொருள் மட்டுமே உள்ளது.

அது தேவனைப் போலவே இருக்கிறது. நீங்கள் வேறு எதையும் விரும்பாமல் அவரையே விரும்ப வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். தேவன் மற்றும் ஆசீர்வாதம், அல்லது தேவன் மற்றும் சுகம், அல்லது தேவன் மற்றும் வெளிப்பாடு அல்ல, வெறுமனே தேவன் மட்டுமே.

அதைத்தான் ஆசரிப்புக் கூடாரம் கூறுகிறது—தேவனைச் சந்திக்க ஆசைப்படுபவர்கள். எதையாவது பெற வேண்டும் என்பதற்காக அல்ல, தேவன் தேவனாக இருக்கிறார் என்பதால். தேவனை சந்திப்பதை விட உயர்ந்த பாக்கியம் எதுவும் இல்லை.

அதுவே மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும் வழி மற்றும் அதுவே நமது ஒரே உந்துதலாக இருக்க வேண்டும். அந்த உந்துதல் இல்லாமல் நீங்களும் நானும் அங்கு சேரமாட்டோம். உந்துதல் இருக்கும் போது, நீங்களும் நானும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதுதான் நாம் இங்கு படித்துக்கொண்டிருக்கிறோம், குறிப்பாக மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் நுழைவதற்கு நமக்கு உதவும் இயேசுவின் இரத்தத்தைப் பற்றி கற்கிறோம்.

பரிசுத்த ஆவியின் உதவியால், மகா பரிசுத்த ஸ்தலமாகிய உங்கள் இலக்கைப் பற்றிய புரிதலையும், உங்கள் இதயத்தில் அங்கு செல்வதற்கான ஏக்கத்தை நீங்கள் வளர்த்துக்கொள்ள முடியும் என்று நான் நம்புகிறேன்.

## உள்ளே நுழைவது

நாம் மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு வரும்போது, ஒரே ஒரு பொருள் மட்டுமே அங்கு உள்ளது. இது கிறிஸ்துவுக்கு மாதிரியாய் இருக்கும் உடன்படிக்கைப் பெட்டி. அது தூய தங்கத்தால் மூடப்பட்ட செவ்வகப் பெட்டி. தூய தங்கத்தால் மூடப்பட்ட பெட்டி உள்ளது, அதின் மீது கிருபாசனம் உள்ளது, இது தேவனின் மன்னிப்பு மற்றும் ஒப்புரவாகுதலுக்கு மாதிரியாக உள்ளது.

அத்தியாயம் 3 இல் நாம் கற்றுக்கொண்டபடி, பாவநிவாரண நாளில், பாவத்தை நிவர்த்தி செய்யும் பலியைக் குறிக்கும் இரத்தம் கிருபாசனம் மீது தெளிக்கப்பட்டது. கிருபாசனத்தின் மீது இரண்டு கேருபீன்கள் இருந்தன—இருமுனையிலும் ஒரு கேருபீனும் மறுமுனையில் இன்னொரு

கேருபீனும், கிருபாசனத்தின் மையப்பகுதியை நோக்கி முகங்களைத் திருப்பிக்கொண்டு, அவற்றின் இறக்கைகள் நீட்டப்பட்டு, கிருபாசனத்தின் மையத்திற்கு மேல் அவைகளின் நுனிகள் ஒன்றை ஒன்று தொடும். கேருபீன்கள், ஆராதனை மற்றும் ஐக்கியத்தைக் குறிக்கின்றன. நேருக்கு நேர் இருப்பது ஐக்கியத்தை குறிக்கிறது. நீட்டப்பட்ட சிறகுகளும், குனிந்த உடல்களும் ஆராதனையைக் குறிக்கிறது.

அதுபோலவே, நாம் தேவனோடு ஐக்கியம் கொள்ளும் இடத்திற்கு வரும்போது, ஒருவரோடு ஒருவர் ஐக்கியம் கொள்ளும் இடத்திற்கு வந்து, ஒருவரையொருவர் முகத்தைப் பார்க்கிறோம். கிருபாசனம் என்பது நாம் தேவனுடனும் ஒருவருடன் ஒருவரும் நேருக்கு நேர் ஐக்கியத்திற்குள் வரும் இடமாகும்.

அந்த இடத்தில் கிருபாசனத்தின் மீதும், அங்கு தெளிக்கப்பட்ட இரத்தத்தின் மீதும் நேருக்கு நேர் ஐக்கியம் உள்ளது. அதுதான் உண்மையான ஐக்கியத்தின் இடம்; அது ஆவியில் உள்ளது, அது நேருக்கு நேரானது, அது கிருபாசனத்தின் மீதும், இயேசுவின் இரத்தத்தின் மீதும் உள்ளது.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இதைப் பற்றி தியானிக்க உங்களுக்கும் எனக்கும் தேவன் உதவுவாராக. ஏனென்றால் நான் இந்த முழு சத்தியத்தின் விளிம்பை மட்டும் தொட்டுள்ளேன். என்னுடைய ஆசை எல்லாவற்றையும் உங்களுக்குச் சொல்வதல்ல மாறாக நீங்களே தேட ஆரம்பிக்க வேண்டும் என்பதே.

## இரத்தத்தைக் கனம் பண்ணுதல்

இந்தப் புத்தகத்தில் நாம் தொடர்ந்து கூறியது போல், இயேசு கிறிஸ்துவின் சிந்தப்பட்ட இரத்தத்தைக் கனம் பண்ணுவது மிகவும் முக்கியமானது. இயேசுவின் இரத்தம் எடுக்கப்பட்டால், நமக்கு மீட்பு இல்லை, சுத்திகரிப்பு இல்லை, நீதிமானாகுதல் இல்லை, பரிசுத்தம்

இல்லை, ஜீவன் இல்லை, பரிந்துபேசுதல் இல்லை, பிரவேசமும் இல்லை. எல்லாம் இயேசுவின் இரத்தத்தைச் சுற்றியே உள்ளது. நாம் ஒருபோதும் இரத்தத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது.

முந்தைய அத்தியாயத்தில் சொன்னதை மீண்டும் சொல்கிறேன். மாம்சத்திற்குரியதற்கும் ஆவிக்குரியதற்கும் வித்தியாசத்தை நீங்கள் அறிய விரும்பினால், கிறிஸ்துவில் விசுவாசத்தை அறிக்கை செய்தும், இரத்தத்தை மதிக்காத எந்தவொரு நபரும் மாம்சத்துக்குரியவர். மாம்சத்திற்குரிய மனிதன் இரத்தத்தை நம்புவதில்லை. உண்மையில், அது அவனுக்கு அவமதிப்பாகத் தோன்றுகிறது.

இது நம் சொந்த வாழ்க்கையிலும் ஒரு வகையறிதலாக இருக்கலாம். 'என் மாம்சத்தைப் புசியாமலும், என் இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை' என்ற அந்த வாக்கியம் மாம்ச சுபாவத்திற்கு பிடிக்காது. ஆனால் அதுதான் உண்மை.

இயேசுவின் இரத்தத்திற்கான கனம் மற்றும் பயபக்தியின் எண்ணங்களுடன், இறுதி அறிக்கையை செய்வோம்:

> **பரலோகத்தில் தெளிக்கப்பட்ட இயேசுவின் இரத்தத்தின் மூலம், நான் தேவனுடைய சமூகத்திற்குள், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் திடநம்பிக்கையுடன் வருகிறேன்.**

அந்த அறிக்கையை செய்யும்போது நாம் என்ன சொல்கிறோம் என்பதை நம் மனது உண்மையாகப் புரிந்துகொள்ளுமா என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் அது நமது இறுதி இலக்கான பரலோகத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பற்றிப் பேசுகிறது. இது பிரபஞ்சத்தில் மிகவும் புனிதமான இடமாகும்.

# அத்தியாயம் 16
# முடிவுரை

இந்தப் புத்தகம் முடிவிற்கு வரும்போது, இயேசுவின் இரத்தத்தைப் பற்றிய அறிவிப்புகளை ஒன்றாக இணைத்து, அவற்றை ஒரே பிரகடனமாக மாற்ற விரும்புகிறேன்:

இயேசுவின் இரத்தம் நமக்காக என்ன செய்கிறது என்று வார்த்தை கூறுகிறதோ அதைத்  தனிப்பட்ட முறையில் அறிக்கை செய்யும் போது நாம் சாத்தானை ஜெயிக்கிறோம்.

**இயேசுவின் இரத்தத்தினாலே நான் சாத்தானின் கையிலிருந்து மீட்கப்பட்டுள்ளேன். இயேசுவின் இரத்தத்தால் என் பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுள்ளது.**

**நான் வெளிச்சத்தில் நடக்கும்போது, இயேசுவின் இரத்தம் எல்லா பாவங்களிலிருந்தும் இப்போதும் தொடர்ந்தும் என்னைச் சுத்திகரிக்கிறது.**

**இயேசுவின் இரத்தத்தினால், நான் நியாயப்படுத்தப்பட்டு, விடுதலையாக்கப்பட்டு, குற்றமற்றவன் என்று தீர்க்கப்பட்டு, நீதிமானாக எண்ணப்பட்டு, பாவமே செய்யாதது போல் நீதிமானாக்கப்பட்டுள்ளேன்!**

**என் சரீரம் இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்ட, பரிசுத்தமாக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் ஆலயம். எனவே, பிசாசுக்கு என்னில் இடமில்லை, என் மீது அதிகாரமில்லை. என் சரீரம் தேவனுக்காக, தேவன் என் சரீரத்திற்காக.**

**கர்த்தராகிய இயேசுவே, நான் உமது இரத்தத்தைப் பெறும்போது, அதில் உமது ஜீவனை, தேவனுடைய ஜீவனைப் பெறுகிறேன்–தெய்வீக, நித்திய, முடிவில்லாததுமான ஜீவன்.**

**நான் ஜெபிக்க முடியாதபோதும், உமது இரத்தம் பரலோகத்தில் எனக்காக மன்றாடுகிறதற்காக உமக்கு நன்றி ஆண்டவரே.**

**பரலோகத்தில் தெளிக்கப்பட்ட இயேசுவின் இரத்தத்தின் மூலம், நான் தேவனுடைய சமூகத்திற்குள், மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் திடநம்பிக்கையுடன் வருகிறேன்.**

ஜெபத்தின் போது எப்போதாவது, நீங்கள் இந்தப் பட்டியலை சோதித்து ஒவ்வொரு அறிக்கைக்கும் உங்கள் சொந்த அறிக்கையை செய்ய வேண்டும் என்று நான் பரிந்துரைக்கிறேன். ஒவ்வொரு நாளும் நீங்கள் ஜெபத்தில் நேரம் ஒதுக்கும்போது, கர்த்தருடைய சந்நிதியில் சரியான அறிக்கையை செய்ய இந்தப் பட்டியல் உங்களுக்கு உதவியாகவும் வழிகாட்டியாகவும் இருக்கும் என்று நம்புகிறோம். இந்தப் பிரகடனங்களைச் செய்வதன் மூலம், இரத்தத்தை உங்கள் வாழ்க்கையில் பூசுவீர்கள். இதை ஒரு பழக்கமாக மாற்றுவது நல்லது, மேலும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் இரத்தத்தைப் பயன்படுத்த கற்றுக்கொள்ள இது உதவும்.

## பற்றிப்பிடி

இயேசு மட்டுமே உயிரைக் கொடுப்பவர். பிசாசிடமிருந்து நம்மைத் திரும்பப் பெறுவதற்கு அவர் செலுத்திய பெரும் விலையின் மூலம் அவர் நம்மீது அளவற்ற அன்பைக் காட்டுகிறார்– அது அவருடைய ஜீவ–இரத்தம். மீட்பு, சுத்திகரிப்பு, நியாயப்படுத்துதல், பரிசுத்தமாக்குதல், ஜீவன், பரிந்துபேசுதல் மற்றும் பிரவேசம். ஏழு முறை தெளிக்கப்பட்ட இயேசுவின் இரத்தம் ஏழு விதங்களில் நமக்குள் வேலை செய்கிறது. ஆனால், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் உங்கள் சாட்சியின் வார்த்தையினாலும் நீங்கள் சாத்தானை ஜெயிக்கிறீர்கள் என்பதை நினைவில் வையுங்கள். அப்படித்தான் அவருடைய வெற்றியை உங்கள் சொந்த வாழ்க்கையில் செயல்படுத்துகிறீர்கள். இப்படித்தான் நீங்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைப் பயன்படுத்துகிறீர்கள். இந்த விஷயத்தில் உங்கள் விடாமுயற்சியே பிசாசைப் பயமுறுத்துகிறது – அதுவே உங்களுக்குத் தொடர்ந்து வெற்றியைத் தரும்.

இந்த மாதிரியான அறிக்கையை நான் முதன்முதலில் செய்ய ஆரம்பித்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நான், 'சரி, பிசாசு என்னை அடுத்து எங்கே அடிப்பான்?' என்று நினைத்தேன். அறிக்கை செய்யாத சிலரை நான் அறிவேன், ஏனென்றால் அவர்கள் அவ்வாறு செய்யும்போது என்ன நடக்கும் என்று பயப்படுகிறார்கள். ஆனால் நண்பரே, அது பிசாசின் ஆட்டம்தான். அதுவே அவனுடைய எல்லைக்கு அப்பால் உங்களைக் கொண்டுசெல்லும் செயலைச் செய்வதிலிருந்து உங்களைத் தடுப்பதற்கான அவனுடைய வழி. இரத்தத்தின் பலன்களை நீங்கள் பெறுவது உங்கள் சாட்சியின் வார்த்தையால் மட்டுமே.

நீங்கள் உங்கள் சாட்சியை ஒருமுறை செய்கிறீர்கள், உங்களுக்கு விரோதமாக நரகம் கட்டவிழ்க்கப்படுகிறது. சரி. தேவனுக்கு ஸ்தோத்திரம்! மறுபடியும் சொல்லுங்கள். "நம்முடைய அறிக்கையைப் பற்றிக்கொள்ளக்கடவோம்" (எபி. 4:14) என்று வேதம் சொல்கிறது.

பின்னர், உங்களுக்கு விரோதமாக நரகம் கட்டவிழ்க்கப்படும் போது, வார்த்தை கூறுகிறது, ‘அறிக்கை செய்வதில் அசைவில்லாதவர்களாக இருக்கக் கடவோம்’ (எபி. 10:23). எனவே, நாம் தொடர்ந்து அறிக்கை செய்கிறோம். இது உங்கள் உணர்வுகளைச் சார்ந்தது அல்ல. இது சூழ்நிலைகள் அல்லது அறிகுறிகளைச் சார்ந்தது அல்ல. உங்கள் அறிக்கை கடவுளுடைய வார்த்தையைப் போலவே உண்மையானது. அது நித்திய உண்மை. தேவனுடைய வார்த்தை என்றென்றும் பரலோகத்தில் நிலைத்திருக்கிறது.

## மூன்று நித்திய, மாறாத சக்திகள்

முடிவாக, வார்த்தையின் அறிக்கைக்கும், இரத்தத்திற்கும், பரிசுத்த ஆவியானவரின் செயல்பாட்டிற்கும் இடையே ஒரு தொடர்பு இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் பரிசுத்த ஆவியை விட்டுவிட முடியாது. இன்னும் அதிகமாக, இரத்தத்திற்கு சாட்சியமளிப்பதன் மூலம், நீங்கள் பரிசுத்த ஆவியானவரை செயல்பாட்டுக்கு கொண்டு வருகிறீர்கள்.

1 யோவான் 5:6 இல், யோவான் இயேசுவைப் பற்றிப் பேசுகிறார், அவர் கூறுகிறார்:

> இயேசுகிறிஸ்துவாகிய இவரே ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர்; ஜலத்தினாலே மாத்திரமல்ல, ஜலத்தினாலும் இரத்தத்தினாலும் வந்தவர். ஆவியானவர் சத்தியமாகையால், ஆவியானவரே சாட்சிகொடுக்கிறவர்.

இதைப் பற்றி விரிவாகச் சொல்ல எனக்கு நேரமில்லை, ஆனால் நான் புரிந்து கொண்டபடி, இங்கே குறிப்பிடப்பட்டுள்ள தண்ணீர் என்பது தேவனுடைய வார்த்தை என்று பொருள். இயேசு பெரிய போதகராக

வந்து, வார்த்தையைப் போதித்து, வார்த்தைஎன்னும் தண்ணீரால் கழுவுவதன் மூலம் நம்மைப் பரிசுத்தப்படுத்தி, சுத்திகரிக்கிறார். அவர் பெரிய மீட்பராக வந்து, மீட்பின் கிரயமாக அவரது இரத்தத்தை சிந்தினார். இவையே அவரது மீட்பின் ஊழியத்தின் இரண்டு முக்கிய அம்சங்களாகும்–இரத்தத்தால் மீட்பது, மற்றும் வார்த்தையினால் கழுவுவதன் மூலம் பரிசுத்தப்படுத்துதல் மற்றும் சுத்திகரித்தல். அவர் வார்த்தையால் மட்டும் வரவில்லை. அதாவது அவர் ஆசிரியராக மட்டும் வரவில்லை. ஆனால் பலருக்காக தம்முடைய ஜீவனை மீட்கும் பொருளாக கொடுக்கும் இரட்சகராகவும் அவர் வந்தார். இரட்சகராக வந்த இந்தப் பாத்திரம் எந்த வகையிலும் அவர் போதகராக வந்த மற்ற ஊழியத்தை ஒதுக்கி வைக்காது.

எபேசியர் 5:26–27 திருச்சபையின் சூழலில் இயேசுவின் இந்த இரட்டை ஊழியத்திற்கு சாட்சியமளிக்கிறது:

> தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர் முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறைதிரை முதலானவைகள் ஒன்றும் இல்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும் தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார்.

இங்கே நமக்கு இயேசுவின் இரட்டை ஊழியம் உள்ளது—வார்த்தையின் தண்ணீர் மற்றும் மீட்பின் சிந்தப்பட்ட இரத்தத்தால்.

## பரிசுத்த ஆவியானவர் துணை

நாம் வார்த்தையையும் இரத்தத்தையும் ஒன்றாகக் கொண்டுவரும்போது, ஆவியானவர் சத்தியமாக இருப்பதால்,

தேவனுடைய ஆவி சாட்சியமளிக்கிறது என்று அது கூறுகிறது. நீங்களும் நானும் வார்த்தையைப் பயன்படுத்தத் தொடங்கும்போது, இரத்தம் என்ன செய்கிறது என்று வார்த்தை கூறுகிறது, ஆவியானவர் நம்மிடம் வந்து சத்தியத்திற்கு சாட்சியமளிக்கிறார். நமது சிறந்த வார்த்தைகள் அனைத்தும் நல்ல மத மொழியாகவே இருக்கும். எல்லாமே நல்ல மொழியாக இருக்கலாம், உபதேச ரீதியாக சரியானதாக இருக்கலாம். ஆனால் பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கும் வரை அது எதையும் செய்யாது. பரிசுத்த ஆவியானவர் சாட்சி கொடுக்கும்போது, அது தவிர்க்கமுடியாததாகிறது.

அத்தியாயம் 12ல் நான் கூறிய கருத்து உங்களுக்கு நினைவிருக்கிறதா? நான் இந்த வாக்கியத்தை சொன்னேன்: ‘பரிசுத்த ஆவியானவர் இல்லாவிட்டால் இவை எதுவும் செயல்படாது.’ நீங்கள் இதைச் செய்தால், அது தானாகவே வேலை செய்யும் என்பது போல, கிறிஸ்தவ வாழ்க்கையில் சிறிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் இல்லை என்பதை நீங்கள் உணர முடியும் என்று நம்புகிறேன். பரிசுத்த ஆவியின்றி எதுவும் செயல்படாது. ஆனால் நீங்கள் வார்த்தையின் தண்ணீருக்கும் இரத்தத்திற்கும் சாட்சியமளிப்பதன் மூலம் பரிசுத்த ஆவியானவரை செயலாற்றக்கொண்டு வரமுடியும், ஏனென்றால் ஆவியானவர் சாட்சி கொடுக்கிறார். பிறகு, உங்கள் சார்பாக மூன்று நித்திய, மாறாத சக்திகள் செயல்படுகின்றன–வார்த்தை, இரத்தம் மற்றும் ஆவியானவர்.

பிரசங்கி 4:12 – இங்கே மிகப்பெரிய பயன்பாடு உள்ளது:

> ...முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது.

இரத்தம் என்ன செய்கிறது என்று வார்த்தை கூறுகிறதோ அதற்கு நீங்கள் சாட்சியமளிக்கத் தொடங்கும் போது, சாட்சி சொல்ல ஆவியானவர் உங்கள் அருகில் வருகிறார். அப்போது உங்களிடம் முப்புரி நூல் உள்ளது—வார்த்தை, இரத்தம் மற்றும் பரிசுத்த ஆவியானவர்.

எஞ்சியிருப்பது இயேசுவின் விலைமதிப்பற்ற இரத்தத்தின் மூலம் அவர் நமக்காகச் செய்த அனைத்திற்காகவும் நாம் அவருக்கு நன்றியும் புகழும் செலுத்த வேண்டும். இந்தப் புத்தகத்தில் உள்ள போதனையை முடிப்பதற்கு அதைச் செய்வோம்.

**அன்புள்ள ஆண்டவர் இயேசுவே,**

**நான் உமக்கு எல்லா நன்றியையும் துதியையும் செலுத்துகிறேன். இந்தப் புத்தகத்தில் நாங்கள் விவாதித்த அனைத்தையும் நாங்கள் பெறுவதற்கு உமது உயிர் இரத்தத்தை ஊற்ற நீர் ஆயத்தமாக இருந்தீர். உமது விலைமதிப்பற்ற இரத்தத்தின் மூலம் எங்களுக்காக நீர் செய்த அனைத்திற்காகவும் நாங்கள் உம்மை ஆசீர்வதிக்கிறோம், உம்மை துதிக்கிறோம். ஆமென்.**

# எழுத்தாளரைப் பற்றி

டெரிக் பிரின்ஸ் (1915–2003) பிரிட்டிஷ் பெற்றோருக்கு இந்தியாவில் பிறந்தார். இங்கிலாந்தின் ஈட்டன் கல்லூரி மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கிரேக்கம் மற்றும் லத்தீன் மொழி அறிஞராகப் படித்த அவர், கிங்ஸ் கல்லூரியில் பண்டைய மற்றும் நவீன தத்துவத்தில் பெல்லோஷிப்பைப் பெற்றார். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் மற்றும் ஜெருசலேமில் உள்ள எபிரேய பல்கலைக்கழகத்தில் எபிரேய மற்றும் அராமிய மொழிகளை உள்ளிட்ட பல நவீன மொழிகளைக் கற்றார்.

இரண்டாம் உலகப் போரில் பிரிட்டிஷ் ராணுவத்தில் பணியாற்றிய போது, அவர் வேதத்தைப் படிக்கத் தொடங்கினார் மற்றும் இயேசு கிறிஸ்துவுடன் ஒரு வாழ்க்கையை மாற்றும் அனுபவத்தைப் பெற்றார். இந்த சந்திப்பில் இருந்து அவர் இரண்டு முடிவுகளுக்கு வந்தார்: முதலில், இயேசு கிறிஸ்து உயிருடன் இருக்கிறார்; இரண்டாவதாக, பைபிள் ஒரு உண்மையான, பொருத்தமான, தற்காலத்திற்கு ஏற்ற புத்தகம். இந்த முடிவுகள் அவருடைய வாழ்க்கையின் முழு போக்கையும் மாற்றியது, பின்னர் அவர் பைபிளைப் படிப்பதிலும் கற்பிப்பதிலும் தன்னை அர்ப்பணித்தார்.

பைபிளையும் அதன் போதனைகளையும் தெளிவாகவும் எளிமையாகவும் விளக்கும் டெரிக்கின் முக்கிய வரம், மில்லியன் கணக்கான உயிர்களில் நம்பிக்கையின் அடித்தளத்தை உருவாக்க உதவியது. அவரது சபை பிரிவு சார்பற்ற, பிரிவினைவாதம் இல்லாத அணுகுமுறை அவரது போதனையை அனைத்து இன மற்றும் மத பின்னணியிலிருந்தும் மக்களுக்குச் சமமாக பொருத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் ஆக்கியுள்ளது.

அவர் 80 க்கும் மேற்பட்ட புத்தகங்கள், 600 ஆடியோ மற்றும் 110 வீடியோ போதனைகளின் ஆசிரியர் ஆவார், அவற்றில் பல, 100க்கும்

மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. அவரது தினசரி வானொலி ஒலிபரப்பு அரபி, சீன (அமோய், கான்டோனீஸ், மாண்டரின், ஷாங்காயீஸ், ஸ்வாடோ), குரோஷியன், ஜெர்மன், மலகாஸி, மங்கோலியன், ரஷ்யன், சமோவான், ஸ்பானிஷ், பஹாசா இந்தோனேசிய மற்றும் டோங்கன் மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. வானொலி நிகழ்ச்சி தொடர்ந்து உலகம் முழுவதும் பலரைச் சென்றடைகிறது.

டெரிக் பிரின்ஸ் மினிஸ்ட்ரீஸ் அவரது போதனைகளுடன் 140க்கும் மேற்பட்ட நாடுகளில் உள்ள விசுவாசிகளை சென்றடைவதைத் தொடர்கிறது, 'இயேசு திரும்பும் வரை' தொடர வேண்டும் என்ற ஆணையை நிறைவேற்றுகிறது. ஆஸ்திரேலியா, கனடா, சீனா, பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, மலேசியா, மியான்மர், நேபாளம், நெதர்லாந்து, நியூசிலாந்து, நார்வே, பாகிஸ்தான், ரஷ்யா, தென்னாப்பிரிக்கா, சுவிட்சர்லாந்து, யுனைடெட் கிங்டம், அமெரிக்கா மற்றும் பசிபிக் தீவுகள் ஆகிய நாடுகளில் உள்ள முதன்மைப் பணிகள் உட்பட, உலகெங்கிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட டெரிக் பிரின்ஸ் அலுவலகங்கள் மூலம் இது செயல்படுத்தப்படுகிறது. இவை மற்றும் பிற உலகளாவிய இருப்பிடங்களைப் பற்றிய தற்போதைய தகவலுக்கு, இங்கு செல்க: www.derekprince.com

**உங்கள் ஜெப விண்ணப்பங்கள் அனுப்ப, புத்தகங்கள் வாங்க மற்றும் இதர காரியங்களுக்கு நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**

For orders, prayer requests & other enquiries please contact :

DEREK PRINCE MINISTRIES - INDIA
C/o DPM EXIM
A-40, Anna Nagar Main Road,
Sivapragasam Salai, Tennur,
Trichy - 620 017, Tamil Nadu, India.
E-mail: admin@derekprince.in
Phone : 00-91-98430 55414 / 95855 38201

**உங்கள் காணிக்கைகளையும், நன்கொடைகளையும் மேலிருக்கும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

You can also send your offerings and contributions towards this ministry to the above address.

**Visit our WEBSITE:**

***www.derekprince.com/ta***